UNIVERSITY OF MADRAS

# INTERMEDIATE EXAMINATION

## IN ARTS & SCIENCE

1949

Part II—Tamil

## SELECTIONS IN POETRY

PRINTED AT
HADDON & CO., 49, BADRIAN ST, MADRAS.
1947

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 111050
EGMORE, MADRAS-600 008

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| I | புறநானூறு | ... ... | 1 |
| | குறிப்புரை | ... ... | 66 |
| II | திருக்குறள் | ... ... | 6 |
| | குறிப்புரை | ... ... | 67 |
| III | மணிமேகலை | ... ... | 11 |
| | குறிப்புரை | ... .... | 73 |
| IV | கலிங்கத்துப்பரணி | ... ... | 16 |
| | குறிப்புரை | ... ... | 78 |
| V | கம்பராமாயணம் | ... ... | 18 |
| | குறிப்புரை | ... ... | 79 |
| VI | வில்லிபுத்தூரார் பாரதம் | ... .... | 25 |
| | குறிப்புரை | ... ... | 82 |
| VII | திருவிளையாடற் புராணம் | ... .... | 38 |
| | குறிப்புரை | ... ... | 89 |
| VIII | ஸ்ரீமத் பாகவத புராணம் | ... ... | 45 |
| | குறிப்புரை | ... .... | 92 |
| IX | தேம்பாவணி | .... .... | 57 |
| | குறிப்புரை | ... ... | 93 |
| X | திருக்குற்றாலக் குறவஞ்சி | ... ... | 61 |
| | குறிப்புரை | ... ... | 95 |

# புறநானூறு

புறநானூறு எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று. எட்டுத் தொகை யாவன; நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பனவாம்.

புறநானூறு, புறம், புறப்பாட்டு எனவும் வழங்கும். 400 அகவற் பாக்களை யுடைமையின் இது புறநானூறு என்னும் பெயர் பெற்றது.

புறநானூறு பொருளால் தொகுக்கப் பெற்றது. இங்கே பொருள் என்றது அகப்பொருள், புறப்பொருள் என்னும் இரண்டனுள் புறப் பொருளை என்க. புறப்பொருளில் அறமும் பொருளும் அடங்கும்.

'இந்நூலால், பண்டைக்காலத்து இத்தமிழ்நாட்டிலிருந்த சேர சோழ, பாண்டியர்களாகிய முடியுடை வேந்தர், சிற்றரசர், அமைச்சர், சேனைத் தலைவர், வீரர் முதலிய பலருடைய சரித்திரங்களும், கடை ஏழு வள்ளல்களின் சரித்திரங்களும், கடைச்சங்கப் புலவர் பலருடைய வரலாறுகளும், அக்காலத்துள்ளாருடைய நடை முதலியனவும் இன்னும் பற்பலவும் நன்கு புலப்படும். இந்நூற் செய்யுட்களால் பாடப்பட்டவர்கள் ஒரு காலத்தாரல்லர்; ஒரு குலத்தாரல்லர்; ஒரு சாதியாரல்லர்; ஓரிடத் தாருமல்லர். பாடியவர்களும் இத்தன்மையரே. இவர்களில் அந்தணர் சிலர்; அரசர் பலர்; வணிகர் பலர்; வேளாளர் பலர்; பெண்பாலாரு முளர்.'

# புறநானூறு

1. புலவரை யிறந்த புகழ்சா றோன்ற
னிலவரை யிறந்த குண்டுகண் ணகழி
வான்றோய் வன்ன புரிசை விசும்பின்
மீன்பூத் தன்ன வுருவ ஞாயிற்
கதிர்நுழை கல்லா மரம்பயில் கடிமிளை
யருங்குறும் புடுத்த கானப்பே ரெயில்
கருங்கைக் கொல்லன் செந்தீ மாட்டிய
விரும்பு ணீரினு மீட்டற் கரிதென
வேங்கை மார்ப னிரங்க வைகலு
மாடுகொளக் குழைந்த தும்பைப் புலவர்
பாடுதுறை முற்றிய கொற்ற வேந்தே
யிகழுந ரிசையொடு மாயப்
புகழொடு விளங்கிப் பூக்கநின் வேலே.

திணை - வாகை; துறை - அரசவாகை.

கானப் பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதியை ஐயூர் மூலங்கிழார் பாடியது.

2. நளியிரு முந்நீர் நாவா யோட்டி
வளிதொழி லாண்ட வுரவோன் மருக
களியியல் யானைக் கரிகால் வளவ
சென்றமர்க் கடந்தநின் னாற்ற றோன்ற
வென்றோய் நின்னுறு நல்ல னன்றே
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப்புக ழுலக மெய்திப்
புறப்புண் ணாணி வடக்கிருந் தோனே.

திணை - வாகை; துறை - அரசவாகை.

சோழன் கரிகாற் பெருவளத்தானை வெண்ணிக்குயத்தியார் பாடியது.

3. அன்னச் சேவ லன்னச் சேவ
லாடுகொள் வென்றி யடுபோ ரண்ண
னாடுதலை யளிக்கு மொண்முகம் போலக்
கோடுகூடு மதிய முகிழ்நிலா விளங்கு
மையன் மாலையாங் கையறு பினையக்
குமரியம் பெருந்துறை யயிரை மாந்தி
வடமலைப் பெயர்குவை யாயி னிடையது
சோழ நன்னாட்டுப் படினே கோழி

யுயர்நிலை மாடத்துக் குறும்பறை யசைஇ
வாயில் விடாது கோயில் புக்கெம்
பெருங்கோக் கிள்ளி கேட்க விரும்பிசி
ராந்தை யடியுறை யெனினே மாண்டநி
னின்புறு பேடை யணியத்த
னன்புறு நன்கல நல்குவ னினக்கே.

திணை - பாடாண்டிணை; துறை - இயன்மொழி.

கோப்பெருஞ் சோழனைப் பிசிராந்தையார் பாடியது.

4. வலம்படு வாய்வா ளேந்தி யொன்னார்
களம்படக் கடந்த கழறொடித் தடக்கை
யார்கலி நறவி னதியர் கோமான்
போரடு திருவிற் பொலந்தா ரஞ்சி
பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீல மணிமிடற் றொருவன் போல
மன்னுக பெரும நீயே தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா
தாத னின்னகத் தடக்கிச்
சாத னீங்க வெமக்கீத் தனையே.

திணை - பாடாண்டிணை; துறை - வாழ்த்தியல்.

அதியமான் நெடுமானஞ்சியை ஔவையார் நெல்லிப்பழம் பெற்றுப் பாடியது.

5. இவ்வே, பீலி யணிந்து மாலை சூட்டிக்
கண்டிர ணோன்காழ் திருத்திநெய் யணிந்து
கடியுடை வியனக ரவ்வே யவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில மாதோ வென்று
முண்டாயிற் பதங்கொடுத்
தில்லாயி னுடனுண்ணு
மில்லோ ரொக்கற் றலைவ
னண்ணெலெங் கோமான் வைந்நுதி வேலே.

திணை - பாடாண்டிணை; துறை - வாண் மங்கலம்.

அதியமான் நெடுமானஞ்சி தூதுவிடத் தொண்டைமானுழைச் சென்ற ஔவைக்கு அவன் படைக்கலக் கொட்டில் காட்ட அவர் பாடியது.

6. பாரி பாரி யென்றுபல வேத்தி
யொருவற் புகழ்வர் செந்நாப் புலவர்

பாரி யொருவனு மல்லன்
மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே.

திணை - பாடாண்டிணை; துறை - இயன்மொழி.

வேள்பாரியைக் கபிலர் பாடியது.

7 அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொண் முரசின் மூவிரு முற்றினு
முழவ ருழாதன நான்குபய னுடைத்தே
ஒன்றே, சிறியிலை வெதிரி னெல்விளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே
நான்கே, அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றந் தேன்சொரி யும்மே
வான்க ணற் றவன் மலையே வானத்து
மீன்க ணற்றதன் சுனையே யாங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினுந்
தாளிற் கொள்ளலிர் வாளிற் றூரலன்
யானறி குவனது கொள்ளு மாறே
சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
விரையொலி கூந்தனும் விறலியர் பின்வர
வாடினிர் பாடினிர் செலினே
நாடுங் குன்று மொருங்கீ யும்மே.

திணை - நொச்சி; துறை - மகண்மறுத்தல்.

வேள்பாரியைக் கபிலர் பாடியது.

8. கடந்தடு தானை மூவிருங் கூடி
யுடன்றனி ராயினும் பறம்புகொளற் கரிதே
முந்நூ றூர்த்தே தண்பறம்பு நன்னாடு
முந்நூ றூரும் பரிசிலர் பெற்றனர்
யாமும் பாரியு முளமே
குன்று முண்டுநீர் பாடினிர் செலினே.

திணை - நொச்சி; துறை - மகண்மறுத்தல்.

மூவேந்தரும் பறம்புமுற்றி யிருந்தாரைக் கபிலர் பாடியது.

9. அற்றைத் திங்க ளவ்வெண் ணிலவி
னெந்தையு முடையோமெங் குன்றும் பிறர்கொளா
ரிற்றைத் திங்க ளிவ்வெண் ணிலவின்

வென்றெறி முரசின் வேந்தரெங்
குன்றுங் கொண்டார்யா மெந்தையு மிலமே.

திணை - பொதுவியல்; துறை - கையறு நிலை.
பாரி மகளிர் பாடியது.

10. மழையணி குன்றத்துக் கிழவ னாளு
மிழையணி யானை யிரப்போர்க் கீயுஞ்
சுடர்விடு பசும்பூட் சூர்ப்பமை முன்கை
யடுபோ ரானா வாத னோரி
மாரி வண்கொடை காணிய நன்றுஞ்
சென்றது மன்னெங் கண்ணுளங் கடும்பே
பனிநீர்ப் பூவா மணிமிடை குவளை
வானார்த் தொடுத்த கண்ணியுங் கலனும்
யானை யினத்தொடு பெற்றனர் நீங்கிப்
பசியா ராகன் மாறுகொல் விசிபிணிக்
கூடுகொ ளின்னியங் கறங்க
வாடலு மொல்லார்தம் பாடலு மறந்தே.

திணை - பாடாண்டிணை; துறை - இயன்மொழி
வல்வில்லோரியை வன்பரணர் பாடியது.

---

# திருக்குறள்

திருக்குறள் என்னும் அரிய அறநூலைச் செய்த ஆசிரியர் திருவள்ளுவர் ஆவர். இவர் இந்நூலை, அறத்துப்பால், பொருட்பால் காமத்துப் பால், என மூன்று பிரிவாகச் செய்துள்ளார். அதனால், இந்நூலுக்கு 'முப்பால்' என ஒரு பெயர் வழங்கும். இந்நூல் 133 அதிகாரங்களை யுடையது; ஒவ்வோர் அதிகாரத்திற்கும் பப்பத்துக் குறள் வெண்பாக்களாக 1330 செய்யுட்களைக் கொண்டது. அவற்றுள், அறத்துப்பால், கடவுள் வாழ்த்து முதலாக 38 அதிகாரங்களையும், பொருட்பால் இறைமாட்சி முதலாக 70 அதிகாரங்களையும், காமத்துப்பால், தகையணங் குறுத்தல் முதலாக 25 அதிகாரங்களையும் உடையன.

இந்நூல் தோன்றிய காலம் கடைச்சங்கத்து இறுதிக் காலம் என்ப. இந்நூல் மணிமேகலைக்கு முற்பட்டது என்பது திண்ணம்.

'ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி' என்பதனாலும், 'பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்' என் பதனாலும் இந்நூல் சொல்லழகும், பொருளாழமும் உடையதாதல் பெறப் படும்.

# திருக்குறள்

## இல்லறவியல்

### இல்வாழ்க்கை

1. இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றி னின்ற துணை.

2. துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான் றுணை.

3. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லானென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை.

4. பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்.

5. அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது.

6. அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்.

7. இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை.

8. ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரி னோன்மை யுடைத்து.

9. அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று.

10. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்.

### வாழ்க்கைத்துணை நலம்

1. மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

2. மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினு மில்.

3. இல்லதெ னில்லவண் மாண்பானா லுள்ளதெ
னில்லவண் மாணாக் கடை.

4. பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்

5. தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை.

6. தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

7. சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை.

8. பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழு முலகு.

9. புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
னேறுபோற் பீடு நடை.

10. மங்கல மென்ப மனைமாட்சி மற்றத
னன்கல நன்மக்கட் பேறு.

## புதல்வரைப் பெறுதல்.

1. பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.

2. எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

3. தம்பொரு ளென்பதம் மக்க ளவர்பொருள்
டந்தம் வினையான் வரும்.

4. அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்.

5. மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு.

6. குழலினிதி யாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்.

7. தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

8. தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது.

9. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்.

10. மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்.

## அன்புடைமை

1. அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூச றரும்.

2. அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு.

3. அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு.

4. அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு.

5. அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்றா ரெய்துஞ் சிறப்பு.

6. அறத்திற்கே யன்புசா ரென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை.

7. என்பி லதனை வெயில் போலக் காயுமே
யன்பி லதனை யறம்.

8. அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று.

9. புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
யகத்துறுப் பன்பி லவர்க்கு.

10. அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு.

## விருந்தோம்பல்

1. இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

2. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

3. வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று.

4. அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில்

5. வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம்.

6. செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா
னல்விருந்து வானத் தவர்க்கு.

7 இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
றுணைத்துணை வேள்விப் பயன்.

8. பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.

9. உடைமையு ளின்மை விருந்தோம்ப லோம்பா
மடமை மடவார்க ணுண்டு.

10. மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

# மணிமேகலை

"சிலப்பதிகாரக் கதாநாயகனுகிய கோவலனுக்கு மாதவியினிடம் பிறந்த மணிமேகலையின் வரலாற்றைக் கூறுவதால் இந்நூலுக்கு "மணி மேகலை" என்ற பெயர் வழங்கலாயிற்று. இந் நூலின் பெயர் இதன் பதிகத்தில் "மணிமேகலை துறவு" எனக் காணப்படுகின்றது. மணிமேகலை தன் தந்தை யிறந்தபின் இளம் பருவத்தே இவ்வுலக வின்பத்தைத் துறந்து பௌத்த தருமங்களை யுணர்ந்து தெய்வ அநுக்கிரகத்தால் தனக்கு நேர்ந்த பல இடையூறுகளை யொழித்து அருளறம் மேற்கொண்டு உயிர்கட்குப் பசிப்பிணி யொழித்தல் முதலிய நற்செயல்களைச் செய்து பிறப்பறுத்தற்கு உரிய தவத்திற்றலைப் பட்டொழுகிய வரலாறு இந்நூலின்கண் விரித் துரைக்கப் பட்டுளது. இது காப்பியச் சுவைகள் நிரம்பப்பெற்று எளிய இனிய மொழி வளத்தால் கற்பார் உள்ளத்தைக் கனிவிக்குந் தன்மை யுடையது. இந்நூல் முப்பது காதைகளாகப் பகுத்துப் பாடப்பெற்றது.

காதை - கதை பொதி பாட்டு.

இதனை இயற்றியவர் சீத்தலைச் சாத்தனுர் என்னும் புலவராவர். சீத்தலை என்பது திரிச்சிராப்பள்ளி ஜில்லாவிலுள்ள ஒரூர். இவர் அவ்வூரி னர்; வணிக மரபினர்; பௌத்த மதத்தினர். சங்கத்தில் நூல் அரங் கேற்றும் பணி பூண்டிருந்தபோது அந்நூல்களிற் குற்றங் காணுந்தோறும் மனம் பொறுது எழுத்தாணியால் தலையில் குத்திக்கொள்வர் என்றும், குற்றமில்லாத திருவள்ளுவர் நூலைக் கேட்டதனுல் அக்குத்துத் தீர்ந்த தென்றுங் கூறுப. இதனை, "தலைக்குத்துத் தீர்வு சாத்தற்கு" என்னும் திருவள்ளுவ மாலைப் பாட்டு ஒன்று கூறுதலான் அறியலாம். இவர், கடைச்சங்கப் புலவர் நாற்பத்தொன்பதின்மரில் ஒருவர். "தண்டமிழ் ஆசான் சாத்தன்," "நன்னூற் புலவன்" என இளங்கோவடிகள் சிலப் பதிகாரத்தில் இவரைப் புகழ்வதினின்றும் இவர் பெருமை புலனுகும். இவர் மதுரையில் நெல், வரகு முதலிய கூலம் விற்றுவந்தவரென்பது மதுரைக் கூல வாணிகன் சாத்தனுர் என வழங்கும் பெயரால் வெளியாகின் றது. இளங்கோவடிகள், சேரன் செங்குட்டுவன் முதலியோர் காலத்தவர். இலங்கையில் கயவாகு என்பவன் செங்குட்டுவன் காலத்தவனுதலால், இலங்கை வரலாறு கூறும் மகா வமிசம் கொண்டு, இவர் கி. பி. இரண்டாம் நூற்றுண்டினர் என்று கொள்ளுதல் பொருந்தும்.

## ஆதிரை பிச்சையிட்ட காதை

மணிமேகலை, மணிமேகலா தெய்வத்தால் மணி பல்லவ மென்னும் தீவை யடைந்து அங்கே அமுதசுரபி யென்னும் அக்ஷயபாத்திரம் பெற்றுக் காவிரிப்பூம்பட்டினம் திரும்பியபின், பசிப்பிணி மிக்க காய சண்டிகை யென்னும் வித்தியாதர மாது அவளை யடைந்து, முதலில் "பத்தினிப் பெண்டிர் பண்புடன் இடூஉம், பிச்சை யேற்றல் பெருந்தக வுடைத்து" என்றும், அத்தகைய கற்புடைய பெண் ஆதிரை யாவாள் என்றும் கூறி னள். அது கேட்ட மணிமேகலை அவ்வாதிரையின் இல்லஞ் சென்று பிச்சையேற்றுக் காயசண்டிகையின் தீராப் பசியைத் தீர்த்ததாகிய வரலாற் றுப் பகுதி இக் காதையிற் கூறப்பட்டுளது."

# மணிமேகலை

## ஆதிரை பிச்சையிட்ட காதை

ஈங்கிவள் செய்தி கேளென விஞ்சையர்
பூங்கொடி மாதர்க்குப் புகுந்ததை உரைப்போன்
ஆதிரை கணவன் ஆயிழை கேளாய்
சாதுவன் என்போன் தகவிலன் ஆகி
அணியிழை தன்னை அகன்றனன் போகிக்
கணிகை ஒருத்தி கைத்தூண் நல்க
வட்டினும் சூதினும் வான் பொருள் வழங்கிக்
கெட்ட பொருளின் கிளைகேடு உறுதலிற்
பேணிய கணிகையும் பிறர் நலங் காட்டிக்
காணம் இலியெனக் கையுதிர்க் கோடலும்
வங்கம் போகும் வாணிகர் தம்முடன்
தங்கா வேட்கையிற் றானும் செல்வுழி
நளியிரு முந்நீர் வளிகலன் வெளவ
ஓடிமரம் பற்றி ஊர்திரை உதைப்ப
நக்க சாரணர் நாகர் வாழ்மலைப்
பக்கஞ் சார்ந்தவர் பான்மையன் ஆயினன்
நாவாய் கேடுற நன்மரம் பற்றிப்
போயினன் தன்னொடு உயிருயப் போந்தோர்
இடையிருள் யாமத்து எறிதிரைப் பெருங்கடல்
உடைகலப் பட்டாங்கு ஒழிந்தோர் தம்முடன்
சாதுவன் தானும் சாவுற்றான் என
ஆதிரை நல்லாள் ஆங்கதுதான் கேட்டு
ஊரீ ரேயோ ஒள்ளழல் ஈமம்
தாரீ ரோவெனச் சாற்றினன் கழறி
சுடலைக் கானிற் றொடுகுழிப் படுத்து
முடலை விறகின் முளியெரி பொத்தி
மிக்க என் கணவன் வினைப்பயன் உய்ப்ப
புக்குழிப் புகுவேன் என்றவள் புகுதலும்
படுத்துடன் வைத்த பாயற் பள்ளியும்
உடுத்த கூறையும் ஒள்ளெரி உறாஅது
ஆடிய சாந்தமும் அசைந்த கூந்தலிற்
சூடிய மாலையும் தொன்னிறம் வழாது
விரைமலர்த் தாமரை ஒருதனி இருந்த
திருவின் செய்யோன் போன்றினிது இருப்பத்

தீயுங் கொல்லாத் தீவினை யாட்டியேன்
யாது செய்கேன் என்றவள் ஏங்கலும்
ஆதிரை கேள்உன் அரும் பெறற் கணவனை
ஊர்திரை கொண்டாங்கு உய்ப்பப் போகி
நக்க சாரணர் நாகர் வாழ் மலைப்
பக்கஞ் சேர்ந்தனன் பல்லியாண்டு இராஅன்
சந்திர தத்தன் எனும் ஓர் வாணிகன்
வங்கம் தன்னொடும் வந்தனன் தோன்றும்
நின் பெருந்துன்பம் ஒழிவாய் நீயென
அந்தரம் தோன்றி அசரீரி அறைதலும்
ஐயரி யுண்கண் அழுதுயர் நீங்கிப்
பொய்கைபுக் காடிப் போதுவாள் போன்று
மனங்கவல் வின்றி மனையகம் புகுந்தென்
கண்மணி யனையான் கடிதீங் குறுகெனப்
புண்ணிய முட்டாள் பொழிமழை தரூஉம்
அரும்பெறல் மரபிற் பத்தினிப் பெண்டிரும்
விரும்பினர் தொழூஉம் வியப்பினள் ஆயினள்
ஆங்கவள் கணவனும் அலைநீர் அடைகரை
ஓங்குயர் பிறங்கல் ஒருமர நீழல்
மஞ்சுடை மால்கடல் உழந்தநோய் கூர்ந்து
துஞ்சுதுயில் கொள்ளவச் சூர்மலை வாழும்
நக்க சாரணர் நயமிலர் தோன்றிப்
பக்கம் சேர்ந்து பரிபுலம் பினனிவன்
தானே தமியன் வந்தனன் அளியன்
ஊனுடை யிவ்வுடம்பு உணவென்று எழுப்பலும்
மற்றவர் பாடை மயக்கறு மரபிற்
கற்றனன் ஆதலிற் கடுந்தொழில் மாக்கள்
சுற்று நீங்கி தொழுதுரை யாடி
ஆங்கவர் உரைப்போர் அருந்திறல் கேளாய்
ஈங்கு எம் குருமகன் இருந்தோன் அவன்பாற்
போந்தருள் நீயென அவருடன் போகிக்
கள்ளடு குழிசியும் கழிமுடை நாற்றமும்
வெள்ளென்பு உணங்கலும் விரவிய இருக்கையில்
எண்குதன் பிணவோடு இருந்தது போலப்
பெண்டுடன் இருந்த பெற்றி நோக்கிப்
பாடையிற் பிணித்தவன் பான்மையணுகிக்
கோடுயர் மரநிழற் குளிர்ந்த பின்னவன்
ஈங்குநீ வந்த காரணம் என்னென
ஆங்கவற்கு அலைகடல் உற்றதை உரைத்தலும்
அருந்துதலின்றி யலைகடல் உழந்தோன்

வருந்தினன் அளியன் வம்மின் மாக்காள்
நம்பிக்கு இளையளோர் நங்கையைக் கொடுத்து
வெங்களும் ஊனும் வேண்டுவ கொடுமென
அவ்வுரை கேட்ட சாதுவன் அயர்ந்து
வெவ்வுரை கேட்டேன் வேண்டேன் என்றலும்
பெண்டிரும் உண்டியும் இன்றெனின் மாக்கட்கு
உண்டோ ஞாலத்து உறுபயன் உண்டெனில்
காண்குவம் யாங்களுங் காட்டுவா யாமெனத்
தூண்டிய சினத்தினன் சொல்லெனச் சொல்லும்
மயக்குங் கள்ளும் மன்னுயிர் கோறலும்
கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்
பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்றது உண்மையின்
நல்லறஞ் செய்வோர் நல்லுல கடைதலும்
அல்லறஞ் செய்வோர் அருநரகு அடைதலும்
உண்டென உணர்தலின் உரவோர் களைந்தனர்
கண்டனை யாகெனக் கடுநகை யெய்தி
உடம்பு விட்டோடும் உயிருருக் கொண்டோர்
இடம்புகும் என்றே எமக்கீங்கு உரைத்தாய்
அவ்வுயிர் எவ்வணம் போய்ப்புகும் அவ்வகை
செவ்வனம் உரையெனச் சினவாது இதுகேள்
உற்றதை உணரும் உடலுயிர் வாழ்வுழி
மற்றைய உடம்பே மன்னுயிர் நீங்கிடில்
தடிந்தெரி ஊட்டினும் தானுண ராதெனின்
உடம்பிடைப் போனதொன்று உண்டென உணர்நீ
போனார் தமக்கோர் புக்கில் உண்டென்பது
யானே அல்லேன் யாவரும் உணர்குவர்
உடம்பீண்டு ஒழிய உயிர்பல காவதம்
கடந்துசேட் சேறல் கனவினும் காண்குவை
ஆங்கனம் போகி அவ்வுயிர் செய்வினை
பூண்ட யாக்கையிற் புகுவது தெளிநீ
என்றவன் உரைத்தலும் எரிவிழி நாகனும்
நன்றறி செட்டி நல்லடி வீழ்ந்து
கள்ளும் ஊனும் கைவிடின் இவ்வுடம்பு
உள்ளுறை வாழுயிர் ஓம்புதல் ஆற்றேன்
தமக்கொழி மரபிற் சாவுறு காறும்
எமக்கா நல்லறம் எடுத்துரை என்றலும்
நன்று சொன்னாய் நன்னெறிப் படர்குவை
உன்தனக்கு ஒல்லும் நெறியறம் உரைக்கேன்
உடைகல மாக்கள் உயிருய்ந்து ஈங்குறின்

அடுதொழில் ஒழிந்தவர் ஆருயிர் ஓம்பி
மூத்துவிளி மாவொழித்து எவ்வுயிர் மாட்டும்
தீத்திறம் ஒழிகெனச் சிறுமகன் உரைப்போன்
ஈங்கெமக் காகும் இவ்வறஞ் செய்கேம்
ஆங்குனக் காகும் அரும்பொருள் கொள்ளெனப்
பண்டும் பண்டும் கலங்கவிழ் மாக்களை
உண்டேம் அவர்தம் உறுபொருள் ஈங்கிவை
விரைமரம் மென்றுகில் விழுநிதிக் குப்பையோடு
இவையிவை கொள்கென எடுத்தனன் கொணர்ந்து
சந்திர தத்தன் என்னும் வாணிகன்
வங்கஞ் சேர்ந்ததில் வந்துடன் ஏறி
இந்நகர் புகுந்தீங்கு இவளொடு வாழ்ந்து
தன்மனை நன்பல தானமும் செய்தனன்
ஆங்கனம் ஆகிய ஆதிரை கையாற்
பூங்கொடி நல்லாய் பிச்சை பெறுகென
மனையகம் புகுந்து மணிமே கலைதான்
புனையா ஓவியம் போல நிற்றலும்
தொழுது வலங் கொண்டு துயரறு கிளவியோடு
அமுத சுரபியின் அகன்சுரை நிறைதரப்
பாரகம் அடங்கலும் பசிப்பிணி யறுகென
ஆதிரை யிட்டனள் ஆருயிர் மருந்தென்.

# கலிங்கத்துப் பரணி

கலிங்கத்து வெற்றி எனப் பொருள் படும் 'கலிங்கத்துப் பரணி என்னும் பெயர், இக்காலத்தில் கஞ்சம், ஒரிசா என்னப்படும் ஜில்லாக்கள் அடங்கிய நாடாகிய கலிங்கத்தைக் கருணாகரத் தொண்டைமான் என்னும் சேனாபதி தன் அரசனாகிய விசயதர சோழன் (கி. பி. 1070-1118) பொருட்டு வென்ற வெற்றியை அவ்வரசன் மேல் ஏற்றிச் சிறப்பித்துக் கூறும் இந்நூலுக்கு ஆயிற்று.

போரில் வெற்றி தரும் தெய்வமாகக் கருதப்படும் துர்க்கா தேவிக்கு உரிய 'பரணி என்னும் நட்சத்திரத்தின் பெயர் வெற்றியை முதலாவது குறித்து, பின், போரில் ஆயிரம் யானைகளைக் கொன்று ஒரு பெரு வீரன் பெற்ற வெற்றியைப் பலபடியாகச் சிறப்பித்துக் கூறுதற்கு இடமாக வகுத்துக் கொள்ளப்பட்ட பல பகுதிகளை யுடையதும், தோற்ற நாட்டின், அல்லது தோற்றவரின் பெயரால் பெயர் பெறுவதுமாகிய நூல் வகை ஒன்றைக் குறித்தது.

தமிழிலுள்ள எல்லாப் பரணி நூல்களிலும் இக் கலிங்கத்துப் பரணியே சிறந்தது. பல்வித ஓசை விகற்பங்களையும், பல்விதச் சுவைகளையும் நிரம்பப்பெற்ற இந்நூலின் செய்யுள்கள் கற்பார் கேட்பார் காதுகளையும் மனங்களையும் பெரிதும் கவரத்தக்கன. எட்டுத் தொகை, பத்துப் பாட்டு, பெரிய புராணம் முதலிய நூல்களைப் போலவே இக் கலிங்கத்துப்பரணியும் சரித்திர ஆராய்ச்சிக்கு இன்றியமையாத நூலாகும்.

இவ்வரிய நூலை இயற்றியருளிய பெரியார் சயங்கொண்டார் என்பவர். இவர் சோழ நாட்டிலுள்ள தீபங்குடி என்னும் சமணர் ஊரில் உள்ளவர். இவர் பாடி யருளியதாகச் சொல்லப்படுகின்ற 'தீபங்குடிப் பத்து' என்னும் அழகிய பதிகத்தால் இவரும் சமணரே என்பது தெரிகின்றது. சமணரும் இவரைத் தம் சமயத்தினராகவே சொல்லி வருகின்றார். ஆயினும், இப்பரணியின் கடவுள் வாழ்த்து முதலியவற்றை நோக்கின், இவர் சைவராகத் தோன்றுகின்றார். ஆகையால், இவர் சைவராக இருந்து சமணர் ஆனவரோ, சமணராக இருந்து சைவர் ஆனவரோ, அல்லது சைவ பரமான செய்யுள்கள் பின்னர்ச் சேர்க்கப்பட்டனவோ என எண்ணுதற்கு இடம் உண்டாகின்றது. 'இசையாயிரம்', 'காரானை விழுப்பதரையர் வளமடல்' என்னும் வேறு இரு நூல்களும் இவர் இயற்றினர் என்பர். சயங்கொண்டார் காலமும் விசயதரன் காலமே.

இப்பரணியின் பகுதிகளாவன: கடவுள் வாழ்த்து, கடை திறப்பு, காடு பாடியது, கோயில் பாடியது, தேவியைப் பாடியது, பேய்களைப் பாடியது, இந்திரசாலம், இராச பாரம்பரியம், பேய் முறைப்பாடு, அவதாரம், காளிக்குக் கூளி கூறியது, களங் காட்டியது, கூழ் அடுதல்.

# போர்

1. எடுமெடு மெடுமென வெடுத்ததோ
 ரிகலொலி கடலொலி யிகக்கவே
விடுவிடு விடுபரி கரிக் குழாம்
 விடும்விடு மெனுமொலி மிகைக்கவே

2. வெருவர வரிசிலை தெறித்த நாண்
 விசைபடு திசைமுகம் வெடிக்கவே
செருவிடை யிளையவர் தெழித்த தோர்
 தெழியுல குகள்செவி டெடுக்கவே

3. எறிகட லொடுகடல் கிடைத்தபோ
 லிருபடை களுமெதிர் கிடைக்கவே
மறிதிரை யொடுதிரை மலைத்தபோல்
 வருபரி யொடுபரி மலைக்கவே

4. கனவரை யொடுவரை முனைத்த போற்
 கடகரி யொடுகரி முனைக்கவே
யினமுகி லொடுமுகி லெதிர்த்தபோ
 லிரதமு மிரதமு மெதிர்க்கவே

5. பொருபுலி புலியொடு சிலைத்தபோற்
 பொருபட ரொடுபடர் சிலைக்கவே
யரியினொ டரியின மடர்ப்ப போ
 லரசரு மரசரு மடர்க்கவே

6. விளைகனல் விழிகளின் முளைக்கவே
 மினலொளி கனலிடை பிறக்கவே
வளைசிலை யுருமென விடிக்கவே
 வடிகணை நெடுமழை சிறக்கவே

7. குருதியி னதிவெளி பரக்கவே
 குடர்நுரை நுரையென மிதக்கவே
கரிதுணி படுமுட லடுக்கியே
 கரையென விருபுடை கிடக்கவே.

---

# கம்பராமாயணம்

கம்பர் சோழ மண்டலத்திலுள்ள திருவழுந்தூரிலே உவச்சர் குலத்தில் ஆதித்தர் என்பவருக்குப் புதல்வராய்த் தோன்றி அக் காலத்திற் பெரும் செல்வரும் கொடையாளருமாய் விளங்கிய வெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலைச் சார்ந்து அவரால் ஆதரிக்கப் பெற்று வளர்ந்து புலமை முற்றிச் சிறப்பெய்தியவர். கம்பர் என்னும் பெயர் ஏகம்பர் என்பதன் முதற்குறை என்பாரும், இவர் கம்பங் கொல்லை காத்தமையாற் பெற்ற பெயரென்பாரும், இவர் பிறந்த குலத்தினராகிய காளி கோவிற் பூசனை புரியும் உவச்சர்கட்கு வழங்குவதொரு பட்டப்பெய ரென்பாரும், பிறவாறு கூறுவாருமாய் பல திறத்தினராவர். ஏகம்பர் என்னும் சிவ பிரான் திருப்பெயராயின் அஃது இவர்க்குக் குழவிப் பருவத்தில் இடப் பெற்ற இயற்பெயராதல் வேண்டும். வேறு காரணம் பற்றி வந்ததேல் சிறப்புப்பெயராகும். 'கம்பநாடன், என்றும், 'கம்ப நாடுடைய வள்ளல்' என்றும் இவர் கூறப்படுதலின் நாடு பற்றி வந்த பெயரென்னலும் பொருத்த மாகவே தோன்றுகின்றது.''

''கல்வியிற் பெரியன் கம்பன்'', ''கவிச்சக்கரவர்த்தி'', ''விருத்தமென் னும் ஒண்பாவிலுயர் கம்பன்'', ''கம்பன் வீட்டுக் கட்டுத்தறியுங் கவிதை சொல்லும்'' என்னும் புகழ்ச்சியுரைகள் கம்பருடைய புலமைப் பெருக்கை யும் கவிதைத் திறத்தையும் விளக்குவனவாம்.''

''ராமாயணம் என்பது முதனூலால் வந்த பெயர். ராம அயநம் என்னும் சொற்றொடர் வடமொழி இலக்கண விதிப்படி ராமாயணம் என் றாயிற்று. இராமன் என்பதற்கு அழகன் என்பதும், மகிழ்விப்பவன் என் பதும் பொருளாம். அயநம் என்பது இடம் என்னும் பொருளது. இரா மனை அறிதற்கு இடனாயுள்ளது அல்லது இராமனை விடயமாக உள்ளது என்பது இராமாயணம் என்பதன் பொருளாகும். ராம அயநம் எனப் பிரித்துச் சிறையிருந்தாள் ஏற்றம் கூறுவது என்பாருமுளர்.

'கம்பர் வடமொழியில் ஆதி காவியம் எனப்படுவதும், வான்மீகி யால் இயற்றப் பெற்றதுமாகிய இராமாயணத்தை முதனூலாகக் கொண்டா ரெனினும், தமிழ் வழக்கிற் கேற்பக் கதைப் பகுதிகள் பலவற்றை மாற்றி யும், சிலவற்றை விரித்தும், சில கதைகளை விடுத்தும் தமது காப்பியத்தை யாத்துள்ளார்; தமிழ்நாட்டு நன்மக்களின் உயர் பண்புகளைத் தம் உள்ளத் திற் கொண்டு அவ்வாற்றால் இராமாயண கதைத் தலைவர்களின் பண்பு களைப் புனைந்துரைத்துள்ளார்; பண்டைத் தமிழ் இலக்கியங்களின் சீரிய கூரிய தீஞ்சொற்களையும் பொருள்களையும் ஏற்ற இடங்களில் எடுத் தமைத்து அழகு படுத்தியுள்ளார்; தங்கு தடை யில்லாது தம்முள்ளத்திற்

சுரந்தெழுந்த விசித்திர கற்பனை விசேடங்களினாலே மருட்கை விளைத்துள்ளார். இவரது கவிதையிற் றிளைப்பவருக்கு அமிழ்தமும் கைக்குமென்பது தேற்றம்''

"இவர் கங்கை, கோசல நாடு முதலியவற்றிற்குக் காவிரி, சோணாடு முதலியவற்றை உவமமாகக் கூறுதலின் இவரது நாட்டுப் பற்றும், தமிழ் மொழியைப் பலவிடத்தும் சிறப்பித்துரைத்தலின் இவரது மொழிப்பற்றும் புலனாகின்றன. இராமாயணத்திற் பலவிடத்தே சடையப்ப வள்ளலைப் புகழ்ந்துரைப்பது இவரது நன்றியறிதற் குணத்தை வெளிப்படுத்தும்.

சிலர் கம்பர் ஒன்பதாவது நூற்றாண்டில் இருந்தனர் என்பர்; வேறு சிலர் பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் இருந்தனர் என்பர்.

# கம்பராமாயணம்

## திருவடி தொழுத படலம்

1. நீங்குவென் விரைவி னென்னு நினைவினன் மருங்குநின்ற
தாங்கொரு குடுமிக் குன்றை யருக்கனின் அணைந்த ஐயன்
வீங்கின னுலகை யெல்லாம் விழுங்கின னென்ன வீரன்
பூங்கழ றொழுது வாழ்த்தி விசும்பிடைக் கடிது போனான்

2. மைந்நாக மென்ன நின்ற குன்றையு மரபி னெய்திக்
கைந்நாக மனையோ னுற்ற துணர்த்தினன் கணத்தின் காலைப்
பைந்நாக நிற்கும் வீரர் தன்னொடு விரவு பார்க்கும்
தொய்ந்நாக நறுந்தேன் சிந்தும் குன்றிடைக் குதியுங் கொண்டான்

3. போய்வருங் கரும முற்றிற் றென்பதோர் பொம்மல் பொங்க
வாய்வெரீஇ நின்ற வென்றி வானர வீரர் மன்னோ
பாய்வரு நீளத் தாங்க ணிருந்தன பறவைப் பார்ப்புத்
தாய்வரக் கண்ட தன்ன வுவகையிற் றளிர்த்தா ரம்மா

4. அழுதனர் சிலவர் முன்னின் றார்த்தனர் சிலவ ரண்மித்
தொழுதனர் சிலவ ராடித் துள்ளினர் சிலவ ரள்ளி
முழுதற விழுங்கு வார்போன் மொய்த்தனர் சிலவர் சுற்றுந்
தழுவினர் சிலவர் கொண்டு சுமந்தனர் சிலவர் தாங்கி

5. தேனொடு கிழங்குங் காயு நறியன வரிதிற் றேடி
மேன்முறை வைத்தே மண்ண னுகர்ந்தனை மெலிவு தீர்தி
மானவாண் முகமே நங்கட் குரைத்தது மாற்ற மென்று
தானுகர் சாக மெல்லா முறை முறை சிலவர் தந்தார்

6. தாள்களின் மார்பிற் றோளிற் றலையினிற் றடக்கை தம்மில்
வாள்களின் வேலிற் கோலின் மழையினின் வகுத்த புண்க
ணாள்கண்மே லுலகிற் சென்ற வெண்ணென நம்பி கண்ண
வூழ்கொள நோக்கி நோக்கி யுயிருக வுளைந்து யிர்த்தார்

7. வாலிகா தலனை முந்தை வணங்கின னெண்கின் வேந்தைக்
காலுறப் பணிந்து பின்னைக் கடன்முறைக் கடவோர்க் கெல்லா
மேலுற வியற்றி யாங்க ணிருந்திவ ணிருந்தோர்க் கெல்லா
ஞாலநா யகன்றன் றேவி சொல்லின னன்மை யென்றான்

8. என்றலுங் கரங்கள் கூப்பி யெழுந்தன ரிறைஞ்சித் தாழா
நின்றன ருவகை பொங்க விம்மலா னிமிர்ந்த நெஞ்சர்

சென்றது முதலா வந்த திறுதியாச் செப்பற் பாலை
வன்றிற லூரவோ யென்னச் சொல்லினன் மருத்தின் மைந்தன்

9. ஆண்டகைத் தேவி யுள்ளத் தருந்தவ மமையச் சொல்லிப்
பூண்டபே ரடையா ளங்கைக் கொண்டதும் புகன்று போரி
னீண்டவா ளரக்க ரோடு நிகழ்ந்தது நெருப்புச் சிந்தி
மீண்டதும் விளம்பான் றூன்தன் வென்றியை யுரைப்ப வெள்கி

10. பொருதமை புண்ணே சொல்ல வென்றமை போந்த தன்மை
யுரைசெய வூர்தீ யிட்ட தோங்கிரும் புகையே யோதக்
கருதலர் பெருமை தேவி மீண்டிலாச் செயலே காட்டத்
தெரிதர வுணர்ந்தேம் பின்ன ரென்னினிச் செய்து மென்றூர்

11. யாவையு மினிவே றெண்ணல் வேண்டுவ திறையு மில்லை
சேவகன் றேவிதன்னைக் கண்டமை விரைவிற் செப்பி
யாவதவ் வண்ண லுள்ளத் தருந்துய ராற்றலே யாம்
போவது புலமை யென்னப் பொருக்கென வெழுந்து போனூர்

12. எய்தின னனுமனு மெய்தி யேந்தறன்
மொய்கழ றெழுகிலன் முளரி நீங்கிய
தையலை நோக்கிய தலையன் கையினன்
வையகந் தழீஇநெடி திறைஞ்சி வாழ்த்தினன்

13. திண்டிற லவன்செய றெரிய நோக்கினன்
வண்டற லோதியும் வலியண் மற்றிவன்
கண்டது முண்டவள் கற்பு நன்றெனக்
கொண்டனன் குறிப்பினு லுணரும் கொள்கையான்

14. ஆங்கவன் செய்கையை யளவை யாமெனு
வோங்கிய வுணர்வினல் விளைந்த துன்னினன்
வீங்கினன் றேள்புனல் கண்கள் விம்மின
னீங்கிய தருந்துயர் காத னீண்டதே

15. கண்டனென் கற்பினுக் கணியைக் கண்களாற்
றெண்டிரை யலைகட லிலங்கைத் தென்னக
ரண்டர்நா யகவினித் துரத்தி யையமும்
பண்டுள துயருமென் றனுமன் பன்னுவான்

16. உன்பெருந் தேவி யென்னு முரிமைக்கு முன்னைப் பெற்ற
மன்பெரு மருகி யென்னும் வாய்மைக்கு மிதிலை மன்னன்
தன்பெருந் தனையை யென்னுந் தகைமைக்குந் தலைமை சான்ற
ளென்பெருந் தெய்வ மையா வின்னமுங் கேட்டி யென்பான்

17. பொன்னல தில்லைப் பொன்னை யொப்பன பொறையி னின்று
டன்னல தில்லைத் தன்னை யொப்பெனத் தனக்கு வந்த
நின்னல தில்லை நின்னை யொப்பென நினக்கு நேர்ந்தா
ளென்னல தில்லை யென்னை யொப்பென வெனக்கு மீந்தாள்

18. உன்குல முன்ன தாக்கி யுயர் புகழ்க் கொருத்தி யாய
தன் குலந் தன்ன தாக்கி தன்னையித் தனிமை செய்தான்
வன் குலங் கூற்றுக் கீந்தவ் வானவர் குலத்தை வாழ்வித்
தென்குல மெனக்குத் தந்தா ளென்னினிச் செய்வ தெம்மோய்

19. விற்பெருந் தடந்தோள்வீர வீங்குநீ ரிலங்கை வெற்பி
னற்பெருந் தவத்த ளாய நங்கையைக் கண்டே னல்லே
னிற்பிறப் பென்ப தொன்று மிரும் பொறை வென்ப தொன் றுங்
கற்பெனும் பெயர தொன்றுங் களிநடம் புரியக் கண்டேன்

20. கண்ணினு முளைநீ தையல் கருத்தினு முளைநீ வாயி
னெண்ணினு முளைநீ கொங்கை யிணைக்குவை தன்னி னெவ்வா
தண்ணல் வெங் காம னெய்த வலரம்பு தொளைத்த வாறுப்
புண்ணினு முளைநீ நின்னைப் பிரிந்தமை பொருந்திற் றாமோ

21. வேலையு ளிலங்கை யென்னும் விரிநக ரொருசார் விண்டோய்
காலையு மாலைதானு மில்லதோர் கனகக் கற்பச்
சோலையங் கதனி னும்பி புல்லினுற் றெடுத்த தூய
சாலையி னிருந்தா ளைய தவஞ்செய்த தவமாந் தையல்

22. மண்ணொடுங் கொண்டு போனன் வானுயர் கற்பினுடன்
புண்ணிய மேனி தீண்ட வஞ்சுவா னுலகம் பூத்த
கண்ணகன் கமலத் தண்ணல் கருத்திலாட் டொடுதல் கண்ணி
னெண்ணருங் கூறாய் மாய்தி யென்றதோர் மொழியுண்டென்பான்

23. தீண்டில னென்னும் வாய்மை திசைமுகன் செய்த முட்டை
கீண்டில தனந்த னுச்சி கிழிந்தில தெழுந்து வேலை
மீண்டில சுடர்கள் யாவும் விழுந்தில வேதஞ் செய்கை
மாண்டில தென்னுந் தன்மை வாய்மையா னுணர்தி மன்னே

24. சோகத்தா ளாய நங்கை கற்பினுற் றெழுதற் கொத்த
மாகத்தார் தேவிமாரும் வான்சிறப் புற்றார் மற்றைப்
பாகத்தா ளிப்போ தீசன் மகுடத்தாள் பதுமத் தாளு
மாகத்தா ளல்லண் மாய னுயிர மௌலி மேலாள்

25. இலங்கையை முழுது நாடி யிராவண னிருக்கை யெய்திப்
பொலங்குழை யவரை யெல்லாம் பொதுவுற நோக்கிப் போந்தே

னலங்குதண் சோலை புக்கே னவ்வழி யணங்கனாளைக்
கலங்குதெண் டிரையிற் றாய கண்ணினீர் கடலிற் கண்டேன்

26. அரக்கிய ரளவற் றாரு மலகையின் குழுவு மஞ்சச்
செருக்கினல் கண்டுசெய்ய மெய்க்கன நீக்கச் சீர்த்த
விரக்கமென் றொன்று தானே யேந்திழை வடிவமெய்தித்
தருக்கிய சிறையுற் றன்ன தகையளத் தமிய ளம்மா.

27. மாண்பிறந் தமைந்த கற்பின் வாணுத னின்பால் வைத்த
சேண்பிறந் தமைந்த காதல் கண்களிற் றெவிட்டித் தீராக்
காண்பிறந் தமையா னீயே கண்ணகன் ஞாலந் தன்னு
ளாண்பிறந் தமைந்த செல்வ முண்டனை யாதி யன்றே

28. அயிர்ப்பிலர் காண்பார் முன்னு மறிந்தில ரெனினு மைய
வெயிற்புனை யிலங்கை மூதூ ரிந்திரன் யாக்கைக் கேற்ற
மயிற்புனை யியலி னாரு மைந்தரு நாளு மாங்கே
யுயிர்ப்பொடு முயிரி னோடு மூசனின் றாடு வாரும்

29. தையலை வணங்கற் கொத்த விடைபெறுந் தன்மை நோக்கி
பையநான் இருந்த காலை யலங்கல்வே லிலங்கை வேந்த
னெய்தின னிரந்து கூறி யிறைஞ்சின னிருந்து நங்கை
வெய்துரை சொல்லச் சீறிக் கோறன்மேற் கொண்டு விட்டான்

30. ஆயிடை யணங்கின் கற்பு மையநின் னருளுஞ் செய்ய
தூயநல் லறனு மென்றிங் கினையன தொடர்ந்து காப்பப்
போயின னரக்கி மாரைச் சொல்லுமின் பொதுவி னென்றாங்
கேயின னவரெ லாமென் மந்திரத் துறங்கி யிற்றார்

31. அன்னதோர் பொழுதி னங்கை யாருயிர் துறப்பதாக
வுன்னினள் கொடியொன் றேந்திக் கொம்பொடு முறைப்பச் சுற்றித்
தன்மணிக் கழுத்திற் சார்த்து மளவையிற் றடுத்து நாயேன்
பொன்னடி வணங்கி நின்று நின்பெயர் புகன்ற போழ்தில்

32. வஞ்சனை யரக்கர் செய்கை யிதுவென மனக்கொண் டேயு
மஞ்சன வண்ணத் தான்றன் பெயருரைத் தளியை யென்பாற்
றுஞ்சுறு பொழுதிற் றந்தாய் துறக்கலென் றுவந்து சொன்னாண்
மஞ்சென வனமென் கொங்கை வழிகின்ற மழைக்க ணீராள்

33. அறிவினிற் றேறிச் சொன்ன பேரடை யாளம் யாவுஞ்
செறிவுற நோக்கி நாயேன் சிந்தையிற் றிருக்க மின்மை
முறிவுற வெண்ணி வண்ண மோதிரங் காட்டக் கண்டா
ளிறுதியி னுயிர்தந் தீயு மருந்தொத்த தனைய தெந்தாய்

34. ஒருகணத் திரண்டு கண்டேன் ஒளிமணி யாழி யான்ற
திருமுலைத் தடத்து வைத்தாள் வைத்தலும் செல்வ நின்பால்
விரகமென் பதனின் வந்த வெங்கொழுந் தீயி னால்வெந்
துருகிய துடனே யாறி வலித்தது குளிர்ப்புள் ளூற

35. வாங்கிய வாழி தன்னை வஞ்சரூர் வந்த தாமென்
றூங்குயர் மழைக்க ணீரா லாயிரங் கலச மாட்டி
யேங்கின ளிருந்த தல்லா லியம்பல ளெய்த்த மேனி
வீங்கினள் வியந்த தல்லா லிமைத்தில ளுயிர்ப்பு விண்டாள்

36. அன்னவர்க் கடியனேனிற் பிரிந்தபி னடுத்த வெல்லாஞ்
சொன்முறை யறியச் சொல்லித் தோகைநீ யிருந்த சூழ
லின்ன தென் றறிகி லாமே யித்தனை தாழ்த்த தென்றே
மன்னநின் வருத்தப் பாடு முணர்த்தினே னுயிர்ப்பு வந்தாள்

37. இங்குள தன்மை யெல்லா மியைபுழி யியையக் கேட்டா
ளங்குள தன்மை யெல்லா மடியனுக் கறியச் சொன்ன
டிங்களோன் றிருப்பெ னின்னும் திருவுளந் தீர்ந்த பின்னை
மங்குவெ னுயிரொடென்றுன் குரைகழற் றலைக்கண் வைத்தாள்

38. வைத்தபின் றுகிலின் வைத்த மாமணிக் கரசை வாங்கிக்
கைத்தலத் தினிதி னீந்தா டாமரைக் கண்க ளார
வித்தக காண்டி யென்று கொடுத்தனன் வேத நன்னூ
லுய்த்துள கால மெல்லாம் புகழொடு மொக்க நிற்பான்

39. பைப்பயப் பயந்த காமம் பரிணமித் துயர்ந்து பொங்கி
மெய்யுற வெதும்பி யுள்ள மெலிவுறு நிலைமை விட்டா
னையனுக் கங்கி முன்ன ரங்கையாற் பற்று நங்கை
கையென லாயிற் றன்றே கைபுக்க மணியின் காட்சி.

40. பொடித்தன வுரோமம் போந்து பொழிந்தன கண்ணீர் பொங்கித்
துடித்தன மார்புந் தோளுந் தோன்றின வியர்வின் றுள்ளி
மடித்தது மணிவா யாவி வருவது போவதாகித்
தடித்தது மேனி யென்னே யாருளர் தன்மை தேர்வார்.

---

# வில்லிபுத்தூரார் பாரதம்

வில்லிபுத்தூரார், நடுநாடு எனப்படும் திருமுனைப்பாடி நாட்டில் சனியூரில் வைணவப் பிராமண குலத்தில் வீரராகவர் என்பார்க்குப் புதல்வராய்ப் பிறந்தவர். வில்லிப்புத்தூரார் என்பது பெரியாழ்வாருடைய திருநாமங்களுள் ஒன்றென்றும் அதனையே ஆழ்வார் மீதுள்ள பற்றுள்ளத்தால் இவர் தந்தை இவர்க்கிட்டனரெனவும், இப்பெயர் ஸ்ரீ வில்லிபுத்தூரில் எழுந்தருளியிருக்கும் பெருமாளின் திருநாமங்களில் ஒன்றென்றும் அதனையே இவர்க்குப் பிள்ளைப்பெயராக இட்டனரெனவும் இருவகையாகக் கூறுவர். எங்ஙனமாயினும் இப்பெயர் இவர்க்கு இவர் பிறந்த ஊரால் வந்ததன்று என்பது வெளிப்படை.

வில்லிபுத்தூரார் முத்தமிழ்த் துறையிலும் வடமொழிக் கலையிலும் முதிர்ச்சி பெற்ற சிறந்த கவிஞர். இவரது புலமை மாட்சி யுணர்ந்த நடுநாட்டு வக்க பாகையரசனும் சோழன் தானைத் தலைவனும் அருங்கலை விநோதனுமான வரபதியாட் கொண்டான் என்பவன், புலவரைத்தன் அவைக்கழைத்துச் சிறப்புச் செய்து "நீவிரும் யானும் பிறந்த திசைக்கிசை நிற்பப் பாரதமாம் பெருங் கதையை விருத்தப்பாவிற் பாடித்தருக" என்று வேண்டிக்கொள்ள புலவரும், பன்னு மாமறைப் பாரதத்தில் மன்னு மாதவன் சரிதமும் இடையிடை வழங்கும் என்னும் ஆசையால் அதற்கிசைந்து விரைந்து பாடி 4440 பாடலாக முடித்து அவனதவையில் அரங்கேற்றி வைத்தனர். இவையெல்லாம் வில்லிபுத்தூரார் மைந்தர் வரந்தருவார் பாடிய பாயிரத்தால் நன்கறியலாகும்.

வில்லிபுத்தூரார் தமது பாரதத்தை, வியாச பாரதத்தின் மொழி பெயர்ப்பாகப் பாடவில்லை; பெரும்பாலும் அப்பாரதத்தைத் தழுவியும் சில இடங்களில் கதைகளை மாற்றியும் சுருக்கியும் கிளைக்கதைகளை அறவே களைந்தும் கதாநாயகர்களின் பிறப்பு, வளர்ப்பு, மணம் முதலியவற்றைக் கூறி, மரணமாகியவற்றைக் கூறாது தமிழ்க் காப்பிய விலக்கணத்துக் கியையப் பாண்டவர் போர்வென்று பொன் முடி சூட்டுவதோடு முடித்துள்ளார். இப்போது இவர் பாடியனவாக ஆதிபருவ முதல் சௌப்திக பருவம்வரை பத்துப் பருவங்களே யுள்ளன. இவர் பாரத முழுதுமே பாடினரெனவும் பிற்காலத்துப் பிற்பகுதி மறைந்தன எனவும் சிலர் கூறுவர். இவர் பாடாது விட்ட பருவங்களையும் கதைகளையும் இற்றைக்கு 180 வருடங்களுக்கு முன்பு தொண்டை மண்டலத்தில் முதலம் பேட்டிலிருந்த நல்லாப் பிள்ளை என்பார் விரித்துப்பாடி வில்லி பாரதத்துடன் சேர்த்துப் 15000 பாடலாக வெளியிட்டனர். இஃது இப்போது நல்லாப்பிள்ளை பாரதம் என வழங்குகின்றது.

வில்லிபுத்தூரார் பாட்டுக்கள் பல்வகைச் சந்தங்கள் பயின்று, சொல்லணி பொருளணிகள் பொருந்தி, இனிய ஓசை யமைதியுடன் விளங்குகின்றன. இவரது பாடல்களில் வடசொற்களும் வடசொற்றொடர்களும் நிரம்பப் பயின்றுள்ளன; இவர்போல் வடமொழிகளைத் தமிழ்ப் பாடல்களில் நிரம்பப் புகுத்தியவர் அருணகிரிநாதர்.

இவர் வைணவ மதத்தினர் என்பது, பாரதத்தை, மாதவன் சரிதமும் வழங்கு மென்னும் ஆசையால் தாம் பாடுவதாக இவர் கூறியிருப்பதாலும், சருக்கங்க டோறும் திருமால் வணக்கங் கூறி யிருத்தலாலும், ஆழ்வார்களையும் அவர்களுடைய திருப்பாடல்களையும் அட்டாக்கர மந்திரத்தையும் போற்றிப் புகழ்ந்திருத்தலாலும், வெள்ளிடை விலங்கல்போல் விளங்கும். இவர் வைணவரெனினும் சிவபெருமானையும் புகழ்ந்தும் துதித்தும் சில இடங்களிற் கூறியிருத்தலான் இவர் பிறமத நிந்தை யில்லாத பொது நோக்குடையவ ரென்று தெரிகிறது. திருமாலைத் தாழ்த்திச் சிவபெருமானை உயர்த்திக் கூறி யிருப்பதாகக் காணப்படும் சில பாடல்கள் இவர் பாடியவை அன்று; அவை, இடைச்செருகலாயிருக்கக் கூடுமென்று கருதப்படுகின்றன்.

வில்லிபுத்தூரார் தம்மை ஆதரித்துப் பாரதத்தைப் பாடுவித்த வரபதி யாட்கொண்டானைக் காண்டவ தகனச் சருக்கம் 50-ஆம் பாட்டில் "சொன்மழை பொழிந்து நாடொறுந் தனது தோள்வலி துதிக்கு நாவலர்க்குப், பொன்மழை பொழியுங் கொங்கப்பூபதிதன் பொற்பதம் பொருந்தலா போல" எனக் கூறியதுபோல், நிரை மீட்சிச் சருக்கம், (103) பதினாறும் போர்ச் சருக்கம் (90) பதினேழாம் போர்ச்சருக்கங் (33) களிலும் அவனது வீரம், புகழ், கொடை யாகியவற்றைப் புகழ்ந்து கூறி யிருப்பதால், இவரது நன்றி மறவாப் பெருங்குணம் புலப்படுகின்றது. அன்றியும் தாம் தமிழ்நாட்டு மூவேந்தரிடத்தும் தமிழ்மொழியிடத்தும் சிறந்த மதிப்பும் பற்றும் உடையவர் என்பது தோன்றத், தமிழ் வேந்தர்களையும், தமிழ் மொழியினையும் சில விடங்களிற் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

இவரது காலம், இற்றைக்கு 500 வருடங்களின் முற்பட்டதெனக் கருதப்படுகிறது. இவர் காலத்துப் புலவர்கள் இரட்டையர், அருணகிரிநாதர் என்பர்.

## காண்டவதகனச் சருக்கம்

இது ஆதி பருவத்தின் இறுதியான ஒன்பதாம் சருக்கம். சுவேதகி என்னும் அரசன் பன்னிரண்டு வருடம் இடைவிடாது நெய்யைச் சொரிந்து செய்த யாகத்தில் ஆகுதியை உண்டு மந்த நோயும் உடல் வாட்டமுமுற்ற அக்னிதேவன், பல ஔடதங்கள் நிரம்பிய இந்திரனது காண்டவவனத்தை உண்டால், தான் கொண்ட நோய் நீங்குமென அறிந்து, வசந்த காலத்தில் ஒருநாள் கிருஷ்ணனும் அர்ஜுனனும் ஓர் சோலையில் இனிதாக அமர்ந்திருக்குங்கால் அவர்களிடம் ஒரு வேதியன் வடிவுடன் வந்து உணவளிக்க வேண்டுமென யாசிக்க, அவர்கள் அங்ஙனமே வேண்டிய உணவை அளிப்பதாக உறுதிகூற, வேதியன் தான் அக்கினிதேவன் என்பதை உணர்த்தித் தனக்குணவு காண்டவ வனமே எனவும் அதனையே எரிக்க உதவிசெய்ய வேண்டுமெனவும் கேட்ட, அவர்கள் அங்ஙனமே இந்திரனால் அக்கினிக்கு இடையூறு வாராது காத்து நிற்க அக்கினி தேவன் காண்டவ வனத்தை எரித்த வரலாற்றைக் கூறும்."

# வில்லிபுத்தூரார் பாரதம்

## காண்டவதகனச் சருக்கம்

1. இனிய பான்முகந் தொழுக்கு மாகுதியென
விலங்கு முப்புரி நூலும்
தனது வெஞ்சிகைக் கொழுந்தெனப் புறத்தினிற்
றூழ்ந்த செஞ்சடைக் காடும்
புனித வெண்புகை மருங்கு சுற்றியதெனப்
புனைந்த வாடையு மாகி
மனித வேதியர் வடிவுகொண் டவரெதிர்
வன்னி வானவன் வந்தான்.

2. வந்த வந்தணன் வரவுகண் டிருவரும் வந்தெதிர் வணங்கித்தஞ்
சிந்தை யன்பொடு வேதிகை யெனத்திகழ் செம்பொனின் றவிசேற்ற
வந்தணாளனுங் குழிந்தபொற் கண்ணினன் அவிமணங் கமழ்வாய
னுந்துவெம்பசி பெரிதுவல்லே யெனக் கோதன மிடுகென்றான்.

3. கரிய மேனியரிருவருஞ் செய்யபொற் காயமாமுனி யுண்டற்
குரிய போனக மிடுதுமிக் கணத்தென வுவகைபோ டுரைசெய்தா
ரரிய வாயினும் வழங்குதற் கேற்றன வல்லவாயினுந் தம்மிற்
பெரிய வாயினும் அதிதிகள் கேட்டன மறுப்பரோ பெரியோரே.

4. அளித்து மென்றசொற் றன்செவிப் படுதலும் பெற்றனன் போலாகி
ஒளித்து வந்தனனிரு பிறப்பின னலேனுதாசன னென்னுமங் [னம்
களித்து வண்டிமிர் தொடையலீ ரெனக்குணு ங் காண்டவ மெனுங்கா
குளித்த ருந்துதற் கிடங்கொடா னவ்வனங் கொண்டல்வா கனன்
[காவல்

5. மிடைந்த நால்வகை மகீருகங்களு நெடுவெற்பினங்களுந் துவன்றி
யடைந்த தானவ ரரக்கர் பேருரகருங் காலயக்களு மாகிக்
குடைந்து சோரிகொள் வாளுகிரரி முதற் கொடுவிலங்கின மிக்குங்
கடைந்த கூரெயிற்றுலதக் ககனும் வாழ் கானன மது கண்டீர்.

6. புகுந்தியான் முகம்வைக்கினேழ் புயலேயு மேவிப் புருகூதன்
றொகுந் தராதலவிறுதி போனெடும் புனல் சொரிந்த வித்திடுமென்னை
முகுந்த னுனிரை புரந்தவாறென வொரு முனைபட விலக்கிற் பின்
மிகுந்த தாகமு மெண்ணமு முடிந்திடும் வேண்டுவ திதுவென்றான்.

7. என்ற போதி லுன்னிச்சையின்படி யுணு வீந்தனம் இமைப்போழ்திற்
சென்று கொள்கெனத் தனஞ்சயன் கூறலுஞ் சிந்தை கூர்மகிழ் வெய்தி

மன்றலர் துழாய் மாயவனருளினல் வடிக்கணை மாளாமற்
றுன்று தூணியுஞ் சாபமு மிரதமுஞ் சுவேத வாசியு மீந்தான்.

8. ஈந்த வானரப்பதாகை நட்டிரிரண் டிவுளியு முடன் பூட்டி
யாய்ந்த வன்றெழிற் பாகனு மருணனி லழகுறும்படித் தூண்டக்
காய்ந்த சாயக நாழிகை கட்டியக் காண்டிவங் கரத்தேந்தி
வேய்ந்த மாமணிக் கவசமு மருக்கனி லழகுறமேற் கொண்டான்.

9. நெஞ்சின் மேலிடு மூக்கமோ டணிதிகழ் நெடும்புயம் பூரித்துச்
சிஞ்சி னீமுகந் தெறித்தனன் றெறித்தலுந் தெறித்த பேரொலிகானின்
விஞ்சிவாழ் வனசத்துவ மடங்க வுள்வெருவுறவு காந்தத்து
மஞ்சினீ டுருமொலியெனப் பரந்தது வான்முகடுற மன்னே.

10. ஆழி வாயொரு வடவையின் முகத்திடை யவதரித் தனனென்ன
வூழி வாயுல கனைத்தையு முருக்குமா றுடன்றெழுந் தனனென்ன
வாழி வாழியென் றருச்சுனன் கரத்தையும் வார்சிலை யையும்வாழ்த்திப்
பாழி மேனியை வளர்த்தனன் பாவகன் பவனனும் பாங்கானன்

11. மூள மூளவெம் பசியொடுஞ் சினத்தொடு முடுகிவெய் துறவோடி
வாள மாகவோர் பவளமால் வரைநெடு வாரிபை வளைந்தென்னக்
காள மார்முகி லூர்திரக் தனகிகர் காண்டவந் தனையண்ட
கோள மீதெழ வளைந்தனன் வரைபடி கொண்டலுங் குடர்தீய.

12. ஆன வாகுலந் தன்னொடு தப்புதற் கணிபடப் பறந் தோங்குந்
தூனி றத்தன கபோதமொத் தனவிடை யிடையெழுஞ் சுடர்த்தூமங்
கான மேதியுங் கரடிபுமேனமுங் கடகரிக் குலந் தாமும்
வானி லேறுவ போன்றன நிரைநிரை வளர்தரு கருந்தூமம்.

13. வரைத்த டந்தொறுங் கதுவிய கடுங்கனன் மண்டலி னகல்வானி
னிரைத்தெ ழுந்தசெம் மரகத கனகவா ணீலவெண் ணிறத்தூமந்
தரைத்த லத்தினின் றண்டகோ ளகையுறச் சதமகன் றடஞ்சாப
முரைத்த தன்வளை வறநிமிர்ந் தழகுற வோடுகின் றதுபோலும்.

14. கருதி யாயிர கோடிவெம் புயங்கமிக் கானிடை யுளவென்று
பருதி சூழ்வர வெருவுபல் குவடுடைப் பருப்பதங் களின்சாரற் [கிக்
சுருதி வேள்விநூ றுடையவன் சிறகறத் துணித்தவாய் தொறும்பொங்
குருதி பாய்வன போன்றன கொளுந்திய கொழுந்தழற் கொழுந்தம்மா.

15. கோத்தி ரங்களின் கவானிடைக் கதுமெனக் கொளுந்தியுற் றெரிகின்ற
தீத்தி றங்கள்செங் காந்தளு மசோகமுஞ் செங்குறிஞ் சியுஞ்சேரப்
பூத்த வொத்தன வன்றியுங் குலிகநீர் பொழியரு வியும்போன்ற
பார்த்த கண்கள்விட் டேகலா வகைநிறம் பரந்ததா துவும்போன்ற

16. தளைத்த பாதவத் தலைதொறும்பற்றின சருகுதிர்த் திளவேனிற்
கிளைத்து மீளவும் பொறியளி யெழவளர் கிசலயங் களும்போன்ற
திளைத்த வேர்முதற் சினையுற வெரிவனதீபசா லமும்போன்ற
வளைத்த கானிடை மெலமெல வுள்புகு வன்னியின் சிகரவர்க்கம்.

17. தழைத்த பேரொளித் திவாகரன் கரங்கள்போய்த் தடவியவ் வடவிக்கட்
பிழைத்த காரிருட் பிழம்பினை வளைந்துடன் பிடித்தெரிப் பனபோலு
முழைத்த வான்புழை யொருகரத் திருபணை மும்மதப் பெருநால்வாய்
மழைத்த குஞ்சர முகந்தொறும் புக்குடன் மயங்கிய பொறிமாலை.

18. அரியெ னும்பெயர் பொருமையிற் போல்விரைத் தழற்கொழுந் துளை
[பற்றக்
கிரிமு ழைஞ்சுக டொறும்பதைத் தோடின கேசரிக் குலமெல்லாம்
விரியு ரோமவா லதிகளிற் பற்றலின் விளிவுடைச் சவரங்க
ளெரிகொள் சோகவெங் கனலினு னின்றுகின் றிறந்தன சலியாமல்.

19. எப்பு றத்தினும் புகுந்துதீச் சூழ்தலி னேகுதற் கிடமின்றித்
தப்பு தற்கருத் தழிந்துபே ரிரலையோ டுழையினந் தடுமாற
மெய்ப்பு றத்துவெண் புள்ளிசெம் புள்ளியாய் விடும்படி விரைந்தோடி
யப்பு றத்துவீழ் பொறிகளவ் வவற்றினை யலங்கரித் தனவன்றே.

20. காமு டைப்புறக் கழைகளின் றுளைதொறுங் கால்பரந் திசைக்கின்ற
வேழி சைக்குள முருகி மெய்புளகெழ விரைகொளு மசுணங்க
டாழ மூற்சுடர் சுடச்சுட வெடித்தெழு சடுலவோ சையின் மாய்ந்த
வூழி யிற்புய லுருமினுன் மடிந்திடு முரகர்தங் குலம்போன்ற.

21. அனைய போதிலவ் விபினசா லங்களி னுர்தருக் களினீண்ட
சினைக டோறும்வாழ் சிகாவள கலாபமேற் செறிதரு தீச்சோதி
பனையி னீளுடற் பணிகளை யலகினுற் பற்றலிற் படர்பந்திப்
புனையு மாமணி நிழல்பரந் தெழுந்தெனப் பொலிந்திலங் கினமாதோ.

22. ஆசு கன்றனே டடவியை வளைத்தன னுசுசுக் கணிமேன்மேல்
வீசு கின்றன புலிங்கசா லமும்புகல் வேறெமக் கிலதென்று
பாசி ளங்கிளி பூவைகள் வெருவிமெய் பதைத்துளந் தடுமாறிப்
பேசு கின்றசொற் கேட்டனு நடுங்கினபிறபற வைகளெல்லாம்.

23. நெஞ்சி லீரமு நீதியுங் குடிபுகா நிருதர்சென் னியில் வன்னி
குஞ்சி நீடுற வளர்வபோ லசைந்துசெங் கொழுந்துவிட் டனமேன்மேல்
வஞ்சி நேரிடை யரக்கியர் நகமுழு மதிசிவப் புறத்தீட்டும்
பஞ்சி போன்றன வவரவர் பதயுகம் பற்றிய சிகைவன்னி.

24. முப்பு ரங்களை முக்கணன் முனிந்தநாண் மூவரம் முழுத்தீயிற்
றப்பி னுருளர் காண்டவ வடவிவாழ் தானவ ரியா ருய்ந்தார்

பைப்பு றத்தணி மணியொளி பரந்தெனப் பஃறலை களிற்பற்றி
வெப்பு றத்தலி னுரகருந் தங்கள்வாய் விடங்கள்கொன் றெனவீழ்ந்-
[தார்.

25. புகைப டப்படக் கரிந்தன பொறியினுற் பொறியெழுந் தனவானின்
மிகைப டைத்தவச் சுரபதி யாயிரம் விழிகளுங் கணப்போதிற்
றகைவ றக்கழை முதலிய தருக்களின் சடுலவா ரவமிஞ்சித்
திகைப னைத்தினும் பரத்தலிற் செவிகளுஞ் செவிடுபட் டனசேர.

26. விரத மேல் கொண்டு செம்பொன் மால் வரையை
விரிசுடர் சூழ்வரு வதுபோ
லிரத மேல் கொண்ட வநுசனுஞ் சுதனு
மிமைப்பினிற் பன்முறை தேர்ந்து
சரத மேல் கொண்டு சரிப்பதுந் தனது
தாவகம் பாவகன் புகுந்து
பரத மேல் கொண்டு நடிப்பதுங் கருதிப்
பார்த்தனன் பாகசா தனனே.

27. முந்தி வார் சிலைக்கைப் பற்குனன் றொடுத்த
முரணுடை மூரிவெங் கணைகள்
உந்தி வா ளுரகர் சூடிகா மகுட
கோடிக ளுடைத்தலி னுடைந்து
சிந்திமீ தெழுந்த மணிகளு மனலின்
சிகைகளிற் றெறித்தெழு பொறியும்
இந்தி ராலயத்திற் கேற்றிய தீப மென்னவின்
றிலங்கின வெங்கும்.

28. தானவர் புரங்க ணீறெழ முனிந்த
தமனியச் சிலைக்கைவெள் ளூர்தி
யானவ னமது (ஒருசீர்) புரத்தையு ஞ் சுடுவா
னழன்றனன் போலுமென் றஞ்சி
வானவர் நடுங்க வானவர்க் கரசாம்
வலாரியு மனனுறத் தளர்ந்து
கானவ ருடனே தக்க கனென்னும்
கட்செவி கெடுமெனக் கரைந்தான்.

29. பரந்தெழு புகையாற் றத்தம வடிவம்
பண்டையிற் பதின்மடங் காகச்
சுரந்திடு புயல்க ளனைத்தையு நெடுநீர்
சொரிந்தவித் திடுகெனச் சொல்லி

நிரந்தர மருகு விடாதுதன் னிழல்போ
னின்றவா னவரையு மேவிப்
புரந்தரன் றனு மீரிரு மருப்புப்
பொருப்பின் வெம் பிடர்மிசை புகுந்தான்.

30. ஏவக விருத்தச் செவ்வியின் றனுவுக்
கேற்றநாண் முறுக்கிவிட் டென்னச்
சேவக விமையோ ரெண்டிசா முகத்துஞ்
செஞ்சுடர் வாள்விதிர்த் தென்னப்
பாவகன் பகுவாய் நாவிதிர்த் தென்னப்
பரந்தவப் பாவகற் குணவாந்
தாவக முழுதும் வளைந்து கொண்டெழுந்த
சலதர சஞ்சலா சாலம்.

31. ஏறிய களிறு பிளிறுசீ டொலியு
மெடுத்தவிற் றெறித்தநா ணொலியுஞ்
சூறிய விமையோர் பெருநகை யொலியுந்
துந்துபிக் குழாமதி ரொலியும்
கூறிய வனலன் சடுலவல் லொலியுங்
குறைபடத் திசைதொறு மிருந்த
ஊறிய புவன பவனவே கத்தோ
டுருமுடை முகிலின்வா யொலியே.

32. தூமமு மெமது பவனமு மெமது
தோழனத் தோயமு மெமதே
யாமுமிங் கிவற்றோ டொன்றுத லொழிது
மீரிரு பொருள்களும் பிறிந்தால்
மாமுகி லெனும்பே ரெங்குள தடர்த்து
வாசவ னென்செயு மெம்மை
யாமுறை யறிது மென்றுகொண் டறவு
மகங்கரித் தனன்வெகுண் டழலோன்.

33. மூண்டவெங் கனலை யுருமின்வெங் கனலான்
முருக்கியெங் கால்கையா னெருக்கி
யாண்டவன் களிற்றின் கரநிகர் தாரை
யருவியின் கணங்களா லவித்துப்
பாண்டவன் பகழி தொடுக்கினுங் கண்ணன்
பருப்பத மெடுக்கினு மெங்கள்
காண்டவம் புரத்து மென்றுகொண் டிழிந்து
பொழிந்தன கணம்படு கனங்கள்.

34. காலைவா யருக்கன் பனிநுகர்ந் தென்னக்
கட்டறக் காண்டவ மென்னும்
பாலைவா யுள்ள சராசர மனைத்து
நுகர்தலிற் பைம்புனல் வேட்டோன்
வேலையே ழையுமொண் டேழுமா முகிலும்
விதம்படப் பொழிந்ததா ரைகளாற்
றுலுவே ழினையு நனைத்தன னனைத்துந்
தணிந்ததோ தன்பெருந் தாகம்.

35. எக்கடல்களினு மினிப்பசை யிலதென்
றேழிரு புவனமு நடுங்கத்
தொக்கட லுருமோ டெழுமெழு கொண்டற்
சோனையஞ் சுருவையான் முகந்து
மைக்கடல் வெளுக்கக் கறுத்தமெய்ம் மகவான்
வழங்கிய வாகுதி யனைத்து
நெய்க்கடல் சொரிந்த தென்னுமா றருந்தி
நீடுவான் முகடுற நிமிர்ந்தான்.

36. தொழுதகு விசயன் றுலுவே ழுடையோன்
சுடர்முடி நனைந்திடு வதன்முன்
எழுமுகி லினமும் பொழிதரு மாரி
யாவையு மேவினால் விலக்கி
முழுதுல கமுந்தன் னிடத்தடக் கியவான்
முகடுற முறைமுறை யடுக்கிக்
குழுமுவெங் கணையாற் கனற்கட வுளுக்குக்
கொற்றவான் கவிகையுங் கொடுத்தான்.

37. ஆழ்தரு பரவை யேழும்வற் றிடுமா
றழித்தகா ருமிழ்ந்திடு நெடுநீர்
தாழ்தரு சரத்தான் மேயந்ததற் கிடையோர்
தனித்திவ லையும்பொசி யாமல்
வீழ்தரு மருவி பாவகன் றனக்கு
விசயனன் றளித்தபொற் குடைக்குச்
சூழ்தர நிரைத்துத் தூக்கிய முத்தின்
சுடர்மணித் தொடையல்போன் றனவே.

38. மண்டிமீ தெழுந்த வன்னியின் சிகைக
ளிந்திரன் மதலைவா ளிகளாற்
கண்டகூ டத்திற் கமைத்தசெம் பவளக்
காண்டகு தூண்டிரள் காட்ட

அண்டகூ டத்திற் கிந்திரன் பளிங்கா
லமைத்தபல் லாயிர கோடி
சண்டதூ ணங்கள் போன்றன பரந்து
தனித்தனி முகில்பொழி தாரை.

39. தக்ககன் றன்னைக் கூயினர் தேடிச்
சாயக மண்டபஞ் சுற்றி
மிக்கவிண் ணவர்க டிரிதர வென்றன்
மெல்லியன் மகவையும் விழுங்கி
அக்கணந் தன்னி லந்தரத் தெழலும்
வீழ்த்தின னம்பினற் றுணித்துச்
செக்கன வுருவச் சென்னியை யுரகர்
கன்னியைத் திருமணஞ் செய்தான்.

40. மருவயிற் சதகோ டியினிறை யைரா
வதத்தின்மும் மதத்தின னனைத்துக்
கருவயிற் றெழிலித் தாரையால் வருணக்
கடவுடன் கணைகளா லவித்துச்
செருவயிற் புரள வொதுக்கியத் தோழன்
சிறுவனைச் சென்றெடுத் தணைத்தான்
ஒருவயிற் பிறந்தோ னுதலின் மகவா
னுடனுடன் றிலனுதா சனனே.

41. அன்னவா யொடுதன் வாலதி துணியுண்
டலமரு மச்சுவ சேனன்
தன்னவா சவன்போய் வீடுகண் டுழியத்
தனஞ்சயன் றனதுவெங் கணையான்
முன்னவா னவரை முனைமுகந் தன்னின்
முதுகிட முதுகிட முருக்கிப்
பின்னவா ரிதங்க ளேழையும் பொருது
பின்னிடப் பின்னிடப் பிளந்தான்

42. தீரமால் பொருது வீடுகண் டதற்பின்
செக்கர்மெய்த் தக்ககன் பயந்த
பாரமா சுணமவ் விசயனுக் கியாவர்
பகையெனப் பலரையும் வினவிச்
சூரன்மா மதலை சரணமே யரண
நமக்கெனத் தொழுதுபோ யெய்தி
வீரமா முனைவெம் பகழியா கியதெம்
மேதினி யினும்பெரு வார்த்தை.

43. தோழன்மா மகனைக் கண்டபின் றனது
தோழனை யொருவயிற் காணான்
வேழமா முகத்திற் கைத்தலம் புடைத்தான்
விழிகளா யிரங்களுஞ் சிவந்தான்
யாழமா திரத்தி னெதிரொலி யெழுமா
றெயிற்றிள நிலாவெழ நகைத்தான்
றாழமா நிலத்தி னின்றமர் விளைக்குந்
தன்பெருந் தனயனை முனிந்தான்.

44. மேகசா லங்க ளிளைத்ததுந் திளைத்து
மேலிடு விண்ணவ ரணிந்த
யூகசா லங்க ளுடைந்ததுங் கண்டா
னுருத்தெழுந் துள்ளமுங் கொதித்தான்
ஏகசா பமுந்தன் னேகசா யகமு
மிமைப்பள வையின்விரைந் தெடுத்தான்
பாகசா தனனு மேனைய திசையின்
பாலரும் பகடுமேல் கொண்டார்.

45. தேவருங் கோடி தேவருக் கொருவர்
சிரங்களாய் நின்ற முப்பத்து
மூவருந் தத்தம் வாகமேல்கொண்டு
முந்துற வந்துவந் தணிந்தார்
யாவரும் புவனத் தின்றுகொ லுகத்தி
னிறுதியென் றிரங்கினர் நடுங்க
மேவரு மனித ரிருவரோ டநேக
விபுதரும் வெகுண்டுபோர் விளைத்தார்.

46. பச்சை வாசிகளுஞ் செய்யன வாகப்
பாகரும் பதங்களே யன்றித்
தச்ச வாளிகளாற் கரங்களு மிழந்து
தனிப்பெருந் திகிரியுந் தகர
வுச்ச மாமகத்திற் பண்டொடிந் தொடியா
தொழிந்தன பற்களு மொடிய
வச்சமே துணையா வருக்கனு மொழிந்த
வருக்கர்பன் னிருவரு மகன்றார்

47. மாறுபட் டுழியப் பற்குனன் கணையான்
மழுக்களுஞ் சூலமு முடைய
நீறு பட்டுடலி னீற்றுடன் மடிய
நெடுங் கொடி யூர்தி யேறுகளு
மேறு பட்டழிய சடையில் வார் நதியா
லேறிய தூளிவா னெறியுஞ்

சேறுபட்டிடுமா றோடினர் மீளப்
பதினொரு திறலுருத் திரரும்.

48. எண்ணிய வசுக்க ளெண்மரிற் கங்கை
பெண்ணும்பாய் வயிற்றினுற் பவித்த
புண்ணிய னொழிந்தோ ரெழுவருந் தங்கள்
புயவலி மையிற் பொருதிடு வார்
நண்ணிய வமரின் விசையன் வெங்கணையா
னுப்புலர்ந் துள்ளமு நடுங்கி
அண்ணிய நிலயம் புகுந்தன ரென்று
னிற்பரோ வாயுள் வேதியரே.

49. அருண வெங் கனலோன் கனலொடு கலந்தா
ளுசுக னவற்குநண் பானன்
கருணையில் யமனுங் கானிடை மடியுங்
கணத்திலே கவலைபுற் றனனால்
வருணனுங் கடல்கள் வறத்தல்கண் டழிந்தான்
மதியு மம்மதி முடித்தவனு
மிருணிற வரக்கன் றானுமிங் கிவரோ
டெங்ஙனம் பொருதுமென் றிளைத்தார்.

50. சொன்மழை பொழிந்து நாடொறுந் தனது
தோள்வலி துதிக்கு நாவலர்க்குப்
பொன்மழை பொழியுங் கொங்கர்பூ பதிதன்
பொற்பதம் பொருந்தலர் போலக்
கன்மழை பொழியுங் காளமா முகிலுங்
கடவுளர்த் துரந்தவன் கரத்தில்
வின்மழை பொழியக் கற்களுந் துகளாய்
மேனியும் வெளிறிமீண் டனவே.

51. மாயவன் றனக்கு நேய மைத்துன
னைந்தனத் தந்தையை மதியான்
தூயவெங் கணையா லவனிடித் துவசந்
துணித்தமர் தொடங்குமவ் வளவிற்
காயமெங் கணுநின் றொலியெழப் பரந்து
காயமில் கடவுளக் கடவுள்
நாயகன் றனக்குப் பரிவுட னவைதீர்
நல்லுரை நவின்றதை யன்றே.

52. தமரினு மினிய தக்ககன் முதலே
தப்பினன் குருகிலஞ் சார்ந்தான்

குமரனு நும்மா னுப்ந்தனன் றாமக்
கொடியனுங் கொண்டனுக் கபிபா
னமர்களி விருவர் நரனுநா ரணனு
நமக்குமிங் கிவர்சிறி திளையா
ரமரினை யொழிமி னமரினை யொழிமி
னமரரு மமரர்நா தனுமே.

53. என்று கொண் டுரைத்த மொழிசெவிப் பட்ட
எல்லையி னிரவிமுன் னிருள் போற்
றுன்று தன் சேனைச் சுரகணஞ் சூழச்
சுரபதி துறக்கம தடைந்தான்
வென்று வெங்களங் கொண்டருச் சுனன் றனது
வெற்றிகொள் சங்கமுங் குறித்தா
னன்றுசெந் திருமா லருச்சுனன் பொருத
வாண்மைகண் டதிசயித் தனனே.

54. வடமது ரையினுந் தென்மது ரையினு
மதிகுல நிருபர் கன் னியரைக்
கடிமணம் புரிந்தோன் வின்மையின் வன்மை
கண்ணுறக் கண்டவா னவரும்
புடவியி லொருவ ரொடுமினிப் பூசல்
பொரேமெனப் போனவா சவனு
முடிசடை மவுலி நாரதன் முதலா
முனிவரு முடிவறப் புகழ்ந்தார்

55. மாசுணத் தரசன் மந்திர மமைத்த
வனத்திடை யிருந்த மாமயனை
யாசுசுக் கணிசென் றடர்த்தலும் வெருவி
யருச்சுன வபயமென் றரற்றத்
தேசுடைத் திகிரிச் செங்கண்மால் கருணை
செய்தனன் றீவினை யுறினும்
பேசுதற் கரிய பெரியவர் நினைக்கின்
யார்கொலோ பிழைத்திடா தவரே.

56. அழைத்தடல் விசயன் றனைத்துணை செய்கென்
றுறுபத் தியோசனை யாகித்
தழைத்தவவ் வனத்தைங் கனத்தை வெங்கண்டு
தழலவ னுகர்ந்திடு காலைப்
பிழைத்தவர் மயனுந் தக்ககன் மகவும்
பெருந்தவ னொருவன்முன் கருப்பம்
இழைத்தநுண் சிறகர்க் கருசிறக் குரீஇயி
னினங்களு மன்றிவே றிலரால்.

57\. என்பிற புகல்வ தீரெழு புவன
மெம்பிரா னருந்திய தென்னத்
தன்பசி தணியக் காண்டவ வனத்திற்
சராசர முள்ளவை யனைத்தும்
வன்புட னருந்தி யுதரமுங் குளிர்ந்தான்
வன்னிதன் வடிவமுங் குளிர்ந்தான்
அன்புடை யிருவர்க் காசியும் புகன்று
னசைந்துபோய்த் துறக்கமு மடைந்தான்.

58\. அமரரை முதுகு கண்டகா வலரு
மவரவ ராண்மைக ளுரைசெய்
தமரிலன் றெடுத்த பல்பெருங் கொடியா
லலங்கரித் தமைத்ததந் தேர்மேற்
றமருடன் றுணைவர் நால்வரு நகரச்
சனங்களு மகிழ்ந்தெதிர் கொள்ளத்
தமரமும் முரசு முழங்க வெண்சங்கந்
தழங்கவந் தணிநகர் சார்ந்தார்.

# திருவிளையாடற் புராணம்.

பரஞ்சோதி முனிவர் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள வேதாரணியத்திற் பிறந்தவர். இவர் தந்தையாரின் பெயர் மீனாக்ஷி சுந்தர தேசிகர் என்ப. முனிவர் என்னும் பெயருடைமையால் இவர் துறவியாய் இருந்தமை நன்கு விளங்கும். இவருடைய சரிதத்தில் வேறொன்றும் விளங்கவில்லை. இவரது பாடல் சொற் சுவை பொருட் சுவை செறிந்தது. பத்துப்பாட்டு எட்டுத் தொகை முதலிய சங்க நூல்களின் சொற்களையும் பொருள்களை யும் தமது பாடலில் பல இடங்களில் அமைத்துப் பாடுவதனால், இவர் அந் நூல்களில் நன்கு பயின்றவராதல் வேண்டும். இவர் பாடிய நூல்கள் வேதா ரணியத் தல புராணமும் திருவிளையாடற் புராணமுமாம். இவர் காலம் இற்றைக்கு ஏறக்குறைய 300 ஆண்களுக்கு முன் என்ப.

திருவிளையாடற் புராணம் என்பது மதுரையில் எழுந்தருளியிருக் கும் சோம சுந்தரக் கடவுளுடைய அருள்விளையாட்டுக்களைக் கூறுவது. இவ்வருள் விளையாட்டுக்களைத் தொகுத்தும் விரித்தும் கூறும் நூல்கள் பலவுள. தொகுத்துக் கூறுவது கடம்பவன புராணம். விரித்துக் கூறுவன பரஞ்சோதிமுனிவர் இயற்றிய இந்தத் திருவிளையாடற் புராணமும், பெரும்பற்றப் புலியூர் நம்பி செய்த திருவிளையாடலும், அந்தாரியப்பர் செய்த சுந்தரபாண்டியமுமாம். இவற்றுள் சுந்தர பாண்டியந் தவிர மற்றவை அச்சிடப்பட்டுள்ளன.

# மண்சுமந்த படலம்

1. பண்சு மந்தமறை நாடரும் பொருள்ப தஞ்சு மந்தமுடி யார்மனம்
புண்சு மந்ததுயர் தீர வந்தபரி நரி களாயடவி போனபின்
விண்சு மந்தசுர நதியெனப் பெருகு வித்தவைகையிது விடையவன்
மண்சு மந்துதிரு மேனி மேலடிவ டுச்சு மந்தகதை யோதுவாம்.

2 கருங்க டற்றிரையி டைக்கி டந்துசுழல் கலமெனக்கன முகடளாய்
வரும்பு னற்பரவை யுட்கி டந்து நகர் மறுகி யுட்கமற வேலினன்
ஒருங்க மைச்சரைவிளித்து நீர்கரைசு மந்தொதுக்கிவருமோத நீர்ப்
பொருங்க தத்தினைய டக்குவீரென வமைச்சருந் தொழுது போயினர்.

3. வெறித்த டக்கைமத யானை மந்திரிகள் வேறு வேறுபல குடிகளுங்
குறித்தெ டுத்தெழுதி யெல்லை யிட்டளவு கோல் கிடத்திவரை கீறியே
அறுத்து விட்டு நகரெங்கணும் பறை யறைந் தழைத்துவிடுமா ளெலாஞ்
செறித்து விட்டவ ரவர்க்க ளந்தபடி செய்மி னென்றுவரு வித்தனர்

4. மண்டொ டுங்கருவி கூடையாளருமரஞ்சு மந்துவரு வார்களும்
விண்டொடும்படி நிமிர்ந்து வண்டுபடு விரிபசுந்தழைப லாலமுங்
கொண்ட திர்த்துவருவாரும் வேறுபல கோடி கூடிய குழாமுநீர்
மொண்ட ருந்தவரு மேகசால மெனவரு புனற்கரையின் மொய்த்தனர்.

5. கிட்டு வார்பரி நிறுத்து வாரரவுருட்டு வாரடிகிடத்துவார்
இட்டு வார்தழைநி ரப்பு வார்விளி யெழுப்புவார் பறையி ரட்டுவார்
வெட்டு வார்மண லெடுத்துவார் செலவெருட்டுவார் கடிது துடுமெனக்
கொட்டு வார்கரைப ரப்புவாருவகை கூறுவார்குரவை குழறுவார்.

6. கட்டுவார்கரையு டைப்பு நீர்கடுகல் கண்டு நெஞ்சது கலங்குவார்
மட்டி லாதமுனி வென்னை யன்னையினி யாது கென்றெதிர்
வணங்குவார்
கொட்டுவார்மணலுடைப் படங்கமகிழ் கொள்ளுவார் குரவை
துள்ளுவார்
எட்டு மாதிரமு மெட்ட வாயொலி யெழுப்புவார் பறையிரட்டுவார்.

7. இந்நிலை யூரிலுள்ளார் யாவர்க்குங் கூலியாளர்
துன்னி முன்னளந்த வெல்லைத் தொழின்முறை மூண்டு செய்வார்
அந்நிலை நகரின் தென்கீழ்த் திசையுளா ளளவிலாண்டு
மன்னிய நரைமூ தாட்டி யொருத்திபேர் வந்தி யென்பாள்.

8. செவியுண வானவேத சிரப்பொருளுணர்ந்து செந்தீ
அவியுண வூட்டு மீச னன்பரி னுற்ற நோற்ற

தவநிறை பேறு துய்ப்பாள் தாயிலார்க் கன்னை யொப்பாள்
சுவையுறு பிட்டு விற்றுண் டொழிலினள் தமியளாவள்.

9. வைகலு மவித்த செவ்விப் பிட்டினை மருங்கு நான்கு
கைகளாய் முளைத்த முக்கட் கரும்பினை யரும்புமூரற்
செய்கதிர் முகத்தா னந்தத் தேறலை யாலவாயெம்
ஐயனை யகத்தா னோக்கி யன்பினு லருத்தி விற்பாள்.

10. வளைந்த மெய்யுடையஅந்த மாதவ நரைமூ தாட்டிக்
களந்தபங் கடைப்பான்கூலி யாள்கிடை யாம லாற்றத்
தளர்ந்தினி யென்னோ மன்னன் தண்டிக்கி னென்செய் கேனென்
றுளந்தடு மாறிக்கூட லுடையநா யகனையுன்னு.

11. பிட்டு விற்றுண்டு வாழும் பேதையே னிடும்பை யென்ப
தெட்டுணை யேனு மின்றி யிரவியெங் கெழுகென் றின்னாள்
மட்டு நின்னருளா லிங்கு வைகினேற் கின்று வந்து
விட்டதோ ரிடையூ றைய மீனவ னாணை யாலே.

12. துணையின்றி மக்களின்றித் தமரின்றிச் சுற்ற மாகும்
பணையின்றி யென்று கொள்வார் பிறரின்றி பற்றுக் கோடாம்
புணையின்றித் துன்பத் தாழ்ந்து புலம்புறு பாவி யேற்கின்
றிணையின்றி யிந்தத் துன்ப மெய்துவ தறனோ எந்தாய்.

13. தேவர்க்கு மரியனுந் தேவனே யன்ப ராவர்
யாவர்க்கு மெளிய னுகு மீசனே வேந்த னணைக்
காவற்செங் கோலார் சீற்றங் கடுகுமுன் கூலியாளாய்
ஏவற்செய் வாரைக் காணே னேழையே னினியென் செய்கேன்.

14. குறட்குநீ ரருத்தி வைகைக் குடிஞையா யொழுகுங் கங்கை
அறற்குழல் பிரிவி னாற்று தன்பினு லவளைக் காண்பான்
மறக்கயல் நெடுங்கணாளை வஞ்சித்து வடிவ மாறி
புறப்படு வாரைப் போலப் போதுவார் போதமூர்த்தி.

15. அழுக்கடைந்த பழந்துணி யொன்றரைக் கசைத்து விழுத்தொண்டர்
குழுக்கடந்த இண்டைநிகர் சுமையடைமேற் கூடைகவிழ்த்
தெழுக்கடந்து திசைகடந்திட் டிணைகடந்த திருத்தோள் மேல்
மழுக்கடைந்து விளங்கியவாய் மண்டொடு திண்படையேந்தி.

16. திடங்காதல் கொண்டறவோர் திருவேள்வி தருமமுதும்
இடங்காவல் கொண்டுறைவா ளருத்தமுது மினிதுண்டும்
அடங்காத பசியினர்போ லன்னைமுலைப் பாலருந்த
மடங்காத பெருவேட்கை மகவுபோற் புறப்பட்டார்.

17. ஆலுமறைச் சிரமுடியா ரடிக்கமல நிலஞ்சூடக்
கூலிகொடுத் தெனைவேலை கொள்வாருண் டோஎன்றென்
றோலமறைத் திருமொழி போலுரை பரப்பிக் கலுழ்கண்ணீர்
வேலையிடைப் படிந்தயர்வாள் வீதியிடத் தணைகின்றார்.

18. தந்தைதாய் பிறரின்றி வருகின்ற தனிக்கூலி
மைந்தனர் வாய்மலருங் குரல்கேட்டு வந்தியுந்தன்
சிந்தையா குலமிழந்து நல்கூர்ந்தார் செல்வமிகத்
தந்தபோ தெழுமகிழ்ச்சி தலைக்கொள்ளப் புறம்போந்தார்.

19. அன்னையெனத் தன்பாலின் னருள்சுரந்து வருகாளை
தன்னையழைத் தெனக்களந்த கரையெடுத்துத் தருவாயோ
என்னவிசைத் தனளாக அடைக்கின்றே னெனக்கன்னை
பின்னையதர் கிடுங்கூலி யாதென்றார் பெருமுதியாள்.

20. பிட்டிடு வேனுனக் கென்றா ளதற்கிசைந்து பெரும்பசியாற்
சுட்டிடநான் மிகமெலிந்தேன் சுவைப்பிட்டி னுதிர்ந்த வெலாம்
இட்டிடுவா யதுமுந்தத் தின்றுநா னிளைப்பாறிக்
கட்டிடுவேன் நின்னுடைய கரையென்றார் கரையில்லார்.

21. தெள்ளியடு சிற்றுண்டி சிக்கடைந்த பொதி நீக்கி
அள்ளியெடுத் தருந்தப்பா என்றிட்டா ளரைக்கசைத்த
புள்ளியுடைத் துகில்நீத்தார் புறத்தானை விரித்தேந்தி
ஒள்ளியதென் றவளன்பு முடன்கூட்டி யமுதுசெய்வார்.

22. தந்தையொடு தாயின்றித் தனிக்கூலி யாளாக
வந்தவெனக் கொருதாயா யருள்சுரந்து மாறாத
இந்த இளைப் பொழித்தனையே யினிவேலைத் தலைச்சென்றுன்
சிந்தைகளிப் பெழவேலை செய்வேனென் றிசைத்தெழுந்தார்.

23. தந்திவாய் மருப்பிடறி வருங்குடிலைத் தடங்கரையில்
வந்தியான் வந்திபா ளென்றேட்டில் வரைவித்துப்
புந்தியா லுரையானாற் பொருளினு ளளப்பரிய
அந்திவான் மதிச்சடையார் கரையடைப்பா ராயினர்.

24. வெட்டுவார் மண்ணைமுடி மேல்வைப்பார் பாரமெனக்
கொட்டுவார் குறைத்தெடுத்துக் கொடுபோவார் சுமடுவிழத்
தட்டுவார் சுமையிறக்கி யெடுத்ததனைத் தலைபடியக்
கட்டுவா ருடன்சுமந்து கொடுபோவார் கரைசொரிவார்.

25. இவ்வண்ண மிவரொருகா லிருகால்மண் சுமந்திளைத்துக்
கைவண்ண மலர்கன்றக் கதிர்முடிமேல் வடுவழுந்த

மைவண்ண னறியாத மலரடி செம்புனல் சுரந்து
செவ்வண்ணம் படைப்பவொரு செழுந்தருவின் மருங்கணைந்தார்.

26. தருமேவு மலைமகளுஞ் சலமகளு மறியாமற்
திருமேனி முழுதுகில மகள்தீண்டித் திளைப்பெய்தக்
குருமேவு மதிமுடியைக் கூடையணை மேற்கிடத்தி
வருமேரு வனையார்தம் வடிவுணர்ந்து துயில்கின்றார்.

27. அத்தருவே ஆலநெடுந் தருவாக அலைபுரட்டித்
தத்திவரும் புனலடைப்பார் சனகாதி முழுதுணர்ந்த
மெய்த்தவராய்க் கண்களிப்ப மெய்யுணர்ச்சி மோனமயச்
சுத்தவுருத் தெளிவிப்பா ரெனத்துயிலுந் துயிலுணர்ந்தார்.

28. ஆடுவார் சாமமெனத் தித்திக்கு மமுதஇசை
பாடுவார் நகைசெய்வார் தொழில்செய்வார் பராக்கடையக்
கோடுவார் மணல்குவிப்பார் குதிப்பார் தூளெழ அடிபாய்ந்
தோடுவா ருடன்மீள்வா ருன்மத்த ரெனவிருப்பார்.

29. வேலையினு லறவருந்தி யிளைத்தார்போல் மெய்வேர்வை
காலமிசை மூச்செறிந்து வாயொலியாற் காற்றழைத்துச்
சாலநெடும் பசியினர்போற் றளர்ந்தடியா ளிடும்பிட்டின்
மேலடைந்த விருப்பினராய் மீண்டுமவள்பா லணைவார்.

30. இடும்பைகோய் வெள்ளநீந்தி யின்பநீர் வெள்ளத் தாழ்ந்த
கொடும்புற மூதியாள் முன்போய்க் கூறுவார் கோலுக்கேற
இடம்படு சுரைக ளெல்லா மடைபடு கின்ற இன்னங்
கடும்பசி யுடையே னன்னே பிட்டிடு கடிதி னென்றார்.

31. ஆங்கவ ளப்போதட்ட சிற்றுண வளித்தாளையர்
வாங்கியங் கையுகாவுங் கனலெழ வாயிற்பெய்து
பாங்கிரு கொடி றமொற்றிப் பதமுறப் பருகிக்கொண்டு
நீங்கிமுன் போலப்போந்து நெடுங்கரை யடைக்கலுற்றார்

32. பிட்டுவாய் மிதப்ப வுண்பார் பெருவலி யுடையார் போல
வெட்டுவா ரெடுத்த மண்ணைக் கொண்டுபோய் வேற்றுப் பங்கிற்
கொட்டுவா ருடைப்புமாறுங் கொள்கைகண் டார்த்துத் திண்டோள்
தட்டுவா ரயல்நின்றோரைத் தழுவுவார் களிப்புத்தாங்கி.

33. எடுத்தமண் கூடையோடு மிடறிவீழ் வார்போ லாற்றின்
மடுத்திட வீழ்வார்நீந்தி வல்லைபோய்க் கூடைதள்ளி
எடுத்தகன் கரைமேலேறி அடித்தடித் தீரம்போக்கித்
தொடுத்த கட்டவிழ்ப்பர் மீளத்துன்னுவர் தொடுவர் மண்ணை.

34\. கொட்டுமண் சுமந்துசெல்வர் கூடையை யுடைப்பில்வீழத்
தட்டுவரெடுப்பார் போலத் தாவிவீழ்ந் தலையிலோட
விட்டொரு மரத்தைப்பற்றி மிதப்பர்திண் கரையிலேற
முட்டுவர் சுழியிலாழ்வர் சேட்சென்று முளைப்பர் மீள்வர்.

35\. கொட்டினைக் கழலப்பார்ப்பர் கோப்பர்கோ லிசையாப்பிட்டுத்
தட்டுவ ருயிர்ப்புவீங்கித் தள்ளநின் றிளைப்பர்கச்சிற்
பிட்டினை நுகர்வர்வேலை வினைகெடப் பிறர்க்கு மள்ளி
இட்டுமா னோச்ச நோக்கி நகைப்பர்கை யிரண்டுந்தாக்கி.

36\. வானத்தின் மண்ணிற் பெண்ணின் மைந்தரிற் பொருளிலாசை
தானற்றுத் தமையு நீத்துத் தத்துவ முணர்ந்த யோகர்
ஞானக்கண் கொண்டேயன்றி நாடருஞ்சோதி மண்ணோர்
ஊனக்கண் கொண்டுங்காண உடன்விளை யாடல்செய்வார்.

37\. அருளினா லுலக மெல்லா மாக்கியு மளித்து நீத்தும்
பெருவிளையாடல் செய்யும் பிறைமுடிப் பெருமானிங்ஙன்
ஒருவிளையாடல் செய்ய வோச்சுகோற் கையராகி
அருகுநின் றேவல்கொள்வா ரடைகரை நோக்கப்புக்கார்.

38\. நெட்டலை யொதுங்கியோட நிவப்புறவரை போலிட்டுக்
கூட்டிய கரைகளெல்லாங் கண்டுகண் டொப்புநோக்கி
அட்டமே செல்வார் திங்களாயிரந் தொழுவாள் பேரால்
விட்டபங் கடைபடாமை கண்டனர் வெகுளி மூண்டார்.

39\. வந்திக்குக் கூலியாளாய் வந்தவன் யாரென்றோடிக்
கந்தர்ப்ப னெனநேர்நின்ற காளையை நோக்கி யேடா
அந்தட்பங் குள்ளவெல்லா மடைபட்ட தெவன்நீ யின்னம்
இந்தப்பங் கடையாய் வாளாதிருத்தியால் தம்பியென்றார்.

40\. வேறுரையாது தம்மை யுணர்ந்தவர் வீறுதோன்ற
ஈறிலானிறுமாப் பெய்தி யிருந்தனனாக மேலிட்
டாறுவந் தடுத்தபங்கி லடைகரை கல்லிச்செல்ல
மாறுகொண் டோச்சவஞ்சி மயங்கினார் வலியகோலார்.

41\. பித்தனோ இவன்றா னென்பா ரல்லது பேய்கோட்பட்ட
மத்தனோ இவன்றா னென்பார் வந்தியை யலைப்பான்வந்த
எத்தனோ இவன்றா னென்பா ரிந்திர சாலங்காட்டுங்
சித்தனோ இவன்றா னென்பா ராரென்றுந் தெளியோ மென்பார்.

42\. பாடல் விஞ்சையனோ என்பார் பண்ணினாற் பாணிக்கேற
ஆடல் விஞ்சையனோ என்பார் அரும்பெறற் செல்வத் தாழ்ந்து
வாடிய மகனோ என்பார் இசைபட வாழ்ந்துகெட்ட
ஏடவிழ் தாரினாருள் யார்மகனிவன் கொலென்பார்.

43. கரும்பனும் விரும்பநின்ற கட்டழ குடையனென்பார்
அரும்பெற லிவன்றன்கூலிக் காட்செய்த தெவனேவென்பார்
இரும்பெருங் குரவரற்ற தமியனே என்பார் வேலை
புரிந்தவனல்ல னென்பா ரதுமேனி புகலுமென்பார்.

44. கூலியுங் கொண்டான் றனே கணக்கிலுங் குறிக்கச்சொன்னன்
வேலையுஞ் செய்யானின் சொல் விளம்பினுங் கேளான்கல்லின்
பாலறை முளையேபாகிப் பராமுகம் பண்ணிநின்றன்
ஏலநாமிதனை வேந்தற் குணர்த்துது மென்று போனர்.

45. தலைமகன் திருமுன் தாழ்ந்து சாற்றுவா ரடிகேளிந்த
அலைபுனல் நகரார் தத்தம் பங்கெலா மளந்த வாற்றன்
மலையினும் வலியவாகச் சுமந்தனர் வளைந்த சிற்றாள்
விலைநரை யாட்டிதன் பங்கடைத்திலள் வென்றிவேலோய்.

46. வேளையும் வனப்பினலே வென்றவ னெருவன் வந்தி
ஆளென அங்கேவந்து பதிந்தன னரசர் செல்வக்
காளைபோற் களிப்பன் பாடுமாடுவன் காலம்போக்கி
நீளுவன் வேலையொன்று நெஞ்சினு நினைத்தல் செய்யான்.

47. ஆண்டகை வனப்பைநோக்கி யடிக்கவுங் கில்லேமஞ்சி
ஈண்டினே மென்றுகூற இம்மென அமைச்சரோடும்
பாண்டிய னெழுந்து நாம்போய் பங்கடை பட்டவெல்லாம்
காண்டுமென் றெறிநீர் வைகைக்குடினையங் கரையைச்சார்ந்தான்.

48. எடுத்ததிண் கரைகளெல்லா மிறைமக னுள்ளத்தோகை
மடுத்தன னேக்கிச் செல்வான் வந்திபங் கடைப்பாரின்றி
அடுத்தநோன் கரையுங் கல்லியழித்தெழு வெள்ளநோக்கிக்
கடுத்துநின் றெங்குற்றனிக் கரைசுமந் தடைப்பானென்றன்.

49. வள்ளறன் கோபங்கண்ட மாறுகோற்கைய ரஞ்சித்
தள்ளருஞ் சினத்தராகித் தடக்கைதொட் டீர்த்துப்பற்றி
உள்ளொடு புறங்கீழ் மேலாயுயிர்தொறு மொளித்துநின்ற
கள்வனை யிவன்றன்வந்தி யாளெனக் காட்டி நின்றர்.

50. கண்டனன் கனன்றுவேந்தன் கையிற்பொற் பிரம்புவாங்கி
அண்டமு மளவிலாத வுயிர்களு மாகமாகக்
கொண்டவன் முதுகில்வீசிப் புடைத்தனன் கூடையோடு
மண்டனை யுடைப்பிற்கொட்டி மறைந்தனன் நிறைந்த சோதி.

# ஸ்ரீமத் பாகவத புராணம்

இந்நூல் பாண்டி நாட்டு நிம்பை நகரில் வாழ்ந்த செவ்வைச் சூடுவார் எனும் புலவரால் தமிழில் இயற்றப்பெற்றது. ஆரியப்பப் புலவர் என வழங்குவது தவறென மகா வித்துவான். ரா. இராகவய்யங்கார் அவர்கள் நன்கு விளக்கி இருக்கின்றனர். செவ்வைச் சூடுவார் வடமொழி தென் மொழி ஆகிய இருமொழிகளிலும் வல்லவர்.

வடமொழி பாகவத புராணத்தை இவ்வாசிரியர் தமிழாற் பாடினர். இதற்கு 'விண்டு பாகவதம்' என்னும் மறுபெயரும் உண்டு. இது பன்னிரெண்டு கந்தங்களையுடையது ; 4970 விருத்தங்களை உடையது. இவர் பதினாறும் நூற்றாண்டினர் என்பர்.

# ஸ்ரீமத் பாகவத புராணம்

## பிருது மன்னன்கதை யுரைத்த அத்தியாயம்

1. மதும ணக்கு மலர்த்துள வோனெனும்
அதிர்க டற்புவி யாண்ட பிருதுமன்
கதையு னக்கிவட் கட்டுரைப் பேனென
விதுர னுக்கு முனிவன் விளம்புமால்

2 துகளி லாத துருவ னளித்திடு
மகவு வற்சரன் மார்பகம் புல்லிய
திகழு நல்லெழிற் சேட்டை யெனுந்திரு
இகலி லாவிரு மூவரை யீன்றனள்

3. மருவு வற்சரன் மைந்த ரறுவருள்
பொருவி லாதபுட் பாருண னென்பவன்
பிரபை தோடை யெனப்பெயர் பெற்றிடும்
இருவர் காத லிளநல மாந்தினன்

4. விரைசெய் தாரணி மென்குழன் மேனறை
பெருகு காதற் பிரபை யளித்தனள்
கருது காலை கவின்செயு முச்சியோ
டுரைசெய் மாலையின் பேருறு வோரையே

5. நேச மார்பிர தோட னிசிமணம்
வீசு தாம வியுட்டி யெனப்புவி
பேசு பேரொரு மூவரைப் பெற்றனள்
தூசு லாமிடை யாளெனுந் தோடையே

6. இகல்வி யுட்டியென் பான்வட சொல்லினுட்
சகல காத்திக் குறும்பெயர் சார்ந்திடும்
மகவை யீன்றனன் மற்றவன் மைந்தனும்
புகலும் வேற்கைப் புகழ்மனு வேந்தனே

7. மனுவெ னும்பெயர் பெற்றவன் மைந்தராம்
புனித மார்புரு குச்சர் முதலினோர்
அனைய பன்னிரு வோரி லரசனும்
முனிவி லானருண் முற்றிய வுன்மகன்

8. வாழி யுன்மகன் மாதவத் தாற்பெறும்
ஆழி மைந்த ரறுவரம் மைந்தரின்
ஆழி சூழு மகனில மேழினும்
ஆழி யொன்று செலுத்தின னங்கனே

9. வந்த வாதி மனுமுத லாகவீர்
ஐந்தென் றோது தலைமுறை யானங்கன்
விந்தை சேர்புயன் வேட்டனன் வாண்முகட
இந்து நேரும் சுநீதையை யென்பவே

10. கொங்கு தேர்ந்தளி கூட்டுணு நாண்மலர்த்
தொங்கன் மாலைத் துருவன் வழிவரும்
திங்கள் வெண்குடை யான்செய்ய கோலினன்
அங்க னென்பவன் ஆற்றினன் வேள்வியே.

11. ஆற்றும் வேள்விச் சொரிய வியங்கையால்
ஏற்றி லார்வந் திமையவ ரென்றலும்
மாற்ற ருந்திறன் மன்னவன் காரணம்
சாற்று வீரென வந்தணர் சாற்றுவர்

12. பிள்ளை யில்லவர் டெய்யவி வானவர்
கொள்ள லார்பைங் குழவி பிறந்திட
உள்ள வாறினி தோமம் புரிகெனப்
புள்ளு யர்த்தவற் போற்றிப் புரிந்தனன்

13. மின்னி லங்கு தொடியன் வெண் டூசினன்
பொன்னந் தாரினன் பொற்கல மீதுபால்
அன்ன மேந்தி யொருவ னழலிடைத்
துன்னு சோதி துவன்றுறத் தோன்றினன்

14. பரவை வெண்டிரைப் பட்ட வமுதினைப்
புரையு மன்னது பொற்றொடித் தேவிபால்
அரசு நல்க வருந்தினள் சூற்கொளா
விரைசெய் பூங்குழல் வேனனை யீன்றனள்

15. காதன் மைந்தன் வளர்ந்து கலைபல
ஓத வோத வுணர்வு குறைந்தனன்
வேத நீதி யொழுக்கம் விடுத்தனன்
ஆதி யாற வறம்பிழைத் தானரோ

16. அன்னை கூற்றின் மடமக ளாதலால்
இன்ன தன்மைய னாயின னேழ்புவி
துன்னு கீர்த்தித் துருவ னெனப்படும்
மன்னர் மன்னன் மரபினிற் றோன்றினன்

17. மழக ளிற்று மருவலர் போர்கடந்
தழலும் வேற்படை யங்க னறநெறி
ஒழுகு சேயை யுயிர்த்தில மென்றிரும்
பொழிலி ரங்கப் புகுந்தனன் கானகம்

18. வரிச்சு ரும்பு வழிமது மாந்தவாய்
விரிக்கும் பூந்தொடை வேந்தர் திறையிடக்
குறைக்கும் வேலைமண் கொண்டு கொழுந்திச்
செருக்கு மிக்கனன் செஞ்சிலை வேனனே

19. உறைந்து தேவ ரவியுண கான்மறை
அறந்தெ ரிந்தவ ராற்றுநல் வேள்வியைத்
துறந்து போமெனச் சொன்முர செற்றியே
மறந்த வாதவன் மாற்றுவித் தானரோ

20. வீங்கு மாதவர் வேள்விசெய் தானனி
ஓங்கு வேந்த ருயர்வர் திருவென
ஆங்கு மேவி யறிஞ ரறைதச
வாங்கு வார்சிலை மன்னவன் கூறுவான்

21. சீய மன்ன செழுநில வேந்தலால்
போயொர் தெய்வ முளதெனப் போற்றுவார்
தூய கேள்வர்ப் பிழைத்துறு சோரர்பால்
நேயம் வைத்த மகளிரை நேர்குவார்

22. துன்னு வெண்ணில தூற்று வலம்புரி
மன்னு செங்கை மணிநிற வண்ணன்யான்
என்னை யல்லது தெய்வமின் றேயெனப்
பன்னி யென்னை பரவுமி னென்றனன்

23. ஆற்றன் மேய வமைச்சர் கழறிடும்
கூற்றைக் கொண்டு கொடுநெறி மேற்படர்
வேற்றி றற்படை வேனனை வேதியர்
சீற்றத் தீயிற் செகுத்தன ரென்பவே

24. விண்ண டைந்திடும் வேன னுடம்பினை
எண்ணெய் பெய்ததோர் தோணியி லிட்டனள்
கண்ண கன்புவி காக்குநர் யாரெனத்
தண்ணந் தாரவன் றாய்புரந் தாளரோ

25. இலைப டுத்த வினமலர்ப் பூந்தொடை
மலைய டுத்ததோண் மன்ன னிறத்தலும்
அலைய டுத்த வகன்புவி யெங்கணும்
தலையெ டுத்த குறும்பு தலைத்தலை

26. நிலங்க ரந்தது நீள்வளங் கள்ளர்தம்
குலம்ப ரந்தது கூட்டுண வவ்வழிக்
கலந்த வேதியர் தம்மிற் கடைந்தனர்
உலந்த வேன னுடல மெடுத்தரோ

27. நீல மேனிய னீளொளி வெஞ்சுடர்
போலி லங்கு செங் குஞ்சியன் பொங்கழல்
ஆல மென்ன வொருவ னதிர்கழற்
காலின் வந்து பிறந்தனன் காண்டக

28. அல்லினல் வகுத்தென வாங்குத் தோன்றிய
வில்லுடைத் தடக்கையான் விளைப்ப தென் கொலோ
சொல்லுமி னீரெனத் தொழுகு லத்தவர்
நில்லென வுரைத்தலி னிடாத னுயினன்

29. வேட்டுவ ரெனப்பெயர் மேவி விண்டொடு
கோட்டுமால் வரையினுங் கொங்கு விம்முபூங்
காட்டினும் வாழ்பவர் காய்சி னத்தகூர்
வாட்டிற லன்னவன் வழியிற் றோன்றினர்

30. தேன்ற தும்புசெங் தாமர செற்றொளி
கான்ற திங்கள் வதனங் கவினமுன்
வான்ற ழைத்திட வந்த வழுதெனத்
தோன்றி னாளிடக் கையினோர் தோகையே

31. இருளை நுங்கு மெரிமணிப் பொற்றொடி
சொரியு நீள்சுடர் தோன்று வலக்கையின்
பிருது வென்னும் பெருநில மன்னவன்
உருவ ஞாயிறு போல வுதித்தனன்.

32. அலர்ப் பொலம் பொகுட்டின் வாழு மந்தண னுங்கு நண்ணி
விலக்கருங் களிநல் யானை வெந்திறல் விளங்கு வேனன்
வலக்கரங் கடைய வந்து தோன்றிய மன்னர் மன்னன்
இலக்கணக் கிடக்கை நோக்கி யீங்கிவன் மாலே யென்றான்

33 ஏந்தெழில் வாய்ந்த வேன னிடக்கரங் கடையத் தோன்று
மாந்தளி ரனைய மேனி மழைமதர் நெடுங்க ணங்கை
காந்தியுங் கவினு நோக்கிக் கனியிளஞ் சுரும்பர் பாடத்
தேங்துளி பிலிற்றுங் தண்பூங் திருமக ளிவளே யென்றான்

34. பில்குதேன் கமழ லங்கற் பிருதுவென் றுரைக்கப் பெற்ற
கொல் களிற்றுழவற் கந்த வருச்சிபைக் குவளை தாழ
வில்லுமிழ் கணையை வென்று வேலினுக் கோலை விட்ட
சில்லரித் தடங்க ணாளைத் திருமணம் புணர்த்தி னனல்

35. அரியணை வழங்கின னளகை காவலன்
திருமுடி நல்கினன் தேவர் கோமகன்

வருணன்வந் தளித்தனன் வட்டவெண் குடை
விரிநிலாக் கவரிகால் வேந்தன் வீசினன்

36. கலைமக டிங்களங் கலையெ னக்குலாய்
அலர்கதிர் விரிக்குமுத் தார மீந்தனள்
பலர்புகழ் வியாவியாம் பரிதி போற்றிகழ்
மலர்மக ணிதித்திரு மணப்ப நல்கினள்.

37. பார்மகள் வழங்கினள் பசும்பொற் பாதுகை
வார்கடல் குளிறுவெள் வளைய ளித்ததால்
கார்தவழ் குன்றொடு கல்லென் மாகதி
கூர்நிதிக் குப்பைகள் கொடுவந் துற்றன.

38. கள்ளவிழ் மலரினன் கவய நல்கினன்
அள்ளிலைத் துளவின ளாழி நல்கினன்
வெள்ளியம் பொருப்புறை விமல னீந்தனன்
தெள்ளொளி பொதுளிய செம்பொன் வாளரோ.

39. கலைமதி சதமெனக் கதிர்செய் கேடகம்
மலைமக ளுதவினண் மறலி நல்கினன்
உலைவறு வெங்கதை யுஞற்று மாதவர்
நிலைபெற வழங்கினர் நிகழ்த்து வாழ்த்தரோ.

40. வலம்படு சிலையழற் கிறைவ ழங்கினன்
இலங்குசெங் கதிர்களை யிரவி யீந்தனன்
அலங்குளை வெண்பரி யளித்த தம்புலி
பொலங்கொடித் தேர்மயன் புரிந்து நல்கினன்.

41. மருவிரி மலரின னன்ன மாதவர்
விரைகமழ் பூம்புன லாட்டி வேந்தனை
அரியணை யிருத்தின ரலங்கு செங்கதிர்
சொரிதரு மணிமுடி சூட்டி னாரரோ.

42. அந்தர துந்துபி யதிர்ந்த தாய்பிழி
சிந்துபொற் றருமலர் தேவர் சிந்தினர்
வந்தன ராடினர் வான மங்கையர்
பைந்தொடை யாழினோர் பாடன் மேயினர்.

43. சந்திர னுயிர்க்கெலாந் தாப நீக்கலான்
இந்திர னுலகினி தளிக்க லானெனச்
சுந்தர வரசனை முனிவர் சொற்கொடு
வந்தியர் முதலினோர் வழுத்தன் மேயினர்.

44. மாற்றலர்க் கணுகுரு மாட்சி யானனல்
கூற்றுவ னறம்பிழைத் தோரைக் கோறலான்
ஏற்றநற் றாதரா னெங்கு நாடலான்
காற்றினுக் கிறையெனக் கருத லாகுமே.

O-,17L
N47

45. அளவிடற் கரியநல் லாற்றன் மேவலான்
வளமலி வாரிதி வருண னீகையான்
ஒளிதரு மிருநிதிக் குறையு ளாகையான்
களிசெயு மளகையர் காவ லாளனே.

46. அணிசரா சரஞ்சம ஞகப் பார்த்தலான்
தணிவில்வெங் கதிர்க்குழாந் தழைக்கும் வேந்தனல்
உணர்வுற னோன்மையி னுயிர ளித்தலான்
மணிதிகழ் வாரிசூழ் வைய மங்கையே.

47. பார்மகள் பசுவெனக் கறந்து பல்வளம்
ஆர்தர வேள்விக ளாற்றி யாண்டபின்
தேர்சன காதியர் மேவ வுட்டெளிந்
தோர்பதம் பெறுமிவ னென்ன வோதினர்.

48. என்றுசொற் றனர்கடா மினிது வப்புற
மன்றலம் பூந்தொடை மாசி லாத்துகில்
குன்றென வருநிதிக் குவைவ ழங்கினன்
வென்றியங் குடுமிவேல் வேந்தர் வேந்தனே.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No.
111050
EGMORE, MADRAS-600 008

49. செறிந்தசெங் கதிரவன் றிசைப்பத் தெள்ளிதின்
மறிந்ததெண் டிரையிரு நிலம்வ ளங்கொள
எறிந்தது குறும்பிரு ளேழி சைச்சுரும்
புறைந்தபூந் தாரினு னெற்றை யாழியே.

50. வருந்தினம் பசிக்கனல் வருத்தப் பல்வளம்
கரந்தது நெடுநிலங் காத்தி நீயெனப்
பொருந்துபு மன்பதை புகலக் கேட்டலும்
விரிந்தபூந் தாரவன் வில்லெ டுத்தனன்.

51. திண்டிறன் மன்னவன் சிலையெ டுத்தது
கண்டன னெஞ்சகங் கலங்கி யானுருக்
கொண்டன ளோடினள் குரைக்கும் வெண்டிரை
மண்டிணி மாநில மடந்தை யென்பவே.

52. கோடிய சிலையினன் கொற்ற வம்பினன்
ஆடெழு வனையதோ ளரச னுண்டெழுந்
தோடிய திசையெலா மோடி யொல்குபு
வாடின னின்றனள் வழுத்தி னளரோ.

53. கல்லெனும் புயத்தெனைக் காப்பத் தோன்றிநீ
சொல்லின்யார் காக்குநர் கொற்ற மன்னவர்
மெல்லிய லார்பழி விரும்பி லாரென
மல்லலம் புவிமகள் வழங்கி னாளரோ.

54. ஆடவ ராயினு மலிய ராயினும்
வாடிய நுண்ணிடை மகளி ராயினும்
நீடுயிர்க் கருந்துயர் நினைக்கின் வீட்டுதல்
ஆடுடை யரசர்நல் லறம தாயினும்.

55. என்னைநீ கொல்கலா தினிதி னேம்புதி
மின்னகு பரிதிவேல் வேந்தர் வேந்தநீ
சொன்னன மறுதியான் சுரப்ப லென்றனள்
அன்னவ னருள்சுரந் தறைதன் மேயினன்.

56. கொல்கல னஞ்சலை கொடுக்கல் வேண்டுமால்
பல்வள மென்றிரும் பணைக்கை யானையான்
மெல்லெனக் கூறலும் வேலை சூழ்தரு
தொல்புகழ் நிலமக டொழுது சொல்லுமால்.

57. என்னைமுன் பாதலத் தேன மாகியே
துன்னிவந் தெடுத்தருந் துயரம் போக்கிய
கன்னியந் துளவணி கண்ண னாதிநீ
உன்னருட் கெல்லையா ருரைக்க வல்லரே.

58. அறந்தழைக் திடவரு ளரசி லாமையால்
உறைந்தநல் வளனெலா மொளிப்ப நின்றனன்
கறந்துகொள் கன்றினு லென்று காதல்செய்
நிறைந்தபல் வளனில மங்கை நல்கினள்

59. மனுவிளங் கன்று மானவேற் பிருது மன்னவன் கறந்தனன் பைங்கூழ்
முனிவரர் வியாழ மொருகுழக் கன்று முதுமறை கறந்தன ரமரர்
பனியிரு விசும்பு காப்பவன் கன்றுப் பாற்படக் கறந்தனர் சோமம்
கனகன்மா மதலை வளரிளங் கன்றுக் களிநறுக் கறந்தன ரவுணர்.

60. தென்புலத் தவரங் கௌவியங் கறந்தார் செஞ்சுட ரரியமாக் கன்று
மின்பிறழ் மணிசேர் தக்கன்கன் றுவி டங்கறந் தனகொடும் பாந்தள்
இன்புற வரக்க ரியக்கர்பேய் முதலோ ரிலங்குகண் ணுதலரன் கன்றுக்
கொன்பெறு கபாலந் தனிநனி கறந்தார் குருதியோ டருந்தசை மாதோ

61. கஞ்சநாண் மலர்க்கட் கபிலனே கன்றுக் கறந்தனர் சித்தர்தங் கலையாழ்
விஞ்சைகந் திருவர் கறந்தன ரெழில்சேர் விளங்குதங் காவலன் கன்று
அஞ்சிறைப் பறவை கலுழனோர் கன்று வடர்சினைப் பழுமரங் கறந்த
மஞ்சுரு ழிமய மால்வரை கன்று மணிக்குலங் கறந்தன வரைகள்.

62. இத்திற மூலக மெல்லா மேற்றன கறந்து கொள்ள
அத்தகு சிறப்பு வாய்ந்த வானுருக் கொண்டு நின்று
மொய்த்தவல் லிருள்கால் சீக்கு முழுமணிச் சுடிகை நெற்றிப்
பைத்தலை யரவ மேந்து பார்வளஞ் சுரந்த தன்றே.

63 நிவப்பொடு தாழ்வின் றாக நெடுநிலங் கவர்ந்து கொண்ட
குவட்டிருங் குன்று வல்விற் கோடியா லெறிந்து சாய்த்துக்
கவித்தனன் கவிகை யொன்று களியிளஞ் சுரும்பர் பாய்ந்து
தெவிட்டநுண் டேறன் மாந்திச் செறிநறுந் தெரியல் வேந்தே.

64. நாடெழிற் புரங்களென்று நகரென்று மகரமென்றும்
கேடகம் பாடி யென்றுங் கிளர்குடி சேரியென்றும்
நீடியவரண்க ளென்று நிகழ்த்திடப் பட்டவின்னும்
ஆடலஞ் சிலையானிப்பா ரளித்தநாள் பெற்ற பேரே

65. பிருதிவி யெனும்பேர் பெற்றுப் பெண்ணென விளங்க விப்பார்
ஒருகுடை நிழற்று செங்கோ லுறுபுகழ்ப் பிருது மன்னன்
வரைபுரை மார்பம் புல்லி வரிவிழி வருச்சி யென்பாள்
பொருவரு மெழில்சேர் தந்தண் புதல்வரை யுதவி னாால்.

66. விலங்கிவில் லுமிழு மொண்கேழ் விழுமணி வேலைவீச
நலங்கெழு நதிகளெல்லா நறுநெய்யும் பாலு நல்க
மலர்ந்தபூந் தருக்க ளெல்லா மதுமழை பொழியா நிற்ப
அலங்குளைப் புரவி வேள்வி யாற்றின னரசர் கோமான்.

67. ஒன்றொழி நூறு வேள்வி யாற்றிமற் றொன்று மாற்றா
நின்றுழி பொறுக்க லாற்றா னிரையுளைப் புரவி வெளவி
மின்றிகழ் சடிலந் தாழ்த்து வெண்டலைக் கரத்த னாகிக்
குன்றெறி வயிர வொள்வாட் கொற்றவன் போயினானால்.

68. அரசிளங் குமரன் தன்னை யத்திரி யாங்கு நோக்கிப்
புரவிநீ வல்லை மீட்பாய் போயதென் றுரைத்தா னாக
வரிசிலைத் தடக்கை மைந்தன் வானவர்க் கிறைவன் தன்னை
விரிசடை யுடையானென்று வெகுண்டு தொடுக்கி லானே.

69. இந்திர னாகு மின்னோ னீங்கிவன் றன்னை யேந்தால்
கொந்தழல் வாளி தூற்றிக் கொல்லென முனிவன் கூற
மந்தரம் வெள்கு தோளான் வரிசிலை குழைய வாங்க
அந்தரங் கரந்து நின்றா னமரர்கோன் புரவி விட்டான்.

70. நொறில்வயப் புரவி மீட்டு நுதியழல் வடிவேன் மன்னன்
சிறுவன்வந் தெய்த லோடுஞ் செழுந்தவக் கிழவர் நோக்கி
அறைகழ லரவத் தானை யரசிளங் கோமாற் கோர்பேர்
விறல்விசி தாச்சு வன்றா னிவனென விளம்பி னாரால்.

71. வல்லிருள் விளைத்து வல்லே வானவர்க் கிறைவன் மீட்டும்
வில்லுமிழ் கணையிற் செல்லும் வெம்பரி கவர்ந்து போகக்
கொல்வலீங் கிவனே யென்று குங்குமக் குவட்டின் வீங்கு
மல்லடு குவவுத்திண்டோண் மன்னவன் சீறி நின்றான்.

72. சீறின னெழுந்து வேந்தன் செஞ்சிலை தருக வென்ன
வீறுசால் வேள்வி தன்னின் வெங்கொலை விளைத்த லாகா
கோறுநா மிவனை யின்னே கொந்தழல் நெய்பெய் தென்ன
ஆறறி முனிவர்கூற வடைந்தனன் விரிஞ்ச னாங்கே.

73. மல்லலஞ் சிறப்பு வாய்ந்த வானகம் புரக்கும் வேந்தன்
அல்லியங் கமலச் செங்க ணாழியா னல்ல னேகொல்
கொல்லுத லடுப்ப தன்றாற் கொற்றவா ளரச வென்னாச்
சொல்லலுற் றனனா லம்பொற் றோடவிழ் மலரி னானே.

74. மன்னநீ புரியும் வேள்வி வருபயன் விளைந்தி லாயால்
துன்னருந் தனிவீட் டின்பந் துய்ப்பதே விழைந்து நின்றாய்
இன்னதோர் வேள்வி யொன்று மியற்றுத லொழிதி யென்று
பொன்னுல களிப்பான் றன்மேற் பொருபகை போக்கல் செய்தான்.

75. விரைசெல விவுளி வேள்வி வேட்டவம் மன்னன் றன்பால்
மரகத வண்ணத் தண்ணல் வானவர்க் கிறையோ டெய்திப்
பொருதிறற் குலிச பாணி புரிந்தது பொறுக்கல் வேண்டும்
அரசநீ வெகுளி யுற்றா லருளெவர் கண்ண தென்றான்.

76. விழைவது தருதும் வேந்தே விளம்புதி யென்ன வீழ்ந்து
தொழுதனன் வழுத்திச் செய்ய தோடவிழ் கமலம் பூத்த
மழைமுகில் வண்ண முத்தி வழங்குறு நின்னைக் கண்டும்
அழிவதோர் பொருள்கொள் வார்கொ லறிவின ரென்று சொல்வான்.

77. அள்ளிலைத் துளவப் பைந்தா ரமலநின் சரித மென்னும்
தெள்ளமு தினிதின் மாந்தச் செவிபல வேண்டு மென்னாப்
புள்ளவாம் புலவு வேலான் போற்றலும் பரமன் றானும்
வெள்ளிவெண் குடையா னன்பு வியந்தனன் போயினானால்.

78. திங்களங் கவிகை வேந்தன் செழுங்கதிர்ச் செல்வன்போல
அங்கதி ராழி யொன்றே யாழிசூ ழுலக முய்த்துக்
கங்கைகா ளிந்தி யென்னக் கரைபொரு நதியி னப்பண்
மங்குறோய் குடுமி மாட மாநகர் வைகு நாளில்.

79. மாதவர் முனிவர் சித்தர் வானவர் முதலோர் மொய்ப்பத்
தாதலர் தெரியன் மார்பன் சத்திர வேள்வி யாற்றி
மீதுறு முடிவி னப்பண் வெண்மதி யெனவே நின்று
சோதிசே ரவையுள் ளோரைத் துதித்தன னோக்கிச் சொல்லும்.

80. காவலர்க் கறஞ்செய் வோரைக் காத்தலு மறஞ்செய் வோரைப்
பூவினிற் கடிதருனும் பொருந்துதங் கரும மென்பர்
தாவிலாக் கருமஞ் செய்தே யிருமையுந் தயங்கி னார்வெங்
கோவெனும் வேனனன்றி மனுமுதற் குலத்தி னாரே.

81. திருமகள் கொழுநன் செய்ய சேவடி வணங்கி நீரும்
மருவுநுங் கருமஞ் செய்யின் வயங்குநாற் பயனும் பெற்றே
இருமையும் விளங்கு வீரா லிப்புவி காவல் யானும்
ஒருவிடா தின்ப மெய்தி யுறுவன்மால் பதமு மன்னே.

82. நிறைசுட ரிமையோர் தாமு நெஞ்சமுற் றிலங்கா நின்ற
அறைதழற் கடவு டன்னை யன்பொடும் விளக்கும் வேதத்
துறையறி முனிவர்ப் போற்றிற் றுளவினேன் மகிழு மென்றால்
மறையவர் பெருமை யென்னால் வழுத்துதற் கெளிதன் றென்றான்.

83. என்னலு மவையோர் சொல்வா ரிரணியன் மகவி னாலே
துன்னிய சீரினோடு துலங்கினான் போல நின்னால்
நன்னெறி நீங்கு வேன னவையற விளங்கி னானல்
இன்னெழின் மகப்பெற் றோர்தா மிலங்குவ ரெனுஞ்சொன்மெய்த்தே.

84. தேனிமிர் துளவோன் றாளிற் செறிந்திடு மன்பை நீயிம்
மாநிலத் தரசனாகி மருவிய திறத்தி னாங்கள்
ஈனமொன் றின்றியின்ப மிருமையு மெய்தா நின்றேம்
கோனிவ னெடிது வாழ்தி யெனநனி கூறிப் போயார்.

85. பெண்ணெனத் தனது தொல்லைப் பெயரினால் விளங்கும் வண்ணம்
கண்ணகன் ஞாலங் காக்கும் காவலன் றன்பால் வந்து
நண்ணினர் சனக னாதி நற்றவக் கிழவர் நால்வர்
அண்ணனான் மறையே போல வரும்பெறற் காட்சி மிக்கார்.

86. கௌவைநீர் வேலி மன்னன் கதுமென வெழுந்து தாழ்ந்து
தெய்வமா தவத்தோ ரம்பொற் சேயடிக் கமலம் போற்றி
எவ்வகை கடக்க லாகு மேழ்பெரும் பிறவி வேலை
அவ்வகை மொழிமி னென்ன வருந்தவ ருரைக்க லுற்றார்.

87. பொறிகளை யடக்கித் தன்னைப் புலப்பட வறிந்தா னாயின்
உறுதுயிற் கனவு தன்னி னுற்றிடு படைக ளெல்லாம்
செறிதுயி னீங்கிற் பொய்யாந் திகழ்பவ னொருவன் றான்போல்
நெறியுறு முபாதி நீங்கு நிறைந்ததோ ரறிவாய் நிற்பான்.

88. ஐயதா மறிவோ டிவ்வா றமர்வதற் கெளிதா மேது
மையறு மாலை வந்து மயக்குமோ ரரவு போலும்
பொய்யுமாய் மெய்யு மாகிப் பொலிதரு மாயன் றாளாம்
செய்யதா மரைக்க ணன்பு செய்வதென் றுரைசெய் வாரே.

89. உரவுநீ ருலகமெல்லா முண்டொளி கிளக்குஞ் செஞ்சூட்
டரவணை துயிலு மண்ண லடிப்புணை பற்றி யன்றிக்
கரையழி பிறவி வேலை கடப்பரி தென்று கூறி
மருவிரி தெரியன் மன்னன் மனந்தெளித் தேகி னால்.

90. உடம்பறப் பழுத்த லோடு மொருதனித் திகிரி மன்னன்
விடம்பொழி குடுமி வைவேல் வேந்தெலாம் வந்து தாழ
மடங்கலே றனைய கொற்ற மைந்தனை மௌலி சூட்டி
நடந்தனன் றேவி யோடு நறுமலர்க் கானத் தன்றே.

91. காருறழ் கவிகை மன்னன் கனியொடு கிழங்கு தின்று
நீருணுச் சருக ருந்தா நிறைந்துலாங் காற்று மாந்தா
மாரியிற் புனலிற் றாழ்ந்து மாறிலா திருந்தும் வேனில்
ஆரழ லிடையே நின்று மருந்தவ மயரா தாற்றும்.

92. பூத மைந்தொடும் பொறிகளைப் புகலகங் காரத்
தாதி நாளினிற் றோற்றிய முறையதி னடக்கி
ஏத மில்லகங் காரத்தை மகத்தினி லிருத்தி
ஓது சீர்திகழ் மகத்தினை மாயையி னொடுக்கி

93. இருளு யிர்க்கற விருந்துலா முயிர்ப்பினை யடக்கி
உரைசெய் கின்றவா தாரமோ ராறுமுய்த் ததனால்
பிரம ரந்திரம் பிளந்துயர் பிரம்மா யொன்றாய்ப்
பரம மாகிய பசுந்துழாய் முகில்பத மடைந்தான்.

94. தொடப்பெ றாதது மலர்புரை மேனியள் பூமேல்
நடக்க லாற்றலா நளினமென் சீரடி நங்கை
தடத்த கங்கையாங் தண்டுறை யாடினள் கொழுநன்
உடற்ற ழற்கொளீஇ யொள்ளழன் மூழ்கிவீடுற்றாள்

95. பிருது மன்னவன் பெருங்கதை பெட்பொடு கேட்போர்
விரியு நான்மறை யோரெனின் விழைந்தன பெறுவர்
அரச ராயினேழ் புவியுமோ ராழியுய்த் தாள்வர்
மருவு சீர்திகழ் வணிகரேல் வளர்திரு வுறுவர்.

96. தள்ள ரும்புகழ்ப் பின்னவர் தயங்குமிக் கதையை
உள்ளு வப்பொடு கேட்கினல் லுத்தம ராவர்
பிள்ளை யில்லவர் வினவுறிற் பிள்ளைகள் பெறுவர்
எள்ள ருந்திறல் விதுரவென் றிசைத்தனன் முனிவன்.

97. குருகு லத்தினி லுதித்தவேற் கொற்றவ னென்று
பெருகு மாதவச் சுகமுனிப் பேசின னென்னு
உருகு காதலோ டந்தண ருவப்புற வுரைத்தான்
சொரியுந் தேன்கமழ் துளவினோன் பதந்தொழு சூதன்

# தேம்பாவணி

வீரமாமுனிவர் ஐரோப்பாவிலிருந்து தென் தமிழ் நாட்டிற்கு வந்து திருநெல்வேலி ஜில்லாவில் வடக்கன் குளம் என்னுமிடத்தில் 1714ல் தங்கித் தமது பாதிரிவேலை தொடங்கினர். தமிழ்க் கல்வியை நன்கு பயின்று பாடுந்திறமை பெற்று 1724-ல் இயேசு நாதரின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் 'தேம்பாவணி' என்னும் பெருங் காப்பியம் இயற்றினர் வீரமா முனிவர்க்குப் பெரிதுந் துணிபுரிந்த தமிழர் சுப்பிரதீபக் கவி ராயரென்பவர். சைவராயிருந்து கிறிஸ்தவரானவர்.

இந்நூல் முழுவனுக்கும் வீரமாமுனிவர் பொழிப்புரை எழுதியுள்ளார். முதல் நான்கு படலங்களுக்கு அ. ஆரோக்கியசாமிப் பிள்ளை பதவுரை வரைந்துள்ளார்.

# தேம்பாவணி

## வளன் சனித்தபடலம்

1. அன்னமாதிரு நகரகத்துடற் குயி
ரென்னமாதா விதனினிதில் வீற்றிருந்
தொன்னலார் வெருவுற வுவந்து பாவலர்
சொன்ன பாங்கரு மேற்றுளங்கினனரோ

2. அருளொடு வீங்கிய வகத்தினன் றுளி
மருளொடு வீங்கிய மழைக்கை யான்மலர்ச்
சுருளொடு வீங்கிய தொடையல் மார்பினன்
பொருளொடு வீங்கிய பொறைப் புயத்தினன்

3. பகை செய்வார்க் கிடியெனப் படிந்து போற்றிய
தகை செய்வார்க்கமு தென நாமத்தன்மையா
னகை செய்வார்க் கிளவலாய் நடத்தும் வேலிலான்
மிகை செய்வானுண்மையை விளம்பனன்றரோ

4. மறைவழங்கிய வளங்கொணாட்டிடை சவுலாண்ட
முறை வழங்கிய கால் மறைபகைத்தனர் முகினின்
றுறை வழங்கிய வொப்பெனச்சர மழைவழங்கிப்
பொறை வழங்கியபிலித்தையர் போர் செயவெதிர்த்தார்

5. வேலியாற்கது விடாத்திரு நகரெலா நடுங்க
மாலியாற் கதிர் வகுத்தவாளேந்தினர் நாப்ப
ணலியாற் கரிந் தகல் முகிலுருக்கொடுவேய்ந்த
கோலியாற்றெனுங் கொடியமோரி ராக்கதனெதிர்த்தான்

6. துளிசிறைச் செயு முகில் புகு மிருமலை சுமந்த
வொளி சிறைச் செயு மொருகரும்பருவதமென்ன
வெளிசிறைச் செயும் வியனிருபுயத்து மேற்சிரமே
களிசிறைச் செயுங்கதங்கொடு வெருவுறத் தோன்றும்

7. கூர்த்தபோர் செயக் கூடினர்க் கொருவன் வந்தெய்திச்
சீர்த்த நானவன் சிறந்த போர்தனித் தனித்தாக்கத்
தோர்த்த பாங்கினர் தொழும்பரென்றுருகுவரென்ன
வார்த்தவோகையானகைத் திகழ்வறைந் தறைந்த மைப்பான்

8. பெரிய குன்றமோ பேயதோ பூதமோ வேதோ
வுரிய தொன்றிலாவுருவினைக் கண்டுளி வெருவிக்
கரிய விண்ணிடி கதத்தமின் கொடுவிடுத்தன்ன
வரிய கோலியாற்றறைந்த சொற் கேட்டனர் மருண்டார்

9. நன்னெடும்படை நடுக்குறி வெருவிய தன்மை
கன்னெடுங்குவ டொத்தனன் செருக்கெழக்கடுத்துப்
பன்னெடும் பகல் பரமனைப்பகைப்பவு மிகழ்ந்த
சொன்னெடும்பகை துடர்ந்தனனெவரையு நகைப்பான்

10. தாங்குவாரிலாச் சாற்றியவுரைகள் கேட்டெவரு
நீங்குவாரென நிருபனுமயருதன் னெஞ்சிற்
கேங்குவானெவ னெதிர்ந்தவவ் வரக்கனை வென்றா
லாங்கு நானவற் கென் மகளளிக்கு வேனென்பான்

11. இன்னவாய்பகனாற்பது மிரிந்த பின்னண்ணர்
முன்னர் மூவரே முரண் செயப் போயினரவரைத்
துன்னவாசை யாற்றுர்ந்திளதா வீதனெய்தி
யன்ன யாவையு மஞ்சினரறைதலுங் கேட்டான்

12. கேட்ட வாசகங் கிளர்திற நெஞ்சிடத் தெரியை
யீட்டலாமென வெழுந்துள நினைந்தவையாக்கிக்
காட்டவாய்மையிற் கடந்தவல் கடவுளை நகைப்ப
வேட்ட லால்விளி விழுங்கியகயவனாரென்றான்

13. கைவயத்தினாற் கருத்திடத்துடலினுங் கோங்கும்
பொய் வயத்தினான் புகைந்தசொற் கஞ்சுவதென்னோ
மெய்வயத்தினால் விழை செயமாவதோ கடவுள்
செய்வயத்தினாற் சிறுவனான் வெல்லுவே னென்றான்

14. என்ற தண்ணல் கேட்டி வன்றனைக் கொணர் மினென்றிசைப்பச்
சென்ற வன்னநற் சேடனை நோக்கனு நீயோ
பொன்ற வுன்னினாய் பொருப்பினைப் பெயர்த்தெறிந்து வமை
வென்ற திண்மையான் வெகுளி முன்னீயெவனென்றான்

15. எந்தலீரடி யிறைஞ்சிய விளவலு மறைவான்
காய்ந்த தோர்பகை கடுத்ததன் பவஞ் செயின் மீட்டு
வேய்ந்ததோர் படை வேண்டுமோ கடவுளைப் பகைத்து
வாய்ந்த வாண்மையை மறுத்தனை யெவன் வெல்லாணையா

16. திறங்கடுத்த கொல் சிங்கமுழுளியமும் பாய்ந்து
மறங்கடுத்ததிர் வல்லியத் தினங்களு மெதிர்ந்து
கறங்கடுத்தகால் கழுத்தினை முருக்கி நான் கொன்றே
னறங்கெடுத்தவன வற்றினும் வலியனோ வென்றான்

17. அரிய வாண்மையை யதிசயித்தர சனன்றெண்ணு
விரியளா வொளி வேலொடு தனது பற்கருவி
யுரிய போர் செய வொருங்கு தந்தனனவற் றொடுதான்
றிரியவாய் முறை தெரிகிலே னென மறுத்தகன்றான்

18. தெரிந்தவாய்ந்தவைஞ் சிலையொடு கவணெடுத்தெவரு
மிரிந்த பாலனை நோக்கியுள்ள திசயித்திரங்க
விரிந்த வாசையால் வேதியராசியைக் கூறப்
பிரிந்த காலொலி பெருக வாங்கனை வருமார்த்தார்

19. ஆர்த்த வோதை கேட்டரக் கனின்ற மர்க்கெதிர் வருகப்
பார்த்த பாலனைப் பழித்தெழுந்தி யாவரு மஞ்சக்
கூர்த்தவேலொடு குறுக வந்தகல் கருமுகிலிற்
பேர்த்த கோடை நாட் பேரிடியெனவுரை செய்தான்

20. நீயடாவெதிர் நிற்ப தோமதம் பொழிகரிமே
ஞயடாவினை நடத்து மோகதங் கொடுநானே
வாயடா பிளந்துயிர்ப்பிட மறுகி நீ நுண்டு
ளாயடாவுல கப்புறத்தேகுவா யென்றான்

21. வெல்வை வேல் செயுமிடலதுன் மிடலடாநானே
வெல்வை யாதர வியற்றெதிரிலாத்திறக் கடவுள்
வல்கை யோடுனை மாய்த்துடல் புட்கிரையாக
வொல் செய்வேனெனு வுடைகவண் சுழற்றினனிளையோன்

22. கல்லையேற்றலுங் கவணினைச் சுழற்றலு மக்கல்
லொல்லை யோட்டலு மொருவருங்காண்கிலரி டிக்குஞ்
செல்லை யொத்தன சிலை நுதற் பாய்தலு மன்னு
னெல்லை பாய்ந்திருளிரிந்தென வீழ்தலுங் கண்டார்

23. கடையுகத்தினிற் கருமுகிலுருமொடு விழும் போற்
படை முகத்தினிற் பார்பதைத் தஞ்ச வீழ்ந்தனன்றன்
புடையகத்தினிற் புணர்ந்தவாளுருவி யென்றெய்வ
முடை யுரத்தினை யுணர்மி னென்றிருஞ் சிரங் கொய்தான்

24. கொய்தவாண் முடி திரண்ட குப்பைகளேறி வெய்யில்
செய்த வாண்முடியைச் சூடிச் சிறந்த வாசனத்தி லோங்கிப்
பெய்தவானொளியோடாய்ந்த பெருந்தயை பிலிற்றுஞ் செங்கோ
லெய்தவானிறையோனுண்மை யெய்தியேயரசனானன்

# திருக்குற்றாலக் குறவஞ்சி

குறவஞ்சி என்பது குறத்திப் பாட்டு எனக் கூறப்படும். அது வருமாறு: தலைவன் பவனி வருதல், அப் பவனியைக் கண்ட பெண்கள் அத் தலைவனைக் காமுறுதல், மோகினிப் பெண் (தலைவி) வருதல், அவள் பவனி வந்த தலைவனைக் கண்டு மயங்கல், மயங்கிய பின் சந்திரன், தென்றல், முதலியவரை நிந்தித்தல், அதுகண்டு பாங்கி மோகினியை ஐயுற்றதென் னென வினவுதல், தலைவி பாங்கியோடு உற்ற துரைத்தல், பாங்கி தலைவனைப் பழித்துக் கூறல், தலைவி தலைவனைப் புகழ்ந்து கூறல், தலைவி பாங்கியைத் தலைவனிடந் தூதுபோகச் சொல்லி வேண்டுதல், தலைவி பாங்கிக்குத் தலைவ னடையாளங் கூறல், குறத்தி வருதல், தலைவி குறத்தியை மலைவள முதலியவை வினவுதல், குறத்தி தலைவிக்குத் தனது மலைவளம், நாட்டுவள முதலியவையுந் தலைவனது தலவளங் கிளைவள முதலியவையும் பிற தேசத் திற் குறி சொல்லி விருதுகள் பெற்று வந்தமையுங் கூறல், தலைவி குறத்தியி னிடங் குறிகேட்டல், குறத்தி தெய்வந் தொழுதல், தலைவி நினைத்த காரியத்தைக் குறத்தி குறிமுகத்துக் கூறல், தலைவி குறத்திக்குப் பரிசிலுதவி விடுத்தல், குறவன் வருதல், பறவைகள் வருதல், கண்ணி கருத்தல், பறவை களைப் பிடித்தல், குறவன் குறத்தியை விருப்பமுற்றுத் தேடல், பாங்கனோடு குறவன் குறத்தி அடையாளங் கூறல், குறவன் குறத்தியைக் காண்டல், குறவன் குறத்தியினிடத்துப் புதிய ஆபரணங்களைக் கண்டு ஐயுற்று வினவுதல், அங்ஙனம் வினவும் ஒவ்வொன்றுக்குங் குறத்தி விடை கூறல் ஆகிய இவ்வுறுப்புக்களமைய அகவல், வெண்பா, கொச்சகம், கலித்துறை, கழிநெடில் விருத்தம் இவைகளி னிடையிடையே சிந்து முதலியவற்றை நாடகத் தமிழாற் பாடுவது'.

திருக்குற்றாலக் குறவஞ்சியைப் பாடிய புலவர் திரிகூட ராசப்பக் கவிராயர். இவரது ஊர் திருக்குற்றாலத்துப் பக்கமாகிய மேலகரம். இப் பெரும் புலவர் திருக்குற்றாலத்தைக் குறித்து பதினன்கு பிரபந்தங்கள் பாடியுள்ளார். இவரது காலம் இற்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன் என்று தெரிகின்றது.

# திருக்குற்றாலக் குறவஞ்சி

## குறத்தி மலைவளங் கூறுதல்

### கண்ணிகள்

1. வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்

2. கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பார்
கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்

3. தேனருவித் திரையெழும்பி வானின்வழி யொழுகும்
செங்கதிரோன் பரிக்காலுந் தேர்க்காலும் வழுகும்

4. கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே.

5. முழங்குதிரைப் புனலருவி கழங்கெனமுத் தாடும்
முற்றமெங்கும் பரந்துபெண்கள் சிற்றிலைக்கொண் டோடும்

6. கிழங்குகிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடப்போம்
கிம்புரியின் கொம்பொடித்து வெம்பு தினையிடிப்போம்

7. செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப் பந்தடிக்கும்
தேனலர்சண் பகவாசம் வானுலகில் வெடிக்கும்

8. வழங்குகொடை மகராசர் குறும்பலவி லீசர்
வளம்பெருகுந் திரிகூட மலையெங்கள் மலையே

9. ஆடுமர வீனுமணி கோடிவெயி லெறிக்கும்
அம்புலியைக் கவளமென்று தும்பிவழி மறிக்கும்

10. வேடுவர்கள் தினைவிரைக்கச் சாடுபுனந்தோறும்
விந்தையகில் குங்குமமுஞ் சந்தனமும் நாறும்

11. காடுதொறு மோடிவரை யாடுகுதி பாயுங்
காகமணு காமலையில் மேகநிரை சாயும்

12. நீடுபல வீசர்கயி லாசகிரி வாசர்
நிலைதங்குந் திரிகூட மலையெங்கள் மலையே

13. கயிலையெனும் வடமலைக்குத் தெற்குமலை யம்மே
கனகமகா மேருவென நிற்குமலை யம்மே

14. சயிலமலை தென்மலைக்கு வடக்குமலை யம்மே
சகலமலை யுந்தனக்கு ளடக்குமலை யம்மே

15. வயிரமுடன் மாணிக்கம் விளையுமலை யம்மே
வானிரவி முழைகடொறு நுழையுமலை யம்மே

16. துயிலுமவர் விழிப்பாகி யகிலமெங்குந் தேடுந்
துங்கர்திரி கூடமலை யெங்கள்மலை யம்மே

17. கொல்லிமலை யெனக்கிளைய செல்லிமலை யம்மே
கொழுநனுக்குக் காணிமலை பழநிமலை யம்மே

18. யெல்லுலவும் விந்தைமலை யெந்தமலை யம்மே
யிமயமலை யென்னுடைய தமயன்மலை யம்மே

19. சொல்லரிய சாமிமலை மாமிமலை யம்மே
தோழிமலை நாஞ்சிநாட்டு வேள்விமலை யம்மே

20. செல்லினங்கள் முழவுகொட்ட மயிலனங்களாடுந்
திரிகூட மலையெங்கள் செல்வமலை யம்மே.

## வசந்தவல்லிக்குக் குறத்தி தலமகிமை கூறுதல்

### கண்ணிகள்

1. ஞானிகளுமறியார்கள் சித்ரநதி மூலம்
நானறிந்த வகைசிறிது பேசக்கேள் அம்மே

2. மேன்மை பெறுந்திரிகூடத் தேனருவித் துறைக்கே
மேவுமொரு சிவலிங்கந் தேவரகசிய மாய்

3. ஆனதுறை யயனுரைத்த தானமறி யாமல்
அருந்தவத்துக் காய்த்தேடி திரிந்தலையுங் காலம்

4. மோனவா னவர்க்கெங்கள் கானவர்கள் காட்டு
முதுகங்கை யாறுசிவ மதுகங்கை யாறே

5. சிவமது கங்கையின் மகிமை புவனமெங்கும் புகழுஞ்
செண்பகா டவித்துறையின் பண்பு சொல்லக் கேளாய்.

6. தவமுனிவர் கூட்டரவும் அவரிருக்குங் குகையுஞ்
சஞ்சீவி முதலான விஞ்சை மூலிகையும்

7. கவனசித்த ராதியரும் மவுனயோ கியருங்
கத்திருக்குங் கயிலாயம் ஒத்திருக்கும் அம்மே

8. நவநிதியும் விளையுமிடம் அவிடமது கடந்தால்
நங்கைமார் குரவையொலி பொங்குமா கடலே

9. பொங்குகடல் திரிவேணி சங்கமெனச் செழிக்கும்
பொருந்துசித்ர நதித்துறைகள் பொன்னு முத்துங் கொழிக்கும்

10. கங்கை யெனும் வடவருவி தங்கு மித்ர சாபங்
கலந்தாடிற் கழுநீராய்த் தொலைந் தோடும் பாபம்

11. சங்க வீதியிற் பரந்து சங்கினங்கள் மேயுந்
தழைத்தமதிட் சிகரமெங்குங் கொழுத்தகயல் பாயும்

12. கொங்கலர் செண்பகச் சோலைக் குறம்பலா வீசர்
குற்றாலத் திரிகூடத் தலமெங்கள் தலமே.

## குறத்தி குறிசொல்லுதல்

### கண்ணிகள்

1. மாறும விருநிலத்தி லறம் வளர்க்குங் கையே
மனையறத்தா லறம் பெருக்கித் திறம் வளர்க்குங் கையே

2. வீறாக நவநிதியும் விளையுமிந்தக் கையே
மேன் மேலும் பாலமுதம் அளையுமிந்தக் கையே

3. ஆறாத சனங்கள்பசி யாற்றுமிந்தக் கையே
அணங்கனை யார்வணங்கி நித்தம் போற்றுமிந்தக் கையே

4. பேறாக நன்னகரங் காக்குமிந்தக் கையே
பிறவாத நெறியார்க்கே யேற்குமிந்தக் கையே.

## சிங்கன் குளுவனைப் பார்த்துக் கண்ணி கொண்டுவரச் சொல்லுதல்

### சரணங்கள்

1. மானவர் சூழு மதுரையிற் பாண்டியன்
மந்திரி யார்கையில் முந்திப் பணம்போட்டுத்
தானுசைப் பட்டுமுன் கொண்டகொக் கெல்லாந்
தரிகொண்டு தில்லை நரிகொண்டு போச்சுது
கானவர் வேடத்தை யீனமென் றெண்ணாதே
காக்கை படுத்தான் கருமுகில் வண்ணனு
மேனுட் படுத்திட்ட கொக்கிற கின்னும்
விடைமே லிருப்பார் சடைமே லிருக்குது.

2. முன்னாட் படுத்த பரும்பெருச் சாளியை
 மூத்த நயினார் மொடுவாய்க் கொடுபோனார்
பின்னான தம்பியா ராடு மயிலையும்
 பிள்ளைக் குறும்பாற் பிடித்துக்கொண் டேகினார்
பன்னரு மன்னத்தை நன்னக ரீசர்
 பரிகல மீந்திடும் பார்ப்பானுக் கீந்தனர்
வன்னப் பருந்தொரு கள்வன் கொடுபோனான்
 வக்காவும் நாரையுங் கொக்கும் படுக்கவே.

3. மீறு மிலஞ்சிக் குறத்தியைக் கொண்டசெவ்
 வேட்குற வன்முதல் வேட்டைக்குப் போனநா
ளாறுநாட் கூடியொரு கொக்குப் பட்ட
 தகப்பட்ட கொக்கை யவித்தொரு சட்டியிற்
சாறாக வைத்தபின் வேதப் பிராமணர்
 தாமுங்கொண்டார் சைவர் தாமுங்கொண்டார் தவப்
பேருமுனிவரு மேற்றுக்கொண் டாரிதைப்
 பிக்குச் சொல்லாமலே கொக்குப் படுக்கவே.

# குறிப்புரை

## I.

## புறநானூறு

1. புலவரை இறந்த-நின்னைப்பாடுவாரது அறிவின் எல்லையைக் கடந்த. புரிசை-மதில். ஞாயில்-மதிலின் மீதுள்ள ஒரு சிற்றுறுப்பு. கடிமிளை-காவற்காடு.

2. வளிதொழிலாண்ட-காற்றுச் செல்வனை அழைத்து ஏவல் கொண்ட. மருக-மரபில் வந்தவனே! வெண்ணிப் பறந்தலை-வெண்ணி என்னும் ஊர்ப்புறத்துப் போர்க்களம்.

3. அண்ணல்-சோழன். முகம்-சந்திரன். கையறுபு இனைய-செயலற்றுவருந்த. குறும்பறை அசைஇ-பெடையுடன் தங்கி. அடியுறை-அடிக்கீழ்.

4. வாய்வாள்-தப்பாதவாள். திரு-வீரச்செல்வம். மிசை-உச்சி. குறியாது-பெறுதற் கரிதென்று கருதாது.

5. இவ்வே-இவைதாம். நுதி சிதைந்து-நுனி முரிந்து. பதம்-உணவு.

6. பல ஏத்தி-பல புகழையும் வாழ்த்தி.

7. நளி-பெருமை. வெதிரினெல்-மூங்கில் நெல். தாளில்-முயற்சியால். தாரலன்-தாரான்.

8. உடன்றனி ராயினும்-பொருதீராயினும்.

9. யாம் எந்தையும் இலம்-யாம் எம்முடையதந்தையையுமிழந்தேம்.

10. கடும்பு-சுற்றம். வால்நார்த் தொகுத்த-வெள்ளிநாராற் றொடுக்கப்பட்ட. 'ஒரிவண் கொடை காணிய கண்ணுளங் கடும்பு சென்றது; சென்றபின்றை அக்கடும்பாயினோர் தமது பாடலு மறந்து ஆடலும் ஒல்லாராயினர்; அதற்குக் காரணம் பசியாராகன் மாறுகொலெனக் கூட்டி வினைமுடிவு செய்க.'

## II.

# திருக்குறள்

## இல்வாழ்க்கை

1. இயல்பு உடைய மூவர்க்கும் - அறஇயல்பினையுடைய ஏனை மூவர்க்கும். நல் ஆற்றின்-நல்லொழுக்க நெறிக்கண்.

2. துவ்வாதவர்-நல்கூர்ந்தார் (தரித்திரர்).

3. தென்புலத்தார்-பிதிரர். ஒக்கல்-சுற்றத்தார். ஐம்புலத்து ஆறு - ஐந்திடத்துஞ் செய்யும் அறநெறி. தலை-சிறப்புடைய அறமாம்.

4. பாத்து-பகுத்து. எஞ்சல்இல்-இறத்தலில்லை.

6. புறத்து ஆறு-வாநப் பிரஸ்தம்.

7. முயல்வாருள் எல்லாம்-ஐம்புலன்களைவிட முயல்வார் எல்லாருள்ளும். தலை-சிறந்தவன்.

8. நோற்பாரின்-தவஞ்செய்வார் நிலையினும்.

9. அஃது உம்-ஏனைத் துறவறமோ எனின் அதுவும்.

10. தெய்வத்துள் வைக்கப்படும் - தேவருள் ஒருவனாக வைத்து நன்கு மதிக்கப்படும்.

## வாழ்க்கைத்துணை நலம்

வாழ்க்கைத்துணை நலம் - இல்வாழ்க்கைத் துணையாகிய இல்லாளின் நற்குண நற்செய்கைகள்.

1. மனை - இல்லறம். மாண்பு - நற்குண நற்செய்கைகள். வளம் தக்காள்-வருவாய்க்குத்தக்க வாழ்க்கையுடையவள்.

2. மனைமாட்சி - இல்லறத்திற்குத்தக்க நற்குண நற்செய்கைகள். இல்லாள்-மனைவி. எனை மாட்சித்து ஆயினும்-எவ்வளவு மாட்சிமையுடைய தானாலும். இல்-இல்லை.

3. மாண்பு ஆனல்-மாண்புடையவளானல். மாணக்கடை-நற்குண நற்செய்கைகளை யுடையவள் ஆகாவிடின் ; கடை, வினையெச்ச விகுதி.

4. பெண்ணின் - இன், ஐந்தாம் வேற்றுமை எல்லைப்பொருளது. பெருந்தக்க-மேம்பட்டவை; தக்க, வினையாலணையும் பெயர். யாஉள-எவை யுள்ளன. (இல்லை என்றபடி) திண்மை - கலங்கா நிலைமை. கற்புடைய மனைவி, அறம் பொருள் இன்பங்களுக்கு ஏதுவாயிருப்பதனால் அவளினும் மேம்பட்ட பொருள் இல்லை என்றார். தொழா அள், செய்யுளிசை அள பெடை.

5. கொழுநன்-கணவன். தொழுது எழுவாள் - தொழுதுகொண் டே எழுந்திருப்பவள்; எழுவாள்-வினையாலணையும் பெயர். கற்புடையவளுக் குத் தேவரும் ஏவல்செய்வார் என்பதாம்.

6. தற்காத்து-தன்னைக் (கற்பினின்றும் வழுவாமல்) காத்து. தகை சான்ற-நன்மை யமைந்த. சொல்-புகழ். சோர்வு இலாள்.

7. சிறை-காவல்; மதில் முதலியவற்றால் காத்தல். நிறைகாக்கும்-நிறையாற் காக்கின்ற. நிறையாவது, நெஞ்சைக்கற்பு நெறியில் நிறுத்தல். தலை-சிறந்தது.

8. பெற்றான் பெறின்-(தம்மை) அடைந்த கணவனை வழிபடுதல் பெறுவராயின்; வழிபடுதல் என்பது சொல்லெச்சம். புத்தேளிர்-தேவர். புத் தேளிர் வாழும் உலகு - தேவலோகம். கற்புடைய மகளிர் தேவர்களாற் பேணப்படுவர் என்பதாம்.

9. புகழ்புரிந்த இல்-புகழை விரும்பிய இல்லாள். புரிந்த என்பதில் அகரம் தொக்கது. ஏறு-ஆண் சிங்கம். பீடுநடை-பெருமிதமான நடை. இல்-இல்லை. இல் இல்லோர்க்குப் பீடு நடை இல்லை என்க.

10. மங்கலம்-நன்மை. என்ப - என்று சொல்லுவர். நன்கலம் - நல்ல அணி. பேறு-பெறுதல்; முதல் நிலைதிரிந்த தொழிற் பெயர்.

## புதல்வரைப் பெறுதல்

புதல்வரைப் பெறுதல்-நன்மக்களைப் பெறுதல்.

1. அறிவதில்லை-மதிப்பதில்லை. மக்கள், ஆண் பெண் இரு பாலா ரையும் குறிக்கும் சொல்; இது பன்மையிலேயேவரும். துணிவுபற்றி, அறிவு அறிந்த மக்கள் என இறந்த காலத்தாற் கூறினர்.

2. எழுபிறப்பு-(வினை வசத்தால் பிறக்கும்) எழு பிறப்பு. பழி பிறங்காப் பண்பு-பிறரால் பழிக்கப்படாத நற் குணம். பெறின் தீண்டா என முடிக்க. பிறப்பு ஏழாவன; தேவர், மானிடர், விலங்கு, பறவை, தாவரம், நீர் வாழ்வன, ஊர்வன.

3. அவர் பொருள் - அம்மக்களால்வரும் பொருள். தம் தம் - அவரவர்; அவராவார் பெற்ரோர்கள். தமது நல்வினைக்குத் தக்கபடி பொருள்வரும் என்பதாம்.

4. ஆற்ற இனிது-மிகவும் இனிமையுடைத்து. அம்ருதம் என்னும் வடசொல் அமிழ்து என்ருபது. அளாவிய-துழாவிய; அஃதாவது, இட்டும் தொட்டும் கௌவியும் துழத்தல்.

5. மெய்-உடம்பு; மங்கல வழக்கு. மற்று, வினைமாற்று. மக்களுடைய மழலைச் சொல்லேயன்றி அவர் கற்றறிவுடையராய்ச் சொல்லுஞ் சொல்லும் செவிக்கு இன்பம் தரும் என்பதாம்.

6. மழலை - பொருள் நிரம்பாத சொல். குழல், யாழ் என்பன, அவற்றின் ஓசையை உணர்த்துதலால் கருவி ஆகுபெயர்.

7. ஆற்றும் நன்றி - செய்யும் நன்மை. அவையத்து முந்தி இருப்பச்செயல் - சபையில் எல்லாரினும் மேலாக இருக்கும்படி செய்வது; அஃதாவது, மிகுந்த கல்வியறிவுடையனுக்குதல்.

8. தம்மின் - தம்மைக் காட்டிலும். மன் உயிர் - நிலை பெற்ற உயிர்கள், (மனிதர்கள்). தம்மைக் காட்டிலும் தம்மக்கள் அறிவுடையராயிருப்பது பெற்ரோர்கள் எல்லாருக்கும் உவகையைத் தரும் என்பதாம்.

9. ஈன்ற பொழுதின் - (மகனைத்தான்) பெற்றபோது உண்டாகும் மகிழ்ச்சினும். உவக்கும் - உவப்பாள், மகிழ்வாள்; செய்யும் என்னும் முற்று; பெண்பாற்கு வந்தது. சான்ரோன் - (கல்வி கேள்விகளால்) நிறைந்தவன்.

10. என் நோற்ருன் என்னதவம் செய்தான்; நோல், பகுதி. கொல் - அசை.

## அன்புடைமை

அன்புடைமை - மனைவி மக்கள் முதலாயினர் இடத்து அன்புடையராயிருத்தல்.

1. அடைக்கும் தாழ் - (பிறர் அறியாமல்) அடைத்து வைக்கும் தாழ். ஆர் வலர் - அன்பு செய்யப்பட்டவர். புன் கணீர் - (அன்புடையவர் கண் பொழிகின்ற) புலலிய கண்ணீர். பூசல் தரும் - எல்லாரும் அறியத் தூற்றும். ஆர் வலருடைய புன்மையைக் குறித்து அன்புடையவர்களுக் குண்டாகும் கண்ணீராதலின், அவர் புன்மையைக் கண்ணீர் மேலேற்றிப் 'புன் கணீர்' என்ருர்.

2. என்பும் உரியர் - தம் உடம்பாலும் பிறர்க் குரியர். என்பு-உடம்புக்குச் சினையாகு பெயர். என்பும் - உம்மை, மனம் வாக்குகளினுல்

அல்லாமல் உடம்பாலும் பிறர்க்குப்பயன் படுவர் என்று பொருள் தருத லால் இறந்தது தழீ இயதாம்.

3. வழக்கு - நெறியின் பயன்; ஆகுபெயர். ஆர் உயிர் - பெறுதற் கரியமக்கள் உயிர். என்போடு இயைந்த தொடர்பு - உடம்போடு உண்டாகிய தொடர்ச்சி.

4. ஆர்வம் - விருப்பம். நாடாச் சிறப்பு-அளவிறந்த சிறப்பு. என்ப - என்று கூறுவர்.

5. அமர்ந்த - (இல்லறத்தோடு) பொருந்திய. இன்பு உற்றார் எய்தும் சிறப்பு - இவ்வுலகத்து இன்பம் அனுபவித்துப் பின்னர் துறக்கத்துச் சென்று அடையும் பேரின்பம்.

6. சார்பு - துணை. மறத்திற்கும் - மறத்தை நீக்குதற்கும். பகைவன் மேல் அன்பு செய்யின், மறம் நீங்கு மாதலின் மறத்தை நீக்குதற்கும் அன்பு துணையாகும் என்றார்.

7. என்பு இலது - எலும்பு இல்லாத உடம்பு; புழுமுதலியன. அன்பு இலதனை - அன்பு இல்லாத உயிரை. அறம் - அறக்கடவுள். 'அல்லவை செய்தார்க் கறங் கூற்றம்' என்பது காண்க. வெயிலின்முன் புழுக்கள் இயல்பாகவே கெடுதல் போல, அறக் கடவுள் முன் அன்பில்லாதவர் தாமே கெடுவர் என்பதாம்.

8. அகம் - மனம். வல்பால்கண் - வலிய நிலத்தில்; ஈரமேயில்லாத நிலத்தில். வற்றல் மரம் - வற்றலாகிய மரம்; பட்டுப்போன மரம். தளிர்த்த அற்று-தளிர்த்தாற் போலும். அஃதாவது அன்பில்லாவிடின் இல்வாழ்க்கை நடைபெறாது என்பதாம்.

9. புறத்து உறுப்பு - இடம் பொருள் ஏவல் செய்வோர் முதலாயின. யாக்கை - உடம்பு; தொழிலாகு பெயர். அகத்து உறுப்பு அன்பு - அகத்துறுப்பாகிய அன்பு; அகம் - உள். அகத்தில் அன்பு இல்லாதவர்களுக்கு மற்றவைகளால் இல்வாழ்க்கையிற் பயனில்லை என்பதாம்.

10. அன்பின் வழியது உயிர் நிலை - அன்பின் வழி நின்ற உடம்பே உயிர் நின்ற உடம்பு. என்பு தோல் போர்த்த-எலும்பைத் தோலாற் போர்த்தனவாம்; அஃதாவது, உயிருள்ள உடம்பு ஆகா என்பதாம். போர்த்த-வினையாலணையும் பெயர்.

## விருந்தோம்பல்

1. இருந்து - இல்லாளோடு இருந்து. ஓம்பி - பொருள்களைப் பாதுகாத்து. விருந்தோம்பி - விருந்தினரைப் பாதுகாத்து. வேளாண்மை-உபகாரம். இல்வாழ்வான் பகுக்க வேண்டுவனவாகத் தென்புலத்தார் முதல்,

பலவகை இருக்கவும் இங்கு விருந்தினரை மட்டும் கூறியது கிடைத்த உணவை இவர்க்குப் பகுத்து உண்பது தரித்திரருக்கும் ஒழுக்கம் ஆகவேண்டும் என்றுகருதி என்க. வாழ்வதெல்லாம் - வாழ்வது முழுதும் எல்லாம்- உரிச்சொல். ஒருமைப் பன்மை மயக்கமும் ஆகும்.

2. விருந்து புறத்ததா - வந்த விருந்தினன் உண்ணுது மனையின் புறத்தவனுக. சாவா மருந்து - சாவாமைக்குக் காரணம் ஆகிய மருந்து. இஃது உயர்ந்து வாழ்வோர் பக்கல் அமிர்தம் என்றும் தரித்திரர் பக்கல் உயிர்போகாமல் காக்கவல்ல அவ்வளவு அற்பமான கஞ்சி என்றும் கொள்ளத்தகும். சோறு மருந்தாயிருக்கின்றது என்று தரித்திரத்தைக் குறித்து வழங்குவது காண்க.

3. வருவிருந்து - வினைத்தொகை, தன்னை நோக்கிவந்த விருந்து. வைகலும் - நாள் தோறும்; ஒரு நாளும் விருந்து இல்லையாகாமல். பருவருதல்-வருந்துதல்.

4. செய்யாள்-திருமகள்; செம்மையில் இருப்பவள். அகம், அகன் போலி. அமர்ந்து-மகிழ்ந்து என்றார் உரைகாரர். நல்விருந்து ஓம்பாதவன் மனையில் செல்வம் இருப்பதற்குச் செய்யவள் மனம் வருந்துவாள் என்பது குறிக்க. நல் விருந்து - ஞானம் ஒழுக்கம் ஆகிய நன்மையினை உடைய விருந்தினர். இல் - மனை.

5. ஓம்பிமிசைவான் - உண்பித்து உண்பான். மிச்சில் - சேடம். புலம் - கழனி. கொல் - அசைநிலை இடைச்சொல். வித்தும் இடல் - வித்து இடலும் என்று உம்மையை பின்னதற்குக் கூட்டுக. வித்திடலும் வேண்டா என்றதனுல் எரு இடலும் நீரிடலும் பிறவும் வேண்டாது புண்ணியத்தால் விளைவுக்கு வேண்டுவன பெற்று விளையும் என்பது கருத்தாயிற்று.

6. செல்விருந்து - அவன்பாற் சென்ற விருந்து. வருவிருந்து - அவன்பாற் செல்லும் விருந்து. செல்லும் விருந்தை வருவிருந்து என்றது இடவழுவமைதி; நல்விருந்து-தேவர்க்கும் கிடைத்தற்கரிய விருந்து. இங்கு நல் விருந்து என்றதற்கும் "அகனமர்ந்து" என்னும் குறளில் நல் விருந்து என்றதற்கும் வித்தியாசம் பார்த்துக்கொள்க.

7. இனைத்துணைத்து, இனை - இவ்வளவு, துணைத்து - அளவினை உடையது. வேள்விப்பயன் - இங்கு அதிகாரம் விருந்தோம்பலாதலால் வேள்வி என்றது விருந்தோம்பலாகிய யாகத்தை. பிரமயாகம் - வேதம் ஓதுதல், தேவயாகம் - ஓமம் வளர்த்தல், பூதயாகம் - பலிஈதல், பிதுர்யாகம்- எள்ளும் நீரும் பிண்டமும் இடுதல், மாநுடயாகம் - விருந்தோம்பல் என அறிக. விருந்தின் துணை - விருந்தின் தகுதி. துணைத்துணை - தகுதியின் அளவு.

8. பரிந்து ஓம்பி. வருந்திக்காத்து. பற்று-பற்றுக்கோடு. பற்றற்றேம் என்பர் என்றது பிறரை உண்பியாமல் உண்டவாயாலே ஐயோ பற்றுக்கோடு இல்லோமே என்று புலம்புவர் என்றதாம். என்பர் - என்று சொல்லுவர்.

9. உடைமையுள் பொருளுடைமைக் காலத்துள். இன்மை-தரித்திரம். மடவார்-மடமையினை உடையார். இஃது ஆண் பெண் இரு பாலார்க்கும் வழங்கப்படும். பொருளால் பெறும் பயனை இழப்பித்தலால் மடமையே தரித்திரம் ஆயிற்று.

10. அனிச்சம்-மென்மைக்கு எடுத்துச் சொல்லப்பட்டபூ என்பது "அனிச்சமும் அன்னத்தின் தூவியும்" என்னும் குறளுரையால் தெரிகின்றது. விருந்து குழையும் என்று விருந்தினர் தகுதியும் தெரிவித்தவர் ஆவர்.

III.

# மணிமேகலை

## ஆதிரை பிச்சை இட்ட காதை

1. இவள் - ஆதிரை.

1-2. விஞ்சையர் பூங்கொடி - காய சண்டிகை. மாதர்க்கு - மணிமேகலைக்கு; ஆதிரைக் கென்றுமாம்.

3. ஆயிழை - மணி மேகலையே (அண்மை விளி)

4. அணியிழை - ஆதிரை. அகன்றனள் - அகன்று (முற்றெச்சம்)

6. கணிகை - பரத்தை. கைத்து ஊண் - (தீய) ஒழுக்கத்தால் வந்த உணவு.

7. வட்டு-உண்டை உருட்டல்.

8. கெட்ட பொருள் என்றது, கணிகைக்கும் வட்டுக்கும் சூதுக்கும் பயன் படுதல் பற்றி. பொருளின் கிளை - பொருளின் பகுதிகள்.

10. காணம் இலி - பொன் இல்லாதவன். கையுதிர்க் கோடல் - வாயாற் பேசாமல் கையசைத்துப் போவென்று குறிப்பித்தல்.

11. வங்கம் - கப்பல்.

12. தங்கா வேட்கை - பலவிடத்தும் செல்லவேண்டுமெனும்விருப்பம். தான் - சாதுவன்.

13. நளி இரு முந்நீர் - பெரிய பெருங்கடல். வளி - காற்று. கலன்-கப்பல் வெளவ - பற்றிக் கொள்ள.

14 ஒடி மரம் - ஒடிந்த பாய்மரம். உதைப்ப - தள்ள.

15. நக்க சாரணர் - உடையில்லாமல் திரிவோர். நக்கர்-உடையில்லாதவர். நாகர் - (பாம்பின் அடையாளத்தையுடைய) ஒருவகைச் சாதியார்.

16. அவர் பான்மை - அவர்களுடைய பகுதித்தன்மை. சாதுவன்-ஆகி (4) போகி (5) வழங்கி (7) செல்வுழி (12) வெளவுதலால் (13) பற்றி (14) சார்ந்து அவர் பான்மையனாயினன் (16) என்க.

17. நாவாய் - கப்பல் பிடித்துக் கரையேற உதவியதால் நன்மரம் என்றார்.

18. உய்ய - பிழைக்க

20. உடை கலப்பட்டு-உடைந்த கப்பலில் அகப்பட்டு. ஒழிந்தோர்-மூழ்கி இறந்தோர்.

21. என - (உயிருயப் போந்தோர் சாவுற்றான்) என்று சொல்ல.

23. ஈமம் - பிணம் சுட அடுக்கும் விறகு

24. தாரீர் - தருவீர். கழறிச் சாற்றினள் என்க. கழறி - (தான் இறப்பதாக) உறுதிப்படுத்தி.

25. தொடு குழிப்படுத்து-தோண்டப்படும் குழியை உண்டாக்கி

26. முடலை விறகு-முறுக்குண்ட விறகு. மூளிஎரி - பற்றி எரியும்தீ. பொத்தி - மூட்டி.

27. உய்ப்ப - செலுத்த.

28. புக்குழி. அவன் போய்ப் புகுந்த இடத்தில். புகுதலும்-தீப்பாய்தலும். போந்தோர் (18) ஒழிந்தோர் தம்முடன். (20) சாதுவனும் சாவுற்றானென (21) நல்லாள் அது கேட்டு (22) சாற்றி (24) படுத்து (25) பொத்தி (26) அதிற்புகுதலும் என்க.

29. பாயற்பள்ளி - படுக்கையிடம்.

30. கூறை - ஆடை. உறுது - பற்றுமல்

31. ஆடிய - பூசிய. அசைந்த - சரிந்த.

32. வழாது - கெடாமல்.

33. விரை - மணம்.

34. திருவின் செய்யோள் - இலக்குமி; இன் சாரியை.

35. தீவினையாட்டியேன் - பாவியாகிய யான்.

36. யாது செய்கேன் - என்ன செய்வேன். அவள் - ஆதிரை.

41. வாணிகன் - வாணிகனுடைய. வங்கம் - கப்பல். வந்தனன் - வந்து; (முற்றெச்சம்)

44. அந்தரம் - ஆகாயம். அசரீரி - சரீரமில்லாதது; எங்கும் நிறைந்த முதல் தெய்வம். அறைதல் - சொல்லுதல்.

45. ஐயரிபுண்கண் - அழகிய செவ்வரி பரந்தமையுண்டகண். அழுதுயர் - அழுதற்குக் காரணமான துன்பம்.

46. ஆடி - நீராடி.

47. கவல்வு - கவலை. மனையகம் - மனையிடம்.

48 என - என்று வேண்டி.

49. முட்டாள் -வழுவாமல் செய்து.

50. மரபு - இயல்பு

51. விரும்பினர் - முற்றெச்சம். தொழு உம் வியப்பினளாயினள்: தொழுதற்குக் காரணமான ஆச்சரிய முடையவள் ஆயினள்.

52. அடைகரை - கரையை யடுத்த இடம்.

53. பிறங்கல் - மலை.

54. மஞ்சு - மேகம். நோய் கூர்ந்து - வருத்த மிகுந்து.

55. துஞ்சுதுயில் - மிக்க தூக்கம்; (ஒரு பொருட் பன்மொழி) சூர் - அச்சம்.

56. நயம் - இனிமை.

57. பரிபுலம்பினன் - மிகவும் வருந்தினன்.

58. அளியன் - இரங்கத்தக்கவன்.

59. உணவு என்று - நமக்கு உணவாகு மென்று.

60. அவர் பாடை - நாகர்கள் பேசும்பாஷை. மயக்கு அறுமரபில்- மயங்குதலின் றித்தெளிவான முறையில்.

61. கடுந்தொழில் மாக்கள் - கொலை முதலிய செய்யும் நாகர்.

63. அருந்திறல்-பெருதற் கரிய உடல்; வலியுடையாய் (விளி); உணவுக்கு ஆகும் என எண்ணப்பட்ட அவன் உடலின் வன்மையே அவர்கள் உள்ளத்தில் தோன்றியது.

66. அடுதல் - காய்ச்சுதல். குழிசி - பானை. கழி - மிக்க. முடை நாற்றம் - புலால் நாற்றம்.

67. உணங்கல் - வற்றல்.

68. எண்கு - கரடி. பிணவு - பெண்கரடி.

69. பெண்டு - மனைவி. பெற்றி - தன்மை.

70. பாடையிற் பிணித்து - பேச்சால் தன் வயப் படுத்தி.அவண் பான்மை யணுகி - அவனோடு வேற்றுமை யின்றி ஒழுகி.

71. கோடு - கிளை. அவன்-நாகர் குரு.

73. அவற்கு - குரு மகனுக்கு.

75. மாக்காள் - விளி.

76. நம்பி - சாதுவன்.

75-77 மாக்காள் நம்பிக்கு வேண்டுவ கொடுமென; என - என்று குரு மகன் சொல்ல.

78. அயர்ந்து - கவலையுற்று.

79. வெவ்வுரை - கொடுஞ்சொல்.

80. ஞாலம் - உலகம்

81. உறுபயன் உண்டோ என்க.

83. சினத்தினன் - கோப முடையவனாய் (குறிப்பு முற்றெச்சம்). சொல்லும் - (சாதுவன்) சொல்லுவான்.

84. கோறல் - கொல்லுதல்.

85. கயக்கு - கயங்குதல்; கலக்கம்.

86-87 சாதலும், பிறத்தலும் உறங்கலும், விழித்தலும் போலாமென் பது, திருவள்ளுவர் கருத்து; நிரல் நிறை.

89. அல்லறம் - அறம் அல்லாதது; பாவம்

90. உரவோர் - அறிவுடையோர்

87-90 உண்மையின் உணர்தலின் உரவோர் களைந்தனர் என்க.

91. கண்டனையாக - அறிக. என-என்று சாதுவன் சொல்ல. கடு நகை - பெருஞ் சிரிப்பு.

92. உரு - வேறொரு வடிவம்.

94. எவ்வணம் - எப்படி.

95. செவ்வனம் - நேரே.

96. உயிர் வாழ்வுழி உடல் உற்றதை உணரும் என்க.

98. தடிந்து - வெட்டி.

100. புக்கில் - புகும் இடம்.

103. சேண் - நெடுந்தூரம். சேறல் - செல்லுதல்.

104-105. செய்வினை பூண்ட யாக்கை - முன் செய்த கருமத்திற்கு ஈடாகத் தாங்கிய உடம்பு. உயிர் யாக்கையிற் புகுவது நீ தெளி என்க.

106. அவன் - சாதுவன்.

109. உள்ளுறை - மறை பொருள்.

110. தமக் கொழி மரபின் - தமக்கென்றே முடிந்த முறைமையினை யுடைய.

110—111. மரபினையுடைய நல்லறம் என்க.

111. எமக்கு ஆம் நல் அறம்-எங்கள் நிலைக்கு ஏற்ற நல்ல தருமம். அறமுறையிலும் பிறழ்தல் ஆகாது: எங்கள் நிலைக்கும் எற்றதாதல் வேண் டும் என்றபடி.

112. படர் குவை - செல்வாய்.

113. ஒல்லும் நெறி - இயலும் வழி.

114. உரைக்கேன் - சொல்வேன். ஈங்கு - இத்தீவிற்கு.

115. அடுதொழில் - கொல்லுந்தொழில்.

116. மூத்துவிளிமா - முதுமை யடைந்து இறக்கும் விலங்குகள்.

117. தீத்திறம் - கொலை

121. உறு பொருள் - மிக்க செல்வம்

122. விரை மரம் - வாசனைமரம்; சந்தனம் அகில் முதலியன.

123. கொள்க என - கொள்க என்று (நாகர் குரு சிறப்பாகப் பொருள்களைத் தனித் தனி(சுட்டிக்) கூற. எடுத்தனன் - எடுத்து.

125. வங்கஞ் சேர்ந்ததில் - அத்தீவை அடைந்த கப்பலில்.

126. இவள் - ஆதிரை.

128. ஆங்கனமாகிய - அப்படிப்பட்ட வளாகிய.

2-129. உரைப்போன், பிச்சை பெறுகென, என்க. என - என்று காய சண்டிகை கூற

130. மனையகம் - ஆதிரை வீட்டில்.

131. ஓவியம் - சித்திரம்; பௌத்த நெறி நின்று மௌன மேற்கொண்டு அலங்காரம் இன்றி நிற்றலின், "புனையா ஓவியம்" என்றார்.

132. துயரறு கிளவி - இன்சொல்.

133. அமுத சுரபி - மணிமேகலை வைத்திருக்கும் பிக்ஷாபாத்திரம். அகன் சுரை - அகன்ற உள்ளிடம்.

135 ஆருயிர் மருந்து - அன்னம்.

1-135 உரைப் போன், 'ஆங்கனமாகிய ஆதிரையையாற் பிச்சை பெறுக' என்று சொல்ல மணிமேகலை மனையகம் புகுந்து நிற்றலும், ஆதிரை தொழுது வலங்கொண்டு ஆருயிர் மருந்து இட்டனள் என்று முடிக்க.

IV.

# கலிங்கத்துப்பரணி

## போர்

1. இகல் - சண்டை. இகக்க - கடக்க.
2. செழி - பேரொலி.
5. படர் - படைவீரர்.
6. உரும் - இடி
7. குருதி - இரத்தம்.

V.

# கம்ப ராமாயணம்

## திருவடி தொழுத படலம்

1. நினைவினன்-அநுமன். அருக்கனின்-சூரியன் போல; ஆங்கு மருங்கு நின்றது ஆகிய குடுமிக் குன்றை; குடுமி-உச்சி. நினைவினனாய் அணைந்த ஐயன் என்க. வீரன் பூங்கழல்-வீரனாகிய இராமபிரான் உடைய பூப்போலும் கழலணிந்த திருவடிகளை. விசும்பு-ஆகாயம்.

2. மைந்நாகம்-ஓர்மலைப் பெயர். மரபின்-முன் உபசரித்தபடி யாற்றோழமை முறையின் கைந்நாகம்-கையை உடைய யானை. கணத்தின் காலை-ஒருகணப் பொழுதில். தன் நெடு வரவு-அநுமனுடைய தலை நிமிர்ந்து வரும் வரவினை. நாகப்-சுரபுன்னை. குதியும்-குதித்தலையும்.

3. பொம்மல் - மகிழ்ச்சி. வாய் வெரீஇ - வாய்குளறி. நீளம்-கூடு. பார்ப்பு-பறவைக் குஞ்சு.

4. அநுமனைக்கண்ட உவகையால் அழுதல் முதலியன செய்தனர். அண்மி-கிட்டி.

5. மானம் வாள்முகமே - பெருமையையும் ஒளியையும் கொண்ட முகந்தானே. மாற்றம்-செய்தி. சாகம்-இலை உணவு.

6. தாள் முதலியவற்றில் வாள் முதலிய மழைகளால் வகுக்கப் பட்ட புண்கள் நம்பியிடத்தன நோக்கி எத்துணையோ பல என்பார் நாள்கள் மேற்சென்ற என் என என்றார். உலகில் நாள்களின் மேற்சென்ற எண்கள் அளக்கலாகாதன. ஊழ் கொள-முறை முறையாக.

7. எண்கின் வேந்து-கரடிகட்குத் தலைவன், ஜாம்பவான். ஏலுற-ஏற்றபடி. நன்மை-மங்களச் சொல்.

8. விம்மலால்-களிப்பினால். மருத்தின் மைந்தன்-அநுமான்.

9. ஆண்டகை-அநுமன். தவம்-இடர் பொறுத்தலும் இடர் செய்யாமையும். இராமனைக் காணலாமென்று இடர் பொறுத்தாள். அரக்கரைச் சொல்லினால் சுடாதிருந்தாள் என்க.

10 கருதலர் - பகைவர். பெருமை - செயற்கரிய செய்து வெல்ல வேண்டிய தன்மை.

11. இனி வேறியாவையும் எண்ணல் வேண்டுவது சிறிதுமில்லை. சேவகன்-இராமபிரான். புலமை-அறிவுடைமை.

12. ஏந்தல்-இராமபிரான்; 'அநுமன் தனக்கு தீச்சுடாது குளிர்க' என்று அருள்செய்த சீதையை அவளிருக்கும் திசைநோக்கி வணங்கி வாழ்த்தினன்; இதனால் இராமன் கொண்ட சந்தேகம் தீர்வது என்றபடி முளரி-தாமரை.

13. திண் திறலவன்-அநுமன்.

14. தன் பனைவி கற்புக்குத் தோள் வீங்கினன். இத்தகையாள் பிரிந்து வருந்துதற்குப் புனல் கண்கள் விம்மினன்.

16. இங்குச் சீதையாகிய உரிமையால் உனக்கும், தசரதற்கும் சனகனுக்கும் தலைமை உண்டாயிற்று என்க.

17. நினக்கு நேர்ந்தாள் - உனக்குக் கீர்த்தியைக் கொடுத்தாள். எனக்கும் ஈந்தாள்-எனக்கும் அநுக்கிரகம் செய்தாள்.

18. உன் குலம் இதற்குமுன் சூரிய குலம், மநு குலம், ரகு குலம் என்று பிறர்மேல் வைத்துக் கூறப்பட்டது. இப்போது, உன்னது என்றது, இராம குலம் என்று முன்னோரையும் பின்னோரையும் கூறுவர் எ-று. இவ்வாறே விதேக குலமும் சீதை குலம் எனலாயிற்று. தனிமை செய்தவன்-இராவணன்.

19. சீதையினுடைய உருவத்தைத் தனியே கண்டேனில்லை. இற்பிறப்பு, பொறை, கற்பு இவை குதித்தாடல் கண்டேன். தவத்தள்-உன்னை மணக்க நோற்றவள்.

20. உளை-இருக்கின்றாய்.

21. தவம் செய்த தவமாம் தையல்-சீதை. உம்பி-இலக்குமணன். தூயசாலை-பர்ணசாலை.

22. கமலத்தண்ணல்-பிரமன்.

23. உலோக மாதா சீதையாதலால் அவள் பிறனால் தொடப்பெற்றால் அண்டம் பிளக்கும்; ஆதிசேடன் தலைகிழியும்; கடல் எழுந்து தரை மேல் மீளும்; சுடர்கள் விழும்; வேத ஒழுக்கம் மாளும், என்று காட்டினன்.

24. நங்கை கற்பினாற் சிறப்புற்றார். பாகத்தாள்-உமாதேவி. பதுமத்தாள்-தாமரையிலுள்ள சீதேவி. ஆகத்தாள்-மார்பிடத்தவள். சீதை கற்பினால், கற்புடைத் தேவியரெல்லாம் அவரவர் தெய்வக் கணவராற் றலையாற் கொண்டாடப் பெற்றாராளுர் எ-று.

25. பொலங் குழை - பொற் குண்டலம். அணங்கு - தெய்வப் பெண்.

26. அலகை-பேய். இனல்-துன்பம். செய்ய மெய்-சிவந்த உடம்பு.

27. மாண் - மாட்சிமைப்பட்ட. பிறந்தமைந்த கற்பு-இயல்பாய்ப் பிறந்து பொருந்திய கற்பு. வாள் நுதல்-சீதை. சேண் பிறந் தமைந்த காதல் - அநாதி காலமாய் உண்டாயிருந்த அன்பு. தீராக்காண்பு - நீங்காத காட்சி. ஆண் பிறந்து-ஆணாய்ப் பிறந்து. ஆதி-ஆகின்றாய்.

28. மயில் புரை இயலினர் - தேவமாதர்கள். மைந்தர் - தேவர்கள். அயர்ப்பு இலர் காண்பார்-சீதையின் கற்பின் நிலைமையைச் சந்தேகமில்லாமல் காண்பார்கள்.

29. இடை - காலம். கோறல்-கொல்லுதல்.

30. அவள் கற்பினையும் நின்னருளினையும் ஒன்று சேர்த்த அறமும் என்க. உறங்கிஇற்றார்-உறங்கி விட்டார்கள்.

31. உறைப்ப - அழுந்த. நின்பெயர் புகன்றதே தடுத்தது என்றதாம்.

32. மனம் கொண்டேயும்-மனதில் சந்தேகித்தும். அளியை-அருள் செய்தற்கு உரியாய். மஞ்சு-மேகம். மழைக்கண்-மழைபோற் குளிர்ந்த கண்.

33. திருக்கம்-மாறுபாடு. மோதிரம்-கணையாழி. எந்தாய்-என்னப்பனே.

34. விரகம்-பிரிவு

35. எய்த்த-இளைத்த. உயிர்ப்பு விண்டாள்-பெருமூச்சு விட்டாள்.

?6. அன்னவர்க்கு-சீதையார்க்கு. சூழல்-இடம். இத்தனை - இவ்வளவு காலம். வருத்தப்பாடு-வருத்தப்படுதல்.

38. துகிலின் வைத்த - துணியில் முடித்த. மணிக்கு அரசு-சூடாமணி. வித்தக-ஞான அறிவுடையோனே! காண்டி-காணுதி.

39. பரிணமித்து-வளர்ந்து. அங்கி-அக்கினி.

40. வியர்வின் துள்ளி-வேர்வைத் துளிகள். ஆவிவருவது போவது ஆகி மணிவாய் மடித்தது. தன்மை - இவ்வாறெல்லாம் நிகழ்தற்கு உரிய தன்மையை.

VI.

# வில்லிபுத்தூரார் பாரதம்

## காண்டவதகனச் சருக்கம்

1. சிகைக்கொழுந்து-சுவாலையின் கொழுந்து. புனித வெண்புகை-பரிசுத்தமான ஓமப்புகை. அவர் எதிர்-கிருஷ்ணார்ச்சுனர் எதிரே. வன்னி வானவன்-அக்கினி தேவன்.

2. வேதிகை - யாகசாலை மேடை. அக்கினி தேவனாக விருத்தல் பற்றித் தவிசுக்கு வேதிகையை உவமை கூறினர். தவிசு-ஆசனம். அவி-அவிப் பாகம். உந்து வெம்பசி-மேன்மேல் வளரும் கடும்பசி. ஓதனம்-அன்னம்.

3. கரிய மேனியர்-இங்கு கிருஷ்ணார்ச்சுனர்கள். முனி-முனியே; அண்மை விளி. போனகம் - அன்னம். சற்பாத்திரமான அதிதி பூஜை கிடைத்தமையின் உவகை யுண்டாயிற் றென்க. அதிதி-விருந்தினர். பின் இரண்டடிகளாற் குறிப்பிட்ட பொருளுக்கு இலக்கியமாவார், முறையே அதிகமானெடுமானஞ்சி, இயற்பகை நாயனர், கன்னன் என்பார்; இச் செய்யுள் வேற்றுப்பொருள் வைப்பணி.

4. இருபிறப்பினன் - பார்ப்பனன். உதாசனன் - ஓமப் பொருளை உண்பவனான அக்கினி. உணா - உணவு. குளித்து அருந்துதற்கு - ஆசைதீர நன்கு உண்பதற்கு. கொண்டல் வாகனன்-மேகவாகனனான இந்திரன். இச் செய்யுள் முதல் 6-ஆம் செய்யுள்வரை ஒரு தொடர்; அக்கினி கூற்று

5. நால்வகை மகீருகங்கள் - நால்வகைப்பட்ட தாவர யோனிகள்; அவை வித்து, வேர், கிழங்கு, கொடிகள் என்பவற்றிற் றோன்றுவன. 'மகிருகம்' பூமியிற் றோன்றுவது என்பது உறுப்புப் பொருள். தானவர்-அசுரர். ஆலயம்-வசிக்குமிடம். அரி-சிங்கம். எயிற்று ஆலம் தக்ககனும்-பற்களில் நஞ்சையுடைய தக்ககன் என்னும் பாம்பும்.

6. முகம்-வாய்; ஆகுபெயர். ஏழ்புயல்-சப்த மேகங்கள். புருகூதன்-இந்திரன். தொகும் தராதலம்-நெருங்கிய உலகம். ஒரு முனைபட-ஒரு முகமாக.

7. தனஞ்சயன் - அர்ச்சுனன். தூணி - அம்புக் கூடு. சாபம்-வில். சுவேதம் வாசி-வெள்ளைக் குதிரைகள்.

8. வானரப் பதாகை - அநுமக்கொடி. இவுளி-குதிரைகள். அருணன்-சூரியனது சாரதி. சாயகம்-அம்பு. ஊழிகை-அம்புக் கூடு. அருக்கன்-சூரியன்.

9. சிஞ்சினீ முகம்-வில் நாணி. வாழ்வன சத்துவம் - வாழ்கின்றனவாகிய பிராணிகள். உகாந்தம்-உகமுடிவு. மஞ்சு-மேகம் உரும் ஒலி இடியோசை.

10. வடவை-பெண் குதிரை. கடல்-வனத்திற்கு உவமை. முருக்கல் - அழித்தல். பாழி - பெருமை. பாவகன் - அக்கினி. பவனன் - காற்று. அடுக்கு, உவகைபற்றி வந்தது. பாங்கு ஆனுன்-உறவானுன்.

11. வாளமாக-வட்டமாக. வாரி-கடல். காளமா முகிலூர்தி-மேகவாகனஞன இந்திரன். நந்தனம் - பூந்தோட்டம். குடர்-குடல்; ஈற்றுப்போலி.

12. ஆகுலம் - வருத்தம். கபோதம் - புறு. சுடர்த்தூமம் - வெண்புகை. மேதி-எருமை. ஏனம்-பன்றி. கடம் கரி-மதயானே. குலம்-கூட்டம்.

13. தடம்-மலேப்பக்கம். கதுவிய-பற்றிய. சதமகன்-நூறு யாகங்கள் புரிந்தவன்; இந்திரன். சாபம் - வில். பல நிறமான பொருள்களிற்பற்றிய தீயின் புகை; செம்மை முதலான பல நிறங்களுடன் மேல் செல்கின்றமையின், பல நிறமுடைய நிமிர்ந்த இந்திரவில்லே உவமை கூறினர். இது, இல் பொருளுவமையின் பாற்படும்.

14. புயங்கம்-பாம்பு. குவடு - சிகரம். பாம்புகள் தனக்குப் பகையாதலின் சூழ்வருவதற்கு அஞ்சுகின்றுன் என்க. இந்திரன் மலேகளின் சிறகை அரிந்தான். என்பது வரலாறு.

15. கோத்திரம்-மலே. கவான்-மலேயின் பக்கம். திறம்-பகுதி. குலிக நீர்-சாதிலிங்கங்கலந்த நீர். 'அன்றியும்' என்பதனே மூன்றுமடியீற்றிலும் கூட்டுக. இது, பல பொருளுவமை.

16. தளேத்த பாதவம் - ஒன்றையொன்று பிணித்த மரங்கள். பொறி-புள்ளி. அளி-வண்டு. கிசலயங்கள்-தளிர்கள். தீப சாலம்-தீபமரம்.

17. திவாகரன் கரங்கள் - சூரிய கிரணங்கள். முழைத்த வான் புழை - முழைஞ்சின் தன்மையுடைய பெரிய துவாரம்; முழைஞ்சு - குகை. பிழைத்த-தப்பியோடிய. பணே-தந்தம். மழைத்த-மேகத்தின் தன்மையுடைய. நால்வாய்-தொங்கும் வாய்; வினைத்தொகை 3-ஆம் அடியில் ஒன்று, இரண்டு, மூன்று நான்கு என்னும் எண்கள் நிரலேவர அமைத்துள்ள நயங் காண்க. மயங்கிய பொறிமாலே-கலந்த தீப்பொறிகளின் ஒழுங்குகள். குஞ்சர முகந்தொறும் புக்குடன் மயங்கிய பொறிமாலே, இருட் பிழம்பினே வளேந்தெறிப்பன போலும் என்க.

18. அரியெனும் பெயர் பொருமையிற்போல் - அக்கினி, தனக்குள்ள அரியென்னும் பெயர் சிங்கத்திற்கு முள்ளமைக்குப் பொருதது போல. உளே-பிடரி உரோமம். கேசரி-சிங்கம். வாலதி-வால். விளிவு உடைச் சவரங்கள் - (வாற்றுஞ்சத்தில் ஒரு மயிர் நீங்கினும் வாழாது) இறக்கும் இயல்பினேயுடைய கவரிமான்கள். சோகவெம் கனலினல் - (மனத்திலே

கொண்ட மானமாகிய) சோகந்தரும் கொடிய நெருப்பினால். சலியாமல்-நின்ற இடத்தினின்றும் பெயராமல்.

19. இரலை-புல்வாய். உழை-மான். மெய்ப்புறம் - உடம்பின் புறத்தில்.

20. புறம்காழ் உடை கழை என மாறுக; புறத்திலே வயிரத்தை உடைய மூங்கில்; அஃதாவது வேய்ங்குழல்; புறத்து வயிரமுடையன பனை, மூங்கில், தெங்கு முதலியன; இவைபுல் வருக்கத்தைச் சார்ந்தவை; அகத்தில் வயிரமுடையன மரமெனப்படும்; 'புறக்காழனவே புல்லென மொழிப அகக்காழனவே மரமென மொழிப' என்பது தொல்காப்பியம். கால்பரந்து இசைக்கின்ற - காற்றால் பரந்து ஒலிக்கின்ற. ஏழிசை - ஷட்ஜம் முதலான சப்த சுரங்கள். அசுணம் - இனிய இசைக்கு மகிழ்வதும் அப்போது கடின ஒலி கேட்பின் பொறாமல் இறப்பதுமான இயல்புடைய விலங்கு; சடுல வோசை-தீப்பற்றி எரிதலால் உண்டாகும் ஓசை. உரகர்-பாம்புகள்.

21. விபினம்-வனம். சாலம்-கூட்டம். சினை-கிளை. சிகாவள கலாபம்-மயில்களின் தோகை. பணிகளை-பெரும் பாம்புகளை. மயில் பாம்புகளைக் கொல்லும் வலியுடைய தென்பதனை, 'மஞ்ஞை, குஞ்சரம் கோளிழைக்கும் பாம்பைப் பிடித்துப் படங்கிழித்தாங்கு' என்ற திருக்கோவையார் அடியாலும் உணர்க. நிழல்-ஒளி. மாதுஅ-அசை.

22. ஆசுகன்-வாயு; விரைந்து செல்பவன். ஆசு சுக்கணி-அக்கினி; விரைந்து ஈரத்தை வற்றச் செய்வதில் விருப்பமுடையவன். புலிங்கம் சாலம்-தீப்பொறிகளின் கூட்டம். பாசு-பசுமை. பூவை-நாகண வாய்ப்புள்.

23. ஈரம்-அன்பு. நிருதர்-அசுரர். சென்னியில் வன்னி - சிரசில் (பற்றிய) நெருப்பு. குஞ்சி-குடுமி; நிருதர் குடுமி, செந்நிறமான தென்பது இங்கு அறியத்தக்கது. நகமுழுமதி-நகமாகிய பூரண சந்திரன்; உருவகம். பஞ்சி-செம்பஞ்சுக் குழம்பு. பதயுகம்-இரண்டு பாதங்களிலும்.

24. முழுத்தீயில் தப்பினர் மூவர்-சுதன்மன், சுசீலன், சுபுத்தி என்போர். பைப்புறம்-படத்தின் மேற்புறம். பல்தலை = பஃறலை

25. சுரபதி - இந்திரன். ஆயிரம் விழிகளும், புகைபடக் கரிந்தன, பொறியினாற் பொறி யெழுந்தன வென்க. தகைவு-தடை. திகை-திசை.

26. பாக சாதனன்-இந்திரன்- அநுசனும்-(இந்திரனுக்குத்) தம்பியான (உபேந்திரனை) கிருஷ்ணனும். சுதனும் - மகனான அர்ச்சுனனும். செம்பொன் மால்வரை-மேருமலை; அக்கினி பற்றிய காண்டவத்திற்கு பொன்மயமான மேருமலை உவமை. கிருஷ்ணார்ச்சுனர்கள் அவ்வனத்தை

விரதத்துடன் சுற்றிவருவதற்கு, அம்மலையை விரிசுடர் நியமமாய்ச் சுற்றி வருதல் உவமை என்க. விரதம் - குறித்த காலத்தில் உதிப்பது, செல்வது, மறைவதாகிய நியமம். சரதம் - அக்கினிக்குக் கூறிய சத்தியம். தாவகம்-வனம். பாவகன்-அக்கினி.

27. பற்குனன் - பல்குநன்; பங்குனி உத்தரத்திற் பிறந்தவன்; அர்ச்சுனன். மூரி-பெருமை. சூடிகா மகுடம்-சுடிகையாகிய மகுடம்; சிரசு உந்தி உடைத்தான் எனக் கூட்டுக. உந்தி-தள்ளி. வாள்-பிரகாசம். உம்மைகள் எண்ணுப் பொருளன.

28. தமனியசிலை – மேருமலையாகிய வில். வெள் ஊர்தியான்- சிவபெருமான். வெள் ஊர்தி-ரிஷபவாகனம். வலாரி-இந்திரன்; வலம் என்னும் அசுரனைக் கொன்றவன்.

29. புகையால் வடிவம் சுரந்திடும் புயல்கள் - புகையினால் நிறம் மிகும் மேகங்கள். ஈர் இரு மருப்பு பொருப்பு – நான்கு தந்தங்களையுடைய ஐராவத மென்னும் யானை; இதில் பிராசநயங் காண்க.

30. ஏ அகவிருத்தச் செவ்வியின் தனு - அம்பினை தன்னிடத்திலுடைய இந்திரன் வில்; 'விருத்தச் செவ்வி' என்பதற்கு பெரியோர்களாற் கேட்கப்படுபவன்; அல்லது பெரியோர்களிடத்தில் விஷயங்களைக் கேட்பவன் என்பது பொருள்; இதற்கு வட்டமான அழகிய என்ற பொருள், சிறவாது. சேவகம்-வீரம். நா-அக்கினியின் எழுவித நாக்களையும். விதிர்த்தல்-அசைத்தல். சலதரசஞ்சலா சாலம்-மேகத்திலுண்டாகும். மின்னற் கூட்டங்கள். சலதர சஞ்சலா சாலம் வளைந்து கொண்டெழுந்த வென்க.

31. சூறிய இமையோர் - சூழ்ந்த தேவர்கள். நகை, வீரம்பற்றி எழுந்தது. துந்துபி - தேவர் வாத்தியம். ஊறிய புவனம் - சுரந்துள்ள நீர். பவனவேகம்-வாயுவேகம்.

32. தோயம் - நீர். மேகத்திற்குப் புகை, காற்று, நீர், நெருப்பு நான்கும் வேண்டு மென்க; அதனாலேயே, ஈரிரு பொருள்களும் பிரிந்தான் மாமுகிலெனும் பேரெங்குளது என்றான்; நெருப்பினின்றும் நீர் தோன்றுதலால், தோயமும் எமதே என்றான். அக்கினி, வாயு தோழன் என்பதை, மருச்சகன், காற்றின் சகாயன் என அக்கினிக்கு வழங்கும் பெயராலறிக.

33. கனங்கள் - மேகங்கள். எங்கள் காண்டவம் என்றது, அது தங்கள் தலைவன தென்னும் உரிமைபற்றி.

34. தாலு-நாக்கு. அருக்கன்-சூரியன். வேலை-கடல்.

**35.** சோனை அம் சருவையால்-விடாமழை பெய்யும் சோனு மேக மாகிய நெய்த்துடுப்பால். ஆகுதி - யாகாக்கினியில் பெய்யும் நெய் முதலிய பொருள்கள். பெய்தமழை, அக்கினியின் தாகத்தைத் தணித்ததன்றி அவனைத் தணித்திலது என்பது கருத்தாகக் கொள்க.

36. ஏவினுல் விலக்கி - அம்பினுல் தடுத்து. கவிகை-குடை; சரக் கூடம். பரவை-கடல்; பரந்தது என்பது பொருள்.

38. மதலை-பிள்ளை; அர்ச்சுனன். வாளிகளாற்கண்ட-அம்புகளாற் செய்த. சண்டம்-வலிமை. தாரை, தூணங்கள் போன்றன வென்க.

39. கூயினர் - கூவினர்களாய்; முற்றெச்சம். சாயக மண்டபம் - சரக்கூடம்; (சாயகம் - அம்பு). தம்மிறைவனுகிய இந்திரனது தோழனுதலால் தக்ககனை விண்ணவர் தேடினர் என்க. அவன் தன் மெல்லியல் - அத் தக்ககன் மனைவி; அன்மொழித் தொகை. மகவு-குட்டி. உம்-இசை நிறை. சென்னியை அம்பினுல் துணித்து வீழ்த்தினுன் என்க. உரக கன்னி - நாககன்னி. தனக்குள்ள நாகர் உறவையும் கருதாது அக்கினிக் களித்த வாக்கையே பெரிதாகக் கருதினு னென்பார், ஈண்டு அர்ச்சுனனை உரகர் கன்னியைத் திருமணஞ் செய்தானென்று கூறினுர். ஈற்றடியில் எதுகை நயங்காண்க. செக்கனல்-செங்கனல்; விகாரம்

40 மருவு அயில் - பொருந்திய கூர்மையுடைய; அயில் மருவு என இயைப்பினுமாம். சதகோடி-வச்சிராயுதம்; நூறுமுனையுடையது என் பது பொருள். தோழன் சிறுவன்-தக்ககன் புத்திரனுகிய அச்சுவ சேனன். மகவான் - இந்திரன். உடன்றிலன் பகைத்துச் சுட்டானில்லை.

41. வாயொடு - தலையுடனே; வாய்-ஆகுபெயர். அலமரும்-மனஞ் சுழலும். வீடுகண்டுழி - விடுவித்தபோது; வீடு-முதனிலை திரிந்த தொழிற் பெயர். வாரிதங்கள்-மேகங்கள். அடுக்கு, பன்மையில் வந்தன.

42. தீரமால்-வலியமைந்த இந்திரன். வீடு-விடுதல். பாரம்-பெரிய. மாசுணம்-அச்சுவசேனனென்னும் பாம்பு. சூரன்மா மதலை-சூரியன் புத்திர னுகிய சிறந்த கர்ணன். சரணமே அரணம்-பாதமே பாதுகாவல்; ஏகாரம், தேற்றம்.

43. ஒருவயின் (உம்) - ஒரு இடத்திலும்; முற்றும்மை தொக் கது. வேழம் மாமுகம்-யானையின் மத்தகத்தில். யாழ, அசைநிலை. மாதிரம்-திசை.

44. சாலம்-கூட்டம். திளைத்து - நெருங்கி. சாலம் - அணிவகுத்த படைவகுப்பின் கூட்டம். உருத்து-கோபித்து. ஏக சாபம்-நிகரில்லாத வில். பகடு-யானை.

45. சிரங்களாய் - தலைவராய். முப்பத்து மூவர் - மருத்துவரிருவர், வசுக்களெண்மர், உருத்திரர் பதினொருவர், சூரியர் பன்னிருவர் என்க; இங்கு முப்பத்து மூவர் என்றது, அட்டவசுக்களுள் பீஷ்மனாக அவதரித்த பிரபாசன் நீங்கலாக; இதனை, கீழ் 48-ஆம் செய்யுளால் அறிக. வாகம்-வாகனம். அணிந்தார் - அணிவகுத்தார். கொல், ஐயம். மனிதர் இருவர் - கிருஷ்ணார்ச்சுனர். விபுதர்-தேவர்.

46. தச்ச-தைத்த; போலி, இழந்து-இழக்க; எச்சத்திரிபு. தனித் திகிரி-ஒற்றைச் சக்கரம். மகம்-தக்கன் செய்த வேள்வி. அருக்கன் - பிரதான சூரியன். அருக்கர்-வைகர்த்தன் முதலிய ஏனைய சூரியர்கள் இங்கு தக்கன் வேள்வியில் வீரபத்திரக் கடவுளால் சூரியன் பற்கள் உடைக்கப்பட்டன என்ற புராண கதையை அறிக.

48. புண்ணியன் - பீஷ்மன். யாய்-தாய். நிற்பரோ, ஓ-எதிர்மறை. ஆயுர் வேதியர்-தேவ மருத்துவர்.

49. கணம்-உயிர்க் கூட்டம். மதியும்-குபேரனும்; மதியின் பெயருள் ஒன்றாகிய சோமன் என்னும் பெயர் குபேரனுக்குள்ள தொடர்பு பற்றிக் குபேரனை மதி என்றார். மதி முடித்தவன்-மதி முடித்தலாகிய சிவ சின்னமுடைய ஈசானன். அரக்கன்-நிருதி.

50. சொல் மழை-செய்யுளாகிய மழை. கொங்கர் பூபதி-கொங்கர் குலவரசனாகிய வரபதியாட் கொண்டான்; இவன் இப்பாரதத்தைப் பாடுவித்தோன். பொருந்தலர் போல - அடைக்கலமா யடையாதவர் போல. களமா முகில்-ஏழுவகை மேகங்களுள் ஒன்று. உம்மை-சிறப்பு. கடவுளர்த் துறந்தவன் - தேவர்களை ஒட்டிய அர்ச்சுனன். வெளிறி - (அச்சத்தால்) வெளுத்து.

51. இடித்துவசம்-இடிக்கொடி; இது இந்திரனுக்குரியது. காயம்-ஆகாயம் இல்கடவுள்-சரீரமில்லாத கடவுள்; அசரீரி. கடவுள் நாயகன்-இந்திரன். பரிவு-அன்பு. நவைதீர்-பகையாகிய குற்றந் தீர்கின்ற. 'அத்தந்தை' இதில் அ-உலகறிசுட்டு. மூன்றாமடியில் மடக்கென்னும் சொல்லணிகாண்க.

52. குரு நிலம்-குரு க்ஷேத்திரம். குமரன்-தக்ககன் மகன். தூமக் கொடியன்-அக்கினி. நரனு நாரணனும் நமர்களில் இருவர் எனக் கூட்டுக. கிருஷ்ணார்ச்சுனர்களாகிய இவர்கள் மனிதர்களல்லர் என்பது கருத்து.

53. இரவி-சூரியன். சுரகணம்-தேவர் கூட்டம். இரவி முன்னிருள் போல் என்ற உவமையால், இந்திரன் தோற்றானென்பது பெறப்படும். குறித்தான்-ஊதினன்.

54. மதிகுல நிருபர்-சந்திரகுல அரசராகிய வசுதேவன், சித்திராங்கதன் என்போர். கடிமணம் - கல்யாணம். மவுலி - முடி.

55. மாசுணத்தரசன் - தக்ககனது. மந்திரம்-கோயிலே. அமைத்து அவ்வனத்திடை எனப் பிரிக்க. மயன் - தேவதச்சன். மால் கருணை செய்தனன் - (அர்ச்சுனன் அபய மீந்தமையால் மயனை சக்கரப் படையாற் கொல்லக் கருதிய) கண்ணன் கொல்லாது அருள் கூர்ந்தனன்.

56. வெங்கண்டு - புறங்காட்டச் செய்து. பெருந்தவன்-மந்தபால முனிவன். சிறகர்-சிறகு, போலி. குரீஇ இனம்-ஜாதகப் பறவைக் குஞ்சுகள்; இக் குஞ்சுகளை எரிக்கலாகாதென்று முன்னரே அம்முனிவன் வரம்பெற்றமையால் அக்கினி இவற்றை எரிக்கவில்லை. கனம்-மேகம்.

57. பிற-வேறு; 'பிற புகல்வது என்' என்க. ஆசி - வாழ்த்து. நோய் நீங்கிய மகிழ்ச்சியால் உல்லாச நடையாற் சென்றான் என்பார், 'அசைந்து போயினு' னென்றார்.

58. காவலரும்-நர நாராயணராய அர்ச்சுனன் கிருஷ்ணன் என்னும் இருவரும்; தமரமும் முரசும்-ஒலியையுடைய வீர முரசு, தியாக முரசு, நியாயமுரசு என்னும் மூன்று முரசங்களும். தழங்க-முழங்க.

VII.

# திருவிளையாடற் புராணம்

## மண்சுமந்த படலம்

1. மறைநாடரும் பொருள் - சிவபெருமான். பதம் சுமந்த முடியார் - பாதங்களை வணங்கிய மாணிக்க வாசகர். அடவி - காடு. சுரநதி - ஆகாய கங்கை. விடையவன் - காளையை வாகனமாக உடையவன்.

2. ககனம்-விண். நகருக்குக் கலமும் வையையின் பெருக்குக்குக் கடலும் உவமை. உட்க - அஞ்ச. மறவேலினுன்—அரிமர்த்தன பாண்டியன். ஓத நீர்—வெள்ள நீர். கதம்-கோபம்.

3. கோல் - அளவுகோல்.

4. தொடுங் கருவி — தோண்டுங் கருவி. பலாலம் - வைக்கோல். குழாம்-கூட்டம். சாலம்—கூட்டம்; வரிசை.

5. பரி நிறுத்தல்-குதிரை மரங்களை (குறுக்குச் சரங்களை) நிறுத்துதல். அரவு உருட்டல்-பாம்புபோல வைக்கோலை உருட்டுதல்.

6. அன்னை என்றது வைகையை. ஆறுக — தணிக. மாதிரம் — திசைகள்.

7. வந்தி - பிட்டுவாணிச்சி; இவள் பெயர் செம்மனச் செல்வி என்று பிறநூல்கள் கூறும்; வந்தி என்ற சொல் மலடி என்பதைக் குறிக்கும்.

8. அன்பரின்—அன்பரைப்போல. பேறு-பாக்கியம். தாய் இலார்-சிவபெருமான். தமியள்-தனிமையானவள்.

9. முக்கட் கரும்பு - மூன்று கண்களையுடைய சிவபெருமான்; மூன்று கணுக்களை உடைய கரும்பு என்றது தொனி. தேறல்-தேன்; சிவபிரான். ஆலவாய்-மதுரை.

10. ஆற்ற-மிகவும். கூடல்—மதுரை. உன்னு—நினைத்து.

11. இடும்பை—துன்பம். எள் துணையேனும்-எள்ளளவும்.

12. தமர்-தம்மவர்; உறவினர்.

15. குறட்டு-பூதத்துக்கு. குடிஞை-ஆறு. அறல்-கருமணல். காண்பான்-காண. கயல் நெடுங்கணாள்-மீனாட்சி. போதமூர்த்தி-ஞானவடிவானவன்.

16. அசைத்து – கட்டிக்கொண்டு. இண்டை - தலையில் அணியும் கண்ணி. எழு-தூண். படை-மண்வெட்டி.

17. ஆறுமறை..............முடியார் – சோமசுந்தரக் கடவுள். கனுழ்............படிந்தயர்வாள் - வந்தி.

18. மறைச் சிரமுடி - வேதத்துச்சி.

20. காளை–காளைபோன்றவன்.

21. கரையில்லார் – அளவறிய முடியாதவரான சிவபிரானார்.

22. சிக்கு=சிக்கம்–உறி. பொதி-மூட்டை. புள்ளி உடைத்துகில்-புலித்தோல்.

25. தந்தி-யானை.

26. சுமடு-சும்மாடு.

27. மைவண்ணன்-திருமால். செப்புனல்-இரத்தம்.

28. குரு - பிரகாசம், கூடையணை - கூடையாகிய அணை.

29. ஆலநெடுந்தரு-கல் ஆலமரம். சனகாதி முழுதுணர்ந்த மெய்த்தவர்-சனகர், சனந்தனர், சனாதனர், சனற் குமாரர் என்னும் நால்வர்.

30. பராக்கு-விளையாட்டு; அசிரத்தை.

31. கால-கொட்ட.

32. கொடும்புறம் – வளைந்த முதுகையுடைய. இடம் படு - விசாலமான.

33. கொடிறு-கன்னம்.

34. ஆர்த்து-ஒலித்து.

35. அகன் கரை - விசாலமான கரை. தொடுவர்–தோண்டுவர்.

37. கொட்டு-மண்தோண்டு கருவி. ஆப்பு-சிறு முளை. மாறு ஒச்ச நோக்கி - (வேலை வாங்குபவர்) மாற்றைக்கையில் வைத்துக்கொண்டு ஓச்சுவதைப் பார்த்து.

38. தமையும் நீத்து - தன்னறிவையும் துறந்து. தத்துவம்-உண்மை நிலை.

40. அட்டம் – குறுக்கு. திங்கள் ஆயிரம் தொழுதாள் - ஆயிரம் பிறை கண்டவள்; ஒருவர் பிறந்து ஆயிரம் தடவை பிறை தோன்றியிருக்குமானால் அவரை ஆயிரம் பிறை கண்டவர் என்பர்; வயது முதிர்ந்தவள் என்றபடி.

41. கந்தர்ப்பன் - மன்மதன். வாளா-சும்மா.

42. தம்மைத்தாம் உணர்ந்தவர்க்கே உரிய பெருமை தோன்றும்படி. மாறுகொண்டு–வளார் என்னும் மாற்றைக் கொண்டு.

43. மத்தன்–வெறியன். எத்தன்-வஞ்சகன். சித்தன்-சகல சித்திகளும் கைவந்தவன்.

44. பரணி-பாட்டு. வாடிய–பின் ஏழையாகிவிட்ட. இசைபட-புகழ் தோன்ற.

45. கரும்பன் - மன்மதன். இரும்பெரும் - ஒரு பொருட் பன்மொழி.

46. ஏல-ஏற்றுக்கொள்ளும்படி,

47. அடிகேள்-அடிகளே; ஆண்டவனே.

48. காண்டும்; டும்; தன்மைப்பன்மை விகுதி; எதிர்காலங் காட்டிற்று.

50. ஓகை-மகிழ்ச்சி. நோன்-வலிமை.

52. மண்தனை-மண்ணை.

VIII.

# பிருதுமன்னன் கதைச் சுருக்கம்

பிருது விஷ்ணுவின் அமிசம். இவன் அரசாண்ட காலத்தில் பூமி வளந்தராதிருந்ததால், பூமாதேவியைக் கொலைசெய்ய இவன் எழுந்தனன். ஆயுதபாணியாய் எழுந்த அரசனைக்கண்டு பூதேவி பசு உருக் கொண்டு ஓட, அரசன் தொடர்ந்து சென்றனன். பின்னர் பசு உருக் கொண்ட பூமாதேவி, அரசனைக் கோபியாதிருக்க வேண்டிக்கொண்டதுடன், கன்றும் பாத்திரமும் கொண்டு வேண்டிய வளத்தைக் கறந்து கொள்ளச் சொன்னாள். அந்தப்படி அரசன் மனுவைக் கன்றாக்கித் தன் கையைப் பாத்திரமாக்கி வளங்களைக் கறந்தனன். இருடிகள், பிரகஸ்பதியைக் கன்றாக்கி வேதமயமான பாலைக்கறந்தனர். தேவர்கள், இந்திரனைக் கன்றாக்கி அமிர்தங் கறந்தனர். அசுரர், பிரகலாதனைக் கன்றாக்கி மத்தியபானத்தைக் கறந்தனர். பின்னும் இம்முறையே காந்தருவர், சிரார்த்த தேவதைகள், சித்தர், வித்தியாதரர், கிம்புருடர், இராக்கதர், விசுவாவசு, கபிலர், மயன்முதலியவரைக் கன்றாக்கி வேண்டிய வளங்களைப் பெற்றனர். பிறகு பிரம்மாவர்த்தமென்கிற புண்ணிய க்ஷேத்திரத்தில் இவன் குமாரன் விசித்திரசுவன் அல்லது விசிதாசுவன் யாகம் செய்கையில் குதிரையைக் கவர்ந்து சென்ற இந்திரனை அரசன் மகன் தொடர்ந்துசென்று குதிரையைப் பிடித்துவந்தும், இந்திரன் மீண்டும் யாகத்தை மறுத்தது கண்டு, அரசன் கோபித்து இந்திரனைக் கொலை செய்யுமாறு எழுந்தனன். இருடிகள் "இந்தக்காலத்தில் கொலை ஆகாது; நாங்கள் இந்திரனை யாகத்தில் கொலை செய்கிறோம்.'' என்றனர். இதை அறிந்த பிரமதேவன் இருடிகளை மறுத்து அரசனை சமாதானப் படுத்தினன். பின் இவன் சநகர் முதலியவர்களால் யோகம் உபதேசிக்கப்பட்டு மனைவியுடன் தவமேற்கொண்டு காடடைந்து சுவர்க்கமடைந்தனன்.

---

IX.

# தேம்பாவணி

## வளன் சனித்த படலம்

### சூசை பிறந்த கதையை உரைப்பது.

1. தாவீதன் - தாவீதன் என்னும் அரசன். ஒன்னலார் - பகைவர். துளங்கினன் - விளங்கினன்.

2. மருளொடு - மிருதியால். தொடையல் - மாலே. பொறை - மலேயை ஒத்த.

3. படிந்து - வணங்கி. வேல் இலான் - வேல் ஆயுதம் இல்லாத வனகி. மிகை - வேதனே.

4. நாட்டிடை - சூதேய நாடு. சவுலாண்ட - சவுல் என்பவன் ஆண்ட. உறை - மழை. பொறை வழங்கிய - மலேகளில் நடமாடின.

5. சதுவிடா - அழியாத. மாலி - சூரியன். ஆலி - நீர்.

6. சிறைச்செயும் - ஒளிக்கும். வியன் - பருத்த. கதம் - கோபம். வெருவுற - அஞ்ச.

7. சீர்த்த - சிறந்த. தோர்த்த பாங்கினர் - தோற்ற பக்கத்தார். தொழும்பர் - அடிமைகள்.

8. உரியது - சரியாகிய. கதத்த - உக்கிரமான.

9. படை - சூதர்படை எல்லாம். கடுத்து - சினத்து.

10. அயரு - மயங்கின. அளிக்குவேன் - கல்யாணஞ் செய்து கொடுப்பேன்.

11. பகல் நாற்பதும் - நாற்பது நாளும். இரிந்த பின் - போன பின்பு. அண்ணர் - அண்ணன்மார். முரண் செய - சண்டை செய்ய.

12. எரியை ஈட்டலாமென - தீயைக் குவித்தது போலாகி. எழுந்து - (தாவீதன்) எழுந்து. ஆக்கிக் காட்ட - நிறைவேற்றிக்காட்ட. விளி - சாவு. விளிவு என்பது விளி எனக் கடைக்குறை ஆயிற்று.

13. நூங்கு - மிகவும். புகைந்த - சுக்கின.

14. சேடனே - பாலனே. பொன்ற - சாக. எவன் என்றான் - எம்மாத்திரம் என்றான்.

15. வேந்தல் - அரசன். பவம் - பாவம். படை - ஆயுதம்.

16. உளியம் - கரடி. வல்லியம் - புலி. கறங்கு - காற்றாடி,

17. விரியளாவு - விரிந்த. தான் - தாவீதன்.

18. ஐஞ்சிலை - ஐந்துகள். இரிந்த - (எதிர்த்து) ஓடுகின்ற. வேதியர் - குருக்கள். பிரிந்த கால் - பிரிந்த பொழுது.

19. குறுக - கிட்ட.

20. கரிமேல் - யானையை எதிர்த்து. உயிர்ப்பிட - ஒரு மூச்சு விட. மறுகி - சுழன்று.

21. மிடலது - வல்லமை, எல்வை - சமயத்திற்கு. வல் கையோடு - வலக்கைகொண்டு. ஒல் - பொருந்த. உடை - தன்னுடைய.

22. கல்லை - (கவண்மேற்) கல்லை. செல்லை ஒத்தன - மேகத்தைப் போல். நுதல் - (இராக்கதனது) கண்ணுதலை. எல்லை - சூரியன்.

23. புடையகத்தினில் - இடையில். புணர்ந்த - கட்டித்தூங்கிய.

24. வாள் முடி - விளக்கமாகிய முடி. பிலிற்றும் - பொழிந்த. இறையோன் - கடவுள்.

# திருக்குற்ருலக் குறவஞ்சி

## I

1. வான் கவிகள் - வானுலகிலுள்ள புலவர்.

2. ககனி சித்தர் - ஆகாயத்திற் செல்லும் சித்தர்கள். காய சித்தி- உடம்பு மருந்துகளினும [illegible] இருக்கும் செயல்.

4. வேணி - சடை.

5. கழங்கென - கழற்சிக்காயென்று. முத்தாடும் - முத்தை எறிந்து விளையாடும்.

6. கொம்பு - யானைத்தந்தம்.

7. வெடிக்கும் - மணக்கும்.

9. அம்புலி - சந்திரன். கவளம்-யானையினுணவாகிய உண்டை.

14. தென்மலை - பொதிய மலை.

15. முழை - குகை.

16. துயிலுமவர் - திருமால்.

17. கொழுநன் - முருகக்கடவுள்.

18. எல் - ஒளி.

20. செல்லினம் - மேகக்கூட்டங்கள். முழவுகொட்ட-மிருதங்கம் போலொலிக்க.

## II

5. செண்பகாடவித்துறை - சிவமது கங்கையிலுள்ள ஒரு இடம்.

6. கூட்டரவு - கூட்டம். விஞ்சை மூலிகை - மந்திரசக்தியைத் தரும் பச்சிலை.

7. கத்து - முழங்கும். இருக்கும் - வேதமும்.

8. பொங்கு மாகடல் - ஒரு தீர்த்தம்.

9. திரிவேணி சங்கம் – காசியிலுள்ள ஒரு தீர்த்தம்.

10. வடவருவி தங்கும் இந்திரசாபம் - வடவருவிலேயே மூழ்கு வார் கண்ணுக்கு, அவ்வருவியில் இந்திர தனுசுப்போலப் பல நிறங் காட்டும் ஒளி. கழுநீராய் - அரிசி கழுவியநீர்போலச் சிவந்து.

11. மதிட்சிகரம் - மதிலினுச்சி.

12. கொங்கு - வாசனை.

III

1. திறம் - உறுதிப்பொருள் (மோட்சமாகிய செல்வம்)

2. வீறு - பெருமை.

4. [illegible] கடவுள் (திரிகூடநாதர்). மந்திரியார் - [illegible] வாசகர். கொக்கு - குதிரை.

1. தரிகொண்டு தில்லை - தங்கவில்லை.

கொக்கு - மாமரமாகிய சூரபன்மன்.

சட்டியில் - ஒரு பாத்திரத்தில் (சஷ்டியாகிய ஆறுவது திதிநாளில்) சாறு - குழம்பு (திருவிழா) பிக்கு - பிசகு.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 111050
EGMORE, MADRAS-600 008